3

நேர்மையான தேசத்தை நோக்கி

நேர்மைத்திறன்மிகு பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டத் தொடர்

# அரச உத்தியோகத்தர்களுக்கான ஊழல் எதிர்ப்புப் பற்றிய ஒருநாள் பயிற்சி நிகழ்ச்சித்திட்ட வழிகாட்டல் கோவை

CIABOC

අල්ලස් හෝ දූෂණ චෝදනා විමර්ශන කොමිෂන් සභාව

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு

COMMISSION TO INVESTIGATE ALLEGATIONS OF BRIBERY OR CORRUPTION

# நேர்மையான தேசத்தை நோக்கி

நேர்மைத்திறன்மிகு பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டத் தொடர்

# அரச உத்தியோகத்தர்களுக்கான ஊழல் எதிர்ப்புப் பற்றிய ஒருநாள் பயிற்சி நிகழ்ச்சித்திட்ட வழிகாட்டல் கோவை

CIABOC

අල්ලස් හෝ දූෂණ චෝදනා විමර්ශන කොමිෂන් සභාව

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு

COMMISSION TO INVESTIGATE ALLEGATIONS OF BRIBERY OR CORRUPTION

# அரச உத்தியோகத்தர்களுக்கான ஊழல் எதிர்ப்புப் பற்றிய ஒருநாள் பயிற்சி நிகழ்ச்சித்திட்ட வழிகாட்டல் கோவை

ISBN - 978-624-5040-17-9

**முதலாம் பதிப்பு - 2020 ஆகஸ்ட்**

வெளியீடு
இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு
இலக்கம் 36, மலலசேகர மாவத்தைகொழும்பு - 07
தொலைபேசி : 0112596360/1954
மின்னஞ்சல் : ciaboc@ureka.lk
வலைதளம் : www.ciaboc.gov.lk

**அச்சிடல்**
SWIES PRINT PACK
124 A, Negombo Road, Kadana.

சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவர் நிறுவனத்தின் (USAID) மூலம் நடைமுறைபடுத்தப்படுகின்ற இலங்கையின் சனநாயக ஆட்சி மற்றும் வகைப் பொறுப்பு என்பவற்றை வலுவூட்டுவதற்கான கருத்திட்டத்தின் (SDGAP) ஊடாகக் கிடைக்கப்படுகின்ற அமெரிக்க மக்களின் நன்கொடையின் கீழ் இப்பிரகடனம் வெளியிடப்படுகின்றது. மேலும், இவ்வழிகாட்டல் கோவையின் உள்ளடக்கமானது இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பொறுப்பாக அமைவதோடு சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவர் நிறுவனத்தின் அல்லது அமெரிக்க ஐக்கியக் குடியரசின் கருத்துரைகளை எவ்வகையிலும் பிரதிபலிக்கவில்லை என்பது கருத்திற்கொள்ளப்படுதல் வேண்டும்.

9 786245 040179

# இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் செய்தி

"ஊழல் என்பது ஒரு பனி உருண்டையைப் போன்றது. அது உருண்டோட ஆரம்பிக்கும்போது கட்டாயமாக பெருக்கமடையும்" ("Corruption is like a ball of snow" once it's set a rolling it must increase") என 19ஆம் நூற்றாண்டில் உயிர்வாழ்ந்த ஓர் ஆங்கில எழுத்தாளராகிய சாள்ஸ் கோல்டன் கூறியுள்ளார். மனித நாகரீகத்தின் ஆரம்பக் காலகட்டம் வரையிலான பழமைவாய்ந்த வரலாறுக்கு உரிமைகோரும் ஊழல் எனப்படும் நிகழ்வானது கடந்த பல்லாயிரம் வருடங்களிலான காலப்பகுதி பூராகவும் உலகின் முன்னேற்றமடைந்த மற்றும் முன்னேற்றமடையாத பல நாடுகளைப் பற்றிப்பிடித்து வியாபித்து வருவதனை ஊழலின் அளவினை அளவிடுகின்ற சர்வதேச சுட்டிகளின் பிரகாரம் காணமுடிகின்றது.

ஆயினும் இன்றைய உலகின் சில நாடுகள் ஊழல் எனப்படும் கரியநிற பனி உருண்டை உருண்டோடிச் செல்வதனைத் தடுப்பதற்காக மட்டுமன்றி அதனை வெற்றிகரமாக கரையச்செய்து ஊழல் என்பது தடுக்கக்கூடிய ஒரு நிகழ்வு என்பதனை செயலின்மூலம் நிரூபித்துக்காட்டுவதற்கும் தற்போது சாதுரியம் பெற்றுள்ளன.

பொது வாழ்வின்மீது அழிவுகரமான வகையில் தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்ற ஊழலைத் தடுப்பதற்காக முயற்சிகளை மேற்கொண்டுள்ள பல்வேறு மட்டங்களைச் சேர்ந்த ஊழல் எதிர்ப்பாளர்கள் கடந்த காலகட்டம் முழுவதுமாக ஊழல் எனும் பேரழிவினை மட்டுப்படுத்துவதற்குத் தேவையான நிறுவன மற்றும் சட்டம்சார் கட்டமைப்புகளை வலுவூட்டுதற்காகவே அதிக முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.

ஆயினும் நவீன உலகில் ஊழலைத் தடுப்பதில் வெற்றியடைந்துள்ள நாடுகள் தமது வெற்றிக்கான உதாரணங்களின் மூலம் ஊழலைத் தடுப்பதன் பொருட்டு நிறுவன மற்றும் சட்டஞ்சார் கட்டமைப்புகளை வலுவூட்டுவது மட்டும் வெற்றிகரமான தீர்வாக அமையமாட்டாது என்பதனைச் சுட்டிக்காட்டுகின்றன. ஊழலை வெற்றிகொள்வதற்குத் தேவையான நிறுவன மற்றும் சட்டஞ்சார் கட்டமைப்புகளை வலுவூட்டுவதற்குச் சமாந்தரமாக பொதுமக்களை ஊழல் தொடர்பான விழிப்புடன்கூடிய, கூருணர்வுமிக்க மற்றும் செயல்திறமுடைய ஒரு குழுவினராக மாற்றியமைப்பதனை இலக்காகக்கொண்ட கல்விசார் செயன்முறையொன்று இருப்பதன் தேவையானது தற்போது உலகம் முழுவதிலும் ஊழல் எதிர்ப்பு போராட்டங்களின் ஒரு முதன்மை விடயமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

"இலங்கையை உலகின் தலைசிறந்ததொரு தேசமாக மாற்றியமைப்பதன் பொருட்டு நேர்மையான உள்ளம்கொண்ட அபிமானத்துடன்கூடிய இலங்கைச் சந்ததியொன்றை உருவாக்குதல்" என்பதனை மூலமுன்மாதிரியான அபிலாஷையாகவும் நோக்காகவும் கொண்டு வகுக்கப்பட்டுள்ள இலங்கையிலிருந்து இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்கான தேசிய செயற்பாட்டுத்திட்டம் தயாரிக்கப்படுகின்ற வேளையிலும் ஊழலுக்கு எதிரான போராட்டத்தின் பொருட்டு பெருந்திரளான மக்களை பங்கேற்கச் செய்வதன் மீது முதன்மைக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. எதிர்வரும் ஐந்தாண்டு காலப்பகுதியில் (2019-2023) நடைமுறைப்படுத்தப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள மேற்படி செயற்பாட்டுத் திட்டத்தின் இரண்டாவது உபாயமார்க்கமாக அமைந்திருப்பது விழுமியம்சார் கல்வி மற்றும் சமுதாய ஈடுபாடு என்பதாகும். திட்டத்தின் ஏனைய உபாயமார்க்கங்களாக தடுப்பு நடவடிக்கைகள், சட்ட அமுலாக்கல் நிறுவனங்களின் நிறுவன வலுப்படுத்தல், சட்ட மற்றும் கொள்கை மறுசீரமைப்புகள் என்பன இனங்காணப்பட்டுள்ளன.

விழுமியம்சார் கல்வி மற்றும் சமுதாய ஈடுபாடு என்பதன்கீழ் சிறுவர்களுக்கும் இளைஞர்களுக்கும் நேர்மைத்திறன்மிகு கல்வி வழங்கப்படுதல், பொதுத் துறையின் விழிப்புணர்வை மேம்படுத்துதல், வகைபொறுப்புத் தொடர்பில் மக்களின் ஆர்வத்தை ஏற்படுத்துதல் போன்ற பல்வேறுபட்ட பல செயற்பாடுகள் இனங்காணப்பட்டுள்ளன. அரச உத்தியோகத்தர்களுக்கு மத்தியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 400 உத்தியோகத்தர்களை இலஞ்சம் - ஊழல் விடயம் தொடர்பான பயிற்றுவிப்பாளர்களாகப் பயிற்றுவித்து அவர்களினூடாக அரச சேவையிலுள்ள 25% வீதத்துக்கும் மேற்பட்ட குழுவினரை ஊழல் எதிர்ப்புத் தொடர்பில் விழிப்புணர்வுடன்கூடிய குழுவினராக மாற்றியமைத்துக்கொள்வதற்கான இலக்கும் தேசிய செயற்பாட்டுத் திட்டத்தின் உபாயமார்க்கங்களுக்கு மத்தியில் காணப்படுகின்ற

ஒரு முதன்மை அம்சமாகும். மேற்படி இலக்கினை அடையும் நோக்கத்துடன் ஊழலுக்கு எதிரான ஒருநாள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை இலக்காகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள அரச உத்தியோக பயிற்றுவிப்பாளர்களுக்கான வழிகாட்டல் கோவை ஆனது இலங்கையிலிருந்து இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்காக அரச உத்தியோகத்தர்களை விழிப்பூட்டுவதற்கான பணியின் நிமித்தம் பேருதவியாக அமையுமென நம்புகின்றோம்.

இலங்கையிலிருந்து இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்கான தேசிய செயற்பாட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக நிதி அனுசரணை மற்றும் தொழில்நுட்ப ஆதரவு என்பவற்றை வழங்கி எமக்கு உதவி ஒத்தாசை நல்கும் சர்வதேச அவிருத்திக்கான அமெரிக்க முகவர் நிறுவனத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்படுகின்ற இலங்கையின் சனநாயக ஆட்சி மற்றும் வகைப்பொறுப்பு என்பவற்றை வலுவூட்டுவதற்கான (SDGAP) கருத்திட்டத்திற்கும், இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் சிரேஷ்ட உத்தியோகத்தர்களின் வழிகாட்டலின் கீழ் இந்நூலினைத் தயாரித்த SDGAP நிகழ்ச்சித்திட்டத்தின் ஓர் ஆலோசகராகிய திரு. ஆனந்த தர்மப்பிரிய ஜயசேகர அவர்களுக்கும், குறிப்பிட்ட பணியின் நிமித்தம் பங்களிப்பு நல்கிய சகலருக்கும் எமது நன்றி உரித்தாகும்.

# அரச உத்தியோகத்தர்களுக்கான ஊழல் எதிர்ப்புப் பற்றிய ஒருநாள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்
## பயிற்றுவிப்பாளர்களுக்கான வழிகாட்டல் கோவை

| வரிசைப்படுத்தல் | பக்கம் |
|---|---|
| நுழைவாயில் | 07 |
| வழிகாட்டல் கோவையை அறிமுகம் செய்தல் | 11 |
| பயிற்சிக்கான கருவிகளும் வளங்களும் | 13 |
| பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குசெய்தல் | 15 |
| அமர்வுத் திட்டம் மற்றும் உள்ளடக்கம் | 19 |
| **ஆரம்ப அமர்வு – நிகழ்ச்சித்திட்டத்தினை அறிமுகம் செய்தல் மற்றும் ஒருங்கிணைவு** | **21** |
| **இரண்டாம் அமர்வு – ஊழலை இனங்காணுதல்** | **25** |
| ஊழல் என்றால் என்ன? | 41 |
| ஊழலின் பல்வேறுபட்ட வடிவங்கள் | 46 |
| ஊழலின் காரணமாக இழக்கப்படும் தேசிய சொத்துக்களும் அதன் விளைவுகளும் | 53 |
| ஊழலுக்கு எதிரான சர்வதேசம் | |
| ஊழலை வெற்றிகொள்ளல் - ஹொங்கொங் முன்மாதிரி | 55 |
| **மூன்றாம் அமர்வு - ஊழலுக்கு எதிரான இலங்கையின் அணிதிரள்வு** | **29** |
| ஊழலைத் தடுக்கும் சட்டதிட்டங்கள் | 59 |
| இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் தத்துவங்களும் செயற்பொறுப்பும் | 63 |
| **நான்காம் அமர்வு - ஊழலை இல்லாதொழிக்கும் இலங்கையின் திட்டங்கள்** | **31** |
| நேர்மைத்திறன் இனங்காணப்படுதல் | 67 |
| அன்பளிப்பு விதிகள் பற்றிய ஏற்பாடுகள் | 71 |
| நலன்களுக்கு இடையிலான முரண்பாடு பற்றிய விதிகள் | 70 |
| ஊழலுக்கு எதிரான தேசிய செயற்பாட்டுத்திட்டம் | 72 |
| **ஐந்தாம் அமர்வு - ஊழல் அபாய நேர்வு நிலைமைகளை இனங்காணுதல்** | **35** |
| **இறுதி அமர்வு** | |
| **சமர்ப்பணங்கள் மற்றும் துண்டுப்பிரசுரங்கள்** | **37** |
| **இணைப்புக்கள்** | |
| நிகழ்ச்சித்திட்டத்தின் நிகழ்ச்சிநிரல்(மாதிரி) | 82 |
| செயலமர்வு பற்றிய அறிக்கை | 84 |
| பின்னூட்டல் படிவம் | 86 |

# நுழைவாயில்

## 1.1 பின்னணி

இலங்கையிலிருந்து இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதன் பொருட்டு தேசிய திட்டமொன்றைத் தயாரிப்பதற்காக 2017 அக்டோபர் 24 ஆம் திகதி அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்ததோடு அதன்பிரகாரம் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் அனைத்துத் தரப்பினர்களினதும் பங்கேற்புடன் தயாரிக்கப்பட்ட தேசியத் திட்டத்தின் பொருட்டு 2019 பெப்ருவரி 05 ஆம் திகதி அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்ததோடு அதன்பிரகாரம் பொது நிருவாக அமைச்சின் ஆதரவோடு 2019 மார்ச் 18 ஆம் திகதி தொடக்கம் அத்தேசிய செயற்பாட்டுத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

ஊழலுக்கு எதிரான திட்டத்தின் இரண்டாவது உபாயமார்க்கமாகிய “விழுமியம்சார் கல்வி மற்றும் சமுதாய ஈடுபாடு” என்பதன் கீழ் “பொதுத் துறையின் விழிப்புணர்வை மேம்படுத்துதல்” எனும் தலைப்பில் அரச உத்தியோகத்தர்களை விழிப்பூட்டுவதற்கான பொறுப்பினை இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு கொண்டுள்ளது. இப்பொறுப்பினை நிறைவேற்றுவதன் நிமித்தம் அரச உத்தியோகத்தர்களை விழிப்பூட்டுவதற்காக இந்நிகழ்ச்சித்திட்டம் திட்டமிடப்பட்டுள்ளது.

**பொதுத் துறையின் விழிப்புணர்வை மேம்படுத்துதல்**
பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கான நேர்மைத்திறன்மிகு மொடியூல்கள், அடிப்படை நிகழ்ச்சித் திட்டங்களுக்கான நேர்மைத்திறன்மிகு நன்னெறிகள், தொழில்களுக்கான விழிப்பூட்டல்கள், வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகளுக்காக இலஞ்சம் சம்பந்தப்பட்ட வினாக்கள், நிறுவனங்களுக்கிடையிலான போட்டிகள் மற்றும் அனுபவ பரிமாற்று நிகழ்ச்சித்திட்டங்கள். - இலங்கையிலிருந்து இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்கான தேசிய செயற்பாட்டுத் திட்டம்-43 ஆம் பக்கம்.

## 1.2 பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் தொனிப்பொருள்

நேர்மையான இலங்கை (இலங்கையிலிருந்து இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்கான தேசிய செயற்பாட்டுத் திட்டத்தின் தொனிப்பொருள்)

## 1.3 பயிற்சி நிகழ்ச்சித்திட்டத் தொடரின் நோக்கங்கள்

1. அரச உத்தியோகத்தர்களுக்குள் ஊழல் எதிர்ப்பு மனோபாவங்களை விருத்தி செய்தல். (மனோபாவ விருத்தி)
2. ஊழலும் அதன் விளைவுகளும் தொடர்பாக அரச உத்தியோகத்தர்களுக்குப் புரிதலை

வழங்குதல். (அறிவு விருத்தி)

3. ஊழலை இல்லாதொழிப்பதற்கான முறைகளின் பயன்பாடு பற்றிய ஆற்றல்களை விருத்தி செய்தல். (திறன் விருத்தி)
4. ஐக்கிய நாடுகள் தாபனத்தின் ஊழலுக்கு எதிரான சமவாயத்தின் (UNCAC) ஊழலைத் தடுத்தல் எனும் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான அரச துறையின் சகல நிறுவனங்களையும் இணைத்துக்கொண்டு இடைத்தொடர்புகளை ஏற்படுத்துதல்.

## 1.4 ஒட்டுமொத்த பயிற்சித்திட்டத் தொடரின் இலக்குகள்

ஒரு வருட காலப்பகுதியில் ஒட்டுமொத்த அரச ஊழியர்களில் நான்கில் ஒரு பங்கினரை இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான விழிப்புணர்வுடன்கூடியவர்களாக மாற்றியமைத்தல்.

## 1.5 அரச உத்தியோகத்தர்களைப் பயிற்றுவிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டத் தொடர்

5. ஊழல் எதிர்ப்புப் பற்றிய ஒருநாள் பயிற்சிச் செயலமர்வு நடத்தப்படுதல் தொடர்பாக மாகாண மட்டத்தில் / அமைச்சுக்கள் மற்றும் சுயாதீன ஆணைக்குழுக்களின் பிரதிநிதிகள் என்ற வகையில் முறையாக பயிற்சிபெற்றுள்ள 400 பயிற்றுவிப்பாளர்கள் இப்பயிற்சிக் கையேட்டினைப் பயன்படுத்தி பயிற்சிச் செயலமர்வுத் தொடரினை திட்டமிட்டு மேற்கொள்வார்கள். ஒரு நிகழ்ச்சித்திட்டத்தில் பங்கேற்கச் செய்யப்படும் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 50 ஆகும். அதன்பிரகாரம் ஒட்டுமொத்த பயிற்றுவிப்பாளர்களின் சேர்மமானது ஒரு பயிற்றுவிப்பாளர் தலா 20 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தும் வகையில் 8000 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தி 400000 அரச உத்தியோகத்தர்களுக்கு ஊழல் பற்றிய அறிவு மற்றும் பயிற்சி என்பவற்றை வழங்க எதிர்பார்க்கின்றது.

## 1.6 பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்கான பங்கேற்பாளர்கள் தெரிவுசெய்யப்படுதல்

சம்பந்தப்பட்ட நிறுவனத் தலைவர்களின் விதப்புரையின் பிரகாரம் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தில் பங்கேற்பதற்காக ஊக்கம் காட்டுகின்ற எந்தவொரு அந்தஸ்திலுமுள்ள அரச உத்தியோகத்தர்கள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் பங்கேற்கச் செய்யப்படுவதற்கு தகைமை பெறுவார்கள்.

## 1.7 பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்கான பயிற்றுவிப்பாளர்கள் / வளவாளர்கள்

6. பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்கான பயிற்றுவிப்பாளர்கள்/வளவாளர்கள் ஊழலுக்கு எதிரான பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவிப்பதற்கான மூன்றுநாள் செயலமர்வில் (TOT) பங்கேற்று அப்பயிற்சியினை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்துள்ள பயிற்றுவிப்பாளர்களாக இருத்தல் வேண்டும். ஒரு செயலமர்வில் இரண்டு பயிற்றுவிப்பாளர்களேனும் பங்கேற்பது பொருத்தமாகும்.

7. பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் பொருட்டு இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்களால்/CIABOCஇனால் விதப்புரை செய்யப்படுகின்ற குறிப்பிட்ட விடயம் பற்றிய பரந்த அறிவினைக்கொண்டுள்ள வேறு பயிற்றுவிப்பாளர்களையும் தேவையின் பிரகாரம் பங்கேற்கச்செய்ய முடியும்.

## 1.8 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கான மதிப்பீட்டாய்வு

8. ஒவ்வொரு பயிற்சி நிகழ்ச்சித்திட்டமும் மதிப்பீடாய்வுக்கு உட்படுத்தப்படுதல் வேண்டும். பங்கேற்பாளர்களுக்கு வழங்கப்படுகின்ற மதிப்பீட்டுத்தாள் ஒன்றின் மூலம் அதனை மேற்கொள்ள முடியும். பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் பற்றிய சுருக்கமான அறிக்கையொன்றுடன்

குறிப்பிட்ட மதிப்பீட்டாய்வுக்கான இறுதிப் பெறுபேறுகளை CIABOCஇற்கு அனுப்பிவைப்பதற்கு பயிற்றுவிப்பாளர்கள் பொறுப்புப் பார்த்துக்கொள்ளல் வேண்டும். (இணைப்பு - 02ஐ பார்க்கவும்)

ஊழலுக்கு எதிரான பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவிப்பதற்கான மூன்றுநாள் செயலமர்வினை வெற்றிகரமாக பூர்த்திசெய்துள்ள ஒரு பயிற்றுவிப்பாளர் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிற்கான தடுப்புப் பிரிவின் வழிகாட்டல்களின் கீழ் சம்பந்தப்பட்ட அரச நிறுவனத்துடன் நேரடியாக இணைந்து பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை திட்டமிட்டு நடைமுறைப்படுத்த முடியும்.

## 1.9 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கான நெறிப்படுத்தல் மற்றும் இணைப்பாக்கம்

ஊழலுக்கு எதிரான பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவிப்பதற்கான மூன்றுநாள் செயலமர்வினை வெற்றிகரமாக பூர்த்திசெய்துள்ள ஒரு பயிற்றுவிப்பாளர் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிற்கான தடுப்புப் பிரிவின் வழிகாட்டல்களின் கீழ் சம்பந்தப்பட்ட அரச நிறுவனத்துடன் நேரடியாக இணைந்து பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை திட்டமிட்டு நடைமுறைப்படுத்த முடியும்.

2

# வழிகாட்டல் கோவையை அறிமுகம் செய்தல்

## 2.1 அறிமுகம்

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் நாடு தழுவிய ரீதியில் ஒழுங்குசெய்யப்படுகின்ற இலஞ்சம் - ஊழல் தொடர்பாக உத்தியோகத்தர்களை விழிப்பூட்டுவதற்கான நிகழ்ச்சித்திட்டத்தொடரின் பயிற்றுவிப்பாளர்களாக.்.வளவாளர்களாக பங்கேற்கும் பயிற்றுவிப்பாளர்களின் பயன்பாட்டுக்காக இவ்வழிகாட்டல் கோவை தயாரிக்கப்பட்டுள்ளது.

## 2.2 வழிகாட்டல் கோவை தயாரிக்கப்படுதல்

2019 ஆகஸ்ட் 23, 24, 25 ஆகிய தேதிகளில் நீர்கொழும்பில் இடம்பெற்ற ஊழலுக்கு எதிரான பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவிப்பதற்கான செயலமர்வில் பங்கேற்ற பயிற்சியாளர்கள் அங்கு முன்வைத்த கருத்துக்களையும் முன்மொழிவுகளையும் அடிப்படையாகக்கொண்டு இப்பயிற்சி கையேட்டினைத் தயாரிப்பதற்குத் தேவையான அடிப்படைத் தகவல்கள் தொகுத்துக்கொள்ளப்பட்டன.

குறிப்பிட்ட முன்மொழிவுகளின் பிரகாரம் அடிப்படையில் அமர்வுகளுக்கான திட்டம் தயாரிக்கப்பட்டதோடு பின்னர் விடயத்துறைசார் வல்லுநர்களிடமிருந்து கருத்துக்களும் முன்மொழிவுகளும் பெற்றுக்கொள்ளப்பட்டு இந்த வழிகாட்டல் கோவை தயாரிக்கப்பட்டது. 2020 பெப்ருவரி 16, 17, 18 ஆகிய தேதிகளில் வஸ்கடுவையில் நடத்தப்பட்ட மேல் மாகாண பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டத்தின் பொருட்டு மேற்படி வழிகாட்டல் கோவை பயன்படுத்தப்பட்டு பரிசோதிக்கப்பட்டதன் பின்னர் மேலதிகமாகவும் விடயங்கள் உள்ளடக்கப்பட்டு இறுதியாகத் திருத்தியமைக்கப்பட்டு இந்த வழிகாட்டல் கோவை தயாரிக்கப்பட்டுள்ளது.

## 2.3 உள்ளடக்கம்

இவ்வழிகாட்டல் கோவையானது ஒருநாள் பயிற்சிச் செயலமர்வுக்கான அமர்வுத் திட்டம், பயிற்றுவிப்பாளர்களுக்கும் ஏற்பாட்டாளர்களுக்கும் தேவையான வழிகாட்டல்கள், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின்போது பயிற்சியாளர்களுக்கு வழங்கப்படுகின்ற துண்டுப்பிரசுரங்கள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அச்சுச் சாதனங்கள் பற்றிய விபரங்கள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தினை மதிப்பீட்டாய்வு செய்வதற்கான மதிப்பீட்டு மாதிரிப் படிவம் என்பவற்றைக் கொண்டமைந்துள்ளது. பயிற்றுவிப்பாளர்களுக்கு பங்கேற்பாளர்களின் பணிநிலை அந்தஸ்தின் பிரகாரம் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் மாற்றங்களை மேற்கொள்ள வேண்டியேட்படும் பட்சத்தில் அதற்குப் பொருத்தமான வழிகாட்டல்களும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 2.4 பயிற்சி முறையியல்கள்

அரச உத்தியோகத்தர்களுக்கான ஊழல் எதிர்ப்புப் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவது சம்பந்தமாக அடிப்படை பயிற்சியினைப் பெற்றுள்ள ஒருவர் பரிசீலனை செய்யக்கூடிய வகையில் இவ்வழிகாட்டல் கோவை திட்டமிடப்பட்டுள்ளது. செயலமர்வின் பொருட்டு வெளி நபர்களை இணைத்துக்கொள்ளவேண்டி ஏற்படுகின்ற சந்தர்ப்பமொன்றில் அடிப்படை வழிகாட்டல் வழங்கப்பட வேண்டியது அத்தியாவசியமாகும் என்பதோடு குறிப்பிட்ட வெளி நபர் அழைக்கப்பட்ட ஒரு விரிவுரையாளராக/வளவாளராக அறிமுகம் செய்யப்படுவது மிகவும் பொருத்தமானது.

பயிற்சி அமர்வுகளின் பொருட்டு வழிகாட்டல் கோவையில் தரப்பட்டுள்ள பயிற்சி முறையியல்கள் பயன்படுத்தப்பட வேண்டுமென்பதோடு அதற்காக பயிற்றுவிப்பாளருக்கு முன்தயார்நிலை இருப்பது அத்தியாவசியமாகும்.

## 2.5 பயிற்சியாளர்கள்

பயிற்சியாளர்களாக அரச சேவையின் எந்தவொரு பதவிநிலை அந்தஸ்திலுமுள்ள நபர்களையும் பயிற்றுவிப்பதற்காக இவ்வழிகாட்டல் கோவையைப் பயன்படுத்த முடியும். இருப்பினும் பங்கேற்பாளர்களின் பதவிநிலை அந்தஸ்து, எந்த மொழிமூலத்தில் பணியாற்றுகின்றனர் ஆகிய தகவல்களை முன்கூட்டியே அறிந்துகொண்டு துண்டுப்பிரசுரங்களையும் ஆவணங்களையும் தயார்படுத்திக்கொள்வது சம்பந்தமாக பயிற்றுவிப்பாளர்கள் கவனம் செலுத்த வேண்டும்.

3

# பயிற்சிக்கான கருவிகளும் வளங்களும

## 3.1 அறிமுகம்

அரச உத்தியோகத்தர்களுக்கான ஒருநாள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்குப் பொருத்தமாக அமையக்கூடிய வகையில் இப்பயிற்சி தொகுதி தயாரிக்கப்பட்டுள்ளது. இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான விடயப்பொருள் அனைத்தையும் ஒருதினத்தில் உள்வாங்கும்போது முகங்கொடுக்க வேண்டியேற்படுகின்ற சிரமங்களைக் கருத்திற்கொண்டு, செயலமர்வின்போது பங்கேற்பாளர்களுக்கு அடிப்படை புரிதலைப் பெற்றுக்கொடுத்து மேலதிக அறிவின் பொருட்டு வாசிப்பதற்குத் தேவையான தகவல்கள் துண்டுப்பிரசுரங்களாக இத்தொகுதியில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதேவேளை, பயிற்றுவிப்பாளர்களின் பரிசீலனைக்குத் தேவையான கருவிகளும் வளங்கலும் பற்றிய ஓர் ஆவணமும், அந்தந்த சந்தர்ப்பங்களில் செயற்பட வேண்டிய விதம் தொடர்பான வழிகாட்டல்களும் இத்தொகுதியில் உள்ளடங்கியுள்ளன. பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின்போது பயன்படுத்தப்படுகின்ற PPT, வீடியோக்கள் மற்றும் ஏனைய துணைப் பொருள்கள் என்பன பயிற்சித் தொகுதியுடன் மென்பிரதிகளாக பென்ரைவ் மூலம் வழங்கப்பட்டுள்ளன.

இப்பயிற்சிக் கருவிகளும் வளத்தொகுதியும் 2 பிரதான பகுதிகளைக் கொண்டமைந்துள்ளன.

1. நிகழ்ச்சித்திட்டத்தின்போது பயிற்றுவிப்பாளர்களின் பரிசீலனைக்குத் தேவையான கருவிகளும் வளங்களும்.(உதாரணமாக: PPT, வீடியோக்கள், கையேடுகள் போன்றவை)
2. பயிற்சி பெறுகின்ற அரச உத்தியோகத்தர்களுக்குப் பகிர்ந்தளிப்பதற்குத் தேவையான ஆவணங்கள் (உதாரணமாக - துண்டுப்பிரசுரங்கள்)

## 3.2 பயிற்சிக் கருவிகள் மற்றும் வளத்தொகுதியின் உள்ளடக்கம்

### 3.2.1 பயிற்றுவிப்பாளர்களின் பரிசீலனைக்குத் தேவையான கருவிகளும் வளங்களும்

1. 1954 ஆம் ஆண்டின 11 ஆம் இலக்க இலஞ்சச் சட்டம்
2. 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டம்
3. 1975 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க சொத்துக்கள் பொறுப்புக்கள் பிரகடனச் சட்டம்
4. தாபன விதிக்கோவை
5. ஊழலை இல்லாதொழிப்பதற்கான தேசிய செயற்பாட்டுத்திட்டம் சம்பந்தமான சனாதிபதியின் செயலாளரது சுற்றறிக்கைகள்

### இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் வெளியீடுகள்

1. இலங்கையிலிருந்து இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்கான தேசிய செயற்பாட்டுத் திட்டம்.

2. நேர்மைத்திறன் கையேடு
3. அன்பளிப்புகள் பற்றிய விதிகள் - கையேடு
4. முரண்பாட்டு ஆர்வ விதிகள் - கையேடு
5. சட்டத் திருத்தங்களுக்கான உத்தேசக் கொள்கைகள் (கையேடு-4)
6. நேர்மைத்திறன்மிகு பயிற்றுவிப்பாளர்களுக்கான வளக் கையேடு

குறுந் திரைப்படங்கள்

1. நேர்மையான உள்ளத்துடன் வீடு செல்வோம் (பாடல்)
2. சர்வதேச ஊழல் எதிர்ப்புத் தின செயற்பாடுகள் - வீடியோ நாடாக்கள்
3. இலஞ்சம், நீங்கள் உங்களுக்கே செய்துகொள்ளும் இழிவுச் செயலாகும்
4. ஊழலின் சங்கிலியைத் தகர்த்தெறிவோம்

ஒருநாள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்குத் தேவையான ஆவணங்களும் கருவிகளும்

1. பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் (இணைப்பு 01ஐ பார்க்கவும்)
2. பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்கான பின்னூட்டல் படிவம் (இணைப்பு 02ஐ பார்க்கவும்)
3. பங்கேற்பாளர்களைப் பதிவுசெய்வதற்கான ஆவணங்கள்
4. பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக அறிக்கையிடுவதற்கான மாதிரி (இணைப்பு 03)
5. துண்டுப்பிரசுரங்கள்
6. Power Point Presentations (PPT)

3.2.2 பங்கேற்பாளர்களுக்கு விநியோகிப்பதற்குத் தேவையான ஆவணங்கள்.:. பொருட்கள்

1. துண்டுப்பிரசுரம் இலக்கம் 01 - ஊழல் என்றால் என்ன?
2. துண்டுப்பிரசுரம் இலக்கம் 02 - ஊழலின் பல்வேறுபட்ட வடிவங்கள்
3. துண்டுப்பிரசுரம் இலக்கம் 03 - ஊழலின் விளைவுகள்
4. துண்டுப்பிரசுரம் இலக்கம் 04 - ஊழலைத் தடுக்கும் சட்டதிட்டங்கள்
5. துண்டுப்பிரசுரம் இலக்கம் 05 - இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் தத்துவங்களும் செயற்பொறுப்பும்
6. துண்டுப்பிரசுரம் இலக்கம் 06 - ஊழலை இல்லாதொழிப்பதற்கான தேசிய செயற்பாட்டுத் திட்டம்
7. CIABOC ஸ்டிக்கர்.:.துண்டுப்பிரசுரங்கள்

4

# பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்தல்

## 4.1 அறிமுகம்

இலங்கையிலிருந்து இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்கான தேசிய செயற்பாட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் பொருட்டு இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பாக அரச உத்தியோகத்தர்களுக்கு மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவது "ஊழலுக்கு எதிரான ஒருநாள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத் தொடரின்" பிரதான நோக்கமாகும். வளவாளர்கள், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின்கீழ் பயிற்சிபெற்றுள்ள பயிற்றுவிப்பாளர்கள் என்ற வகையில் நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்வதனால் அவற்றை மிகவும் சிறப்பாக திட்டமிட்ட வகையில் மேற்கொள்வது தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும்.

## 4.2 நிகழ்ச்சித்திட்டத்திற்கான மண்டப வசதிகள்

நிகழ்ச்சித்திட்டத்தில் 50 நபர்கள் பங்கேற்கச் செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுவதனால் போதிய இடவசதிகளைக்கொண்ட ஒரு மண்டபம் தெரிவு செய்துகொள்ளப்பட வேண்டும். சில மண்டபங்களின் மத்தியில் தூண்கள் அமைந்திருப்பதனால் அனைவருக்கும் பயிற்றுவிப்பாளரும் ப்ரொஜெக்டரின் திரையும் எதுவித தடையுமின்றி தெரியக்கூடிய வகையில் மண்டபத்தினை ஒழுங்கமைத்துக்கொள்வது தொடர்பாக கவனம் செலுத்துவது முக்கியமாகும். மண்டபத்தினைத் தயார்படுத்தும்போது சிறு குழுக்களாக பங்கேற்பாளர்கள் அமரக்கூடிய மாதிரியொன்றைப் பயன்படுத்துவது நிகழ்ச்சித்திட்டத்திற்கு வசதியாக அமையும்.

## 4.3 பயிற்சிப் பதவியணி

பயிற்சிப் பதவியணியானது பின்வரும் நபர்களைக் கொண்டமைந்திருத்தல் வேண்டும்.

### 4.3.1 நிகழ்ச்சித்திட்ட ஏற்பாட்டாளர்/வசதியளிப்பவர்

நிகழ்ச்சித்திட்டத்தினை நடத்துகின்ற நிறுவனத்தைச் சேர்ந்த ஓர் உத்தியோகத்தர் ஒருநாள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் நிகழ்ச்சித்திட்ட ஏற்பாட்டாளராக/வசதியளிப்பவராக நியமித்துக்கொள்ளப்பட வேண்டும். நிகழ்ச்சித்திட்டத்தின் பங்கேற்பாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுதல் தொடக்கம் மண்டப வசதிகள் வழங்கப்படுதல், உணவு - தேநீர் வசதிகள் வழங்கப்படுதல் தொடர்பாக ஆராய்ந்து பார்த்தல், பயிற்றுவிப்பாளர்களுடனான இணைப்பாக்க நடவடிக்கைகள், பயிற்சி உபகரணங்களை தயார்படுத்திக்கொள்ளுதல், துண்டுப்பிரசுரங்களை அச்சிட்டுக்கொள்ளுதல் வரையான அனைத்து நடவடிக்கைகளுக்குமான பிராதான பொறுப்பானது நிகழ்ச்சித்திட்ட ஏற்பாட்டாளரிடம் / வசதியளிப்பவரிடம் ஒப்படைக்கப்படுகின்றது.

பங்கேற்பாளர்களை வரவேற்றல், பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்களைத் தெளிவுபடுத்துதல்

மற்றும் வளவாளர்களை/பயிற்றுவிப்பாளர்களை அறிமுகஞ்செய்தல் என்பனவும் நிகழ்ச்சித்திட்ட ஏற்பாட்டாளரிடம்/வசதியளிப்பவரிடம் ஒப்படைக்கப்படுவதனால் அவற்றுக்காகவும் அவர் தயாராக இருக்க வேண்டியது முக்கியமாகும். வளவாளர்களை/பயிற்றுவிப்பாளர்களை அறிமுகப்படுத்துவதற்காக PPT slide ஒன்றைப் பயன்படுத்துவது மிகவும் பொருத்தமாகும். குறிப்பிட்ட நிகழ்ச்சித்திட்ட ஏற்பாட்டாளர்/வசதியளிப்பவர் ஊழலுக்கு எதிரான நிகழ்ச்சித்திட்டங்களை நெறிப்படுத்துவது தொடர்பாக CIABOC இன் கீழ் பயிற்சி பெற்றுள்ள ஒரு பயிற்றுவிப்பாளர் அல்ல என்பதால் அவருக்குத் தேவையான வழிகாட்டல்கள் வளவாளர்களால்/பயிற்றுவிப்பாளர்களால் வழங்கப்படுதல் வேண்டும்.

### 4.3.2 வளவாளர்கள்/பயிற்றுவிப்பாளர்கள்

ஒருநாள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்கான வளவாளர்கள்/பயிற்றுவிப்பாளர்கள் இரண்டு பேரும் CIABOCஇன்கீழ் ஊழலுக்கு எதிரான நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவது தொடர்பான பயிற்றுவிப்பாளர்களாக பயிற்சிபெற்றவர்களாக இருத்தல் வேண்டும். அதற்கு மேலதிகமாக தேவையின் அடிப்படையில் CIABOCஇன் உத்தியோகத்தர்களையும் வளவாளர்களாக / பயிற்றுவிப்பாளர்களாகப் பங்கேற்கச்செய்ய முடியும்.

### 4.3.3 உதவிப் பயிற்றுவிப்பாளர்கள்

வளவாளர்கள்/பயிற்றுவிப்பாளர்கள் தேவையென உணரும் பட்சத்தில் பயிற்றுவிப்பாளர்களுக்கு உதவியளிப்பதற்காக உதவிப் பயிற்றுவிப்பாளரொருவரை இணைத்துக்கொள்ள முடியும்.

## 4.4 பங்கேற்பாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஆவணங்கள்

பங்கேற்பாளர்கள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்கு வருகைதந்து தம்மைப் பதிவு செய்துகொள்ளும் சந்தர்ப்பத்திலேயே பின்வரும் ஆவணங்கள் வழங்கப்படுதல் வேண்டும்.

1. நிகழ்ச்சித்திட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் (இணைப்பு --)
2. பங்கேற்பாளர்களுக்கான தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் படிவம் (இணைப்பு --)
3. CIABOC வெளியீட்டுத் தொகுதி
4. குறிப்புப் புத்தகம்
5. பேனா

துண்டுப்பிரசுரங்களைத் தயாராக வைத்துக்கொண்டு அந்தந்த அமர்வுகளின் இறுதியில் பகிர்ந்தளிக்கவும்.

## 4.5 மேற்பார்வையாளர் பட்டியல்

| செயற்பாடு | பொறுப்பு |
|---|---|
| 1. பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான அடிப்படைக் கலந்துரையாடல் | ☐ |
| 2. பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்காக தினங்களை ஒதுக்கிக்கொள்ளல் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் | ☐ |
| 3. ஏற்பாட்டாளரை/வசதியளிப்பவரை நியமித்துக்கொள்ளல் | ☐ |
| 4. பயிற்சி வளாகங்களை ஒதுக்கிக்கொள்ளல் | ☐ |
| 5. பயிற்றுவிப்பாளர்களை/வளவாளர்களை உறுதிபடுத்திக்கொள்ளல் | ☐ |
| 6. பயிற்சியாளர் குழு தெரிவுசெய்யப்படுதல் மற்றும் அவர்களுக்கு அறிவிக்கப்படுதல் | ☐ |
| 7. பயிற்சிப் பொருட்கள் மற்றும் உபகரணத் தொகுதிகள் தயார்படுத்திக் கொள்ளப்படுதல் | ☐ |

பங்கேற்பாளர்கள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்கு வருகைதந்து தம்மைப் பதிவு செய்துகொள்ளும் சந்தர்ப்பத்திலேயே பின்வரும் ஆவணங்கள் வழங்கப்படுதல் வேண்டும்.

## 4.6 பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்குத் தேவையான பொருட்களும் உபகரணங்களும்

| | | |
|---|---|---|
| 1. | பைல் அட்டைகள் | 55 |
| 2. | குறிப்புப் புத்தகங்கள் | 55 |
| 3. | பேனாக்கள் | 55 |
| 4. | பர்மனென்ட் மார்க்கர் பேனா | 10 |
| 5. | வைட் போர்ட் மார்க்கர் பேனா | 03 |
| 6. | ஸ்டெப்லர் பின் பக்கெட் | 01 |
| 7. | ஸ்டெப்லர் மெஷின் | 01 |
| 8. | செலோரேப் | 01 |
| 9. | ப்ளூடெக் | 01 |
| 10. | ப்ளிப் சார்ட் கடதாசி | 25 |
| 11. | Flip Chart பலகை | |
| 12. | ப்ளேஷ் கார்ட்(Flash Card) | 50 |
| 13. | ஒளி எறிவுத் திரையுடனான ப்ரொஜெக்கடர் | (Multi Media) |
| 14. | Extension code | |

5

# அரச உத்தியோகத்தர்களுக்கான ஊழல் எதிர்ப்புப் பற்றிய ஒருநாள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

## அமர்வுக்கான திட்டமும் உள்ளடக்கமும்

| நேரம் | அமர்வு | உள்ளடக்கம் | பயிற்றுவிப்பாளருக்கான வழிகாட்டல்கள் | பயிற்சி முறையியல்கள் | பங்கேற்பாளர்களுக்கு வழங்கப்படவேண்டிய துண்டுப்பிரசுரங்களும் கருவிகளும |
|---|---|---|---|---|---|
| 9.00 - 9.30 | ஆரம்ப அமர்வு | வரவேற்பு மற்றும் நோக்கங்கள் தெளிவுபடுத்தப்படுதல்.<br><br>வளவாளர்களுக்கான அறிமுகம்.<br><br>நிறுவனத் தலைவரின் உரை | கையொப்ப இடாப்பு, நிகழ்ச்சி நிரல் தயாராக உள்ளனவா என்பதனை சோதித்துப் பார்க்கவும் | | ஒருநாள் நிகழ்ச்சித்திட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் |
| 9.30 - 10.30 | ஊழலை இனங்காணுதல்<br><br>ஊழலுக்கு எதிரான சர்வதேசம் | ஊழல் என்றால் என்ன?<br><br>ஊழலின் பல்வேறுபட்ட வடிவங்கள்<br><br>ஊழலின் காரணமாக இழக்கப்படும் தேசிய சொத்தும் அதன் விளைவுகளும்.<br><br>ஊழலுக்கு எதிரான உலகளாவிய அணிதிரள்வு<br><br>ஊழலை வெற்றிகொள்ளல் - ஹொங்கொங் முன்மாதிரி | (PPT – 01)/(PPT – 02)/(PPT -03) ஐ பயன்படுத்தவும்.<br><br>பயிற்றுவிப்பாளர்களுக்காக வளக் கையேட்டின் முதலாம் அத்தியாயத்தை வாசிக்கவும். (பக்க எண் 26 தொடக்கம் 39 வரை) வளக் கையேடு (பக்க எண் 45 - 53 வரை வாசிக்கவும்).<br><br>(PPT – 04) வளக் கையேடு (பக்க எண் - 54) | Power point சமர்ப்பணம்.<br><br>கலந்துரையாடல்கள்<br><br>வீடியோ காட்சிகள்<br><br>சிறு குழுக் கலந்துரையாடல்கள் | ஊழல் என்றால் என்ன? (துண்டுப் பிரசுரம் - இலக்கம் 01)<br><br>ஊழலின் பல்வேறுபட்ட வடிவங்களை இனங்காணப்பதற்கான வினாக்கொத்து<br><br>ஊழலின் பல்வேறுபட்ட வடிவங்கள் (துண்டுப் பிரசுரம் - இலக்கம் 02)<br><br>ஊழலின் விளைவுகள் (துண்டுப் பிரசுரம் - இலக்கம் 03)<br><br>ஊழலின் விளைவுகள்-வீடியோ |
| 10.30 - 11.00 | தேநீர் | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11.00 - 12.30 | ஊழலுக்கு எதிரான இலங்கையின் அணிதிரள்வு | ஊழலைத் தடுக்கும் சட்டதிட்டங்கள்<br><br>இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் தத்துவங்களும் செயற்பொறுப்பும் (PPT 06) | மேலதிக வாசிப்புக்காக வளக் கையே: (பக்கம் 57 - 67)<br><br>மேலதிக வாசிப்புக்காக வளக் கையேடு (பக்கம் 68 - 73) | Power point சமர்ப்பணம்.<br><br>கலந்துரையா-டல்கள்<br><br>வீடியோ காட்சிகள் | ஊழலைத் தடுக்கும் சட்டதிட்டங்கள் (துண்டுப் பிரசுரம் - இலக்கம் 04) |
| 12.30 - 13.30 | மதிய உணவு | | | | |
| 13.30 - 14.30 | ஊழலை மறுதலிக்கும் இலங்கையின் திட்டங்கள் | நேர்மைத்திறன்மிகு அரச ஊழியரின் பொருளளவான பயன்பாடு<br><br>நேர்மைத்திறன் இனங்காணப்படுதல்<br><br>முரண்பாட்டு ஆர்வ விதிகள்<br>அன்பளிப்பு விதிகள் பற்றிய ஏற்பாடுகள்<br><br>நேர்மைத்திறன் சம்பந்தமாக தாபன விதிக்கோவையில் காணப்படுகின்ற ஏற்பாடுகள்<br><br>ஊழலுக்கு எதிரான தேசிய செயற்பாட்டுத்திட்டம் | நேர்மைத்திறன் என்றால் என்ன? (PPT 07)<br><br>முரண்பாட்டு ஆர்வ விதிகள் (PPT 08)<br><br>அன்பளிப்பு விதிகள் பற்றிய ஏற்பாடுகள் (PPT 09)<br><br>மேலதிக வாசிப்புக்காக வளநூல் (பக்கம் 81-88) | முரண்பாட்டு ஆர்வ விதிகள் மற்றும் அன்பளிப்பு விதிகள் சம்பந்தமான சம்பவங்கள் தொடர்பாக கலந்துரையாடி அது தொடர்பாக கருத்தாடலொன்றை உருவாக்குதல் | நேர்மைத்திறன் என்றால் என்ன? (துண்டுப் பிரசுரம் - இலக்கம் 05)<br><br>முரண்பாட்டு ஆர்வ விதிகள் அச்சுத் துண்டுப்பிரசுரம்<br><br>அன்பளிப்பு விதிகள் பற்றிய ஏற்பாடுகள் - அச்சுத் துண்டுப்பிரசுரம்<br><br>ஊழலுக்கு எதிரான தேசிய செயற்பாட்டுத்திட்டம் (சுருக்கம்) (துண்டுப் பிரசுரம் - இலக்கம் 06) |
| 14.30 - 15.30 | நிறுவனங்களில் காணப்படுகின்ற ஊழல் அபாய நேர்வு நிலைமைகளை இனங்காணுதல் | இலஞ்சம் மற்றும் ஊழலை மறுதலிப்பதற்காக நிறுவனசார் செயற்பாட்டுத்திட்டங்கள் தயாரிக்கப்படுதல் | குழுச் செயற்பாடு - உங்கள் நிறுவனத்தில் இலஞ்சம் அல்லது ஊழல் அபாய நேர்வு காணப்படுகின்ற பிரிவுகள் யாவை?<br><br>அவற்றுள் அதிக அபாய நேர்வினைக்கொண்ட 4 பிரிவுகளை இனங்கண்டு அப்பிரிவுகளில் காணப்படுகின்ற அபாய நேர்வினை விபரிக்கவும். மேலதிக வாசிப்புக்காக வளக் கையேடு (பக்கம் 89 - 97) | குழுக் கலந்துரையாடல் மற்றும் சமர்ப்பணம் | |
| 15.30 - 16.00 | இறுதி அமர்வு | மதிப்பீடும் நன்றியும் | | | பின்னூட்டல் படிவங்கள் |
| 16.00 - 16.30 | தேநீர் மற்றும் விடைபெறல் | | | | |

# முதலாம் அமர்வு

## நிகழ்ச்சித்திட்டம் பற்றிய அறிமுகம் மற்றும் ஒருங்கிணைவு

(நேரம் 30 நிமிடங்கள்)

மு.ப. 9.00 தொடக்கம் மு.ப.9.30 வரை

### அமர்வுக்கான நோக்கங்கள்

- செயலமர்வுக்கான நோக்கங்கள் தெளிவுபடுத்தப்படுதல்.
- பயிற்றுவிப்பாளர்களினதும் பங்கேற்பாளர்களினதும் நோக்கங்களுக்கிடையில் ஒருங்கிணைவை ஏற்படுத்துதல்.
- ஒட்டுமொத்த செயலமர்வின் பொருட்டு ஆரோக்கியமான பின்னணியை உருவாக்குதல்.

### அமர்வின் உள்ளடக்கம்

- வரவேற்பும் நோக்கம் தெளிவுபடுத்தப்படுதலும்.
- வளவாளர்களை அறிமுகஞ்செய்தல்.
- பங்கேற்பாளர்களை இனங்காணுதல்.
- செயலமர்வுக்கான உடன்பாடுகளை (ஒழுங்குவிதிகளை) ஏற்படுத்திக்கொள்ளல்.
-

#### அமர்வுக்கான தயார்நிலை தொடர்பான ஆலோசனைகள்

முதலாம் அமர்விற்கு முன்னர் பயிற்சியாளர்கள் பதிவுசெய்யப்படுதலும் அவர்களுக்குத் தேவையான பொருட்கள் வழங்கப்படுதலும் மேற்கொள்ளப்பட வேண்டும். பங்கேற்பாளர்கள் மண்டபத்திற்கு வருகைதரும்போது CIABOC இன் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஊழல் தடுப்புச் செற்பாடுகள் பற்றிய புகைப்படங்களின் திரட்டொன்றினை அல்லது CIABOC இன் செயற்பாடுகள் பற்றிய வீடியோவொன்றினைக் காட்சிப்படுத்த முடியும்.

(உதாரணம்:- டிசெம்பர் 09 ஆம் திகதிய ஊழல் எதிர்ப்புத் தின நிகழ்ச்சித்திட்டத்தின் அல்லது ஊழல் தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்கான புகைப்படங்களின் திரட்டு / வீடியோ)

ஆரம்ப அமர்வுக்கான நெறியாக்கம் - நிகழ்ச்சித்திட்டத்திற்கான ஏற்பாட்டாளரினால் மேற்கொள்ளப்படும்.

## படிமுறை 1

வரவேற்பும் நோக்கம் தெளிவுபடுத்தப்படுதலும்
நேரம் - 07 - நிமிடங்கள் (மு.ப.9.00 - 9.07)

**நிகழ்ச்சித்திட்டத்திற்கான ஏற்பாட்டாளருக்கான/வசதியளிப்பவருக்கான குறிப்பு**
நிகழ்ச்சித்திட்டத்திற்கான ஏற்பாட்டாளர் குழுவினரை வரவேற்கவும். இந்நிகழ்ச்சித்திட்டமானது இலங்கையிலிருந்து இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்கான தேசிய செயற்பாட்டுத்திட்டத்தின் பிரகாரம் நடைமுறைப்படுத்தப்படுகின்ற ஒரு நிகழ்ச்சித்திட்டம் எனவும் செயலமர்வில் பங்கேற்கும் அனைவரும் பயிற்சியின் பின்னர் அரச உத்தியோகத்தர்களுக்கான ஊழல் எதிர்ப்பு வலையமைப்பில் இணைவார்கள் எனவும் நோக்கத்தினை தெளிவுபடுத்தும்போது தொடர்பாடல் செய்வது முக்கியமாகும்.

## படிமுறை 2

வளவாளர்களை அறிமுகஞ்செய்தல்
நேரம் - 03 - நிமிடங்கள் (மு.ப.9.07 - 9.10)

**நிகழ்ச்சித்திட்டத்திற்கான ஏற்பாட்டாளருக்கான/வசதியளிப்பவருக்கான குறிப்பு**
வளவாளர்களை/பயிற்றுவிப்பாளர்களை அறிமுகம் செய்யவும். அவ்வாறு அறிமுகம் செய்யப்படுகின்ற சந்தர்ப்பத்தில் பயிற்றுவிப்பாளர்களின் புகைப்படத்துடனான விபரங்களைக் கொண்ட Power Point Slide ஒன்றை ஒளிஎறிவுத் திரையில் காட்சியளிக்கச் செய்யவும். வளவாளர்களின்/பயிற்றுவிப்பாளர்களின் தொழில்சார் பின்னணி, விடயத்துறைசார் உயர் கல்வித் தகைமைகள்/குறிப்பிட்ட துறைக்காக அவர் மேற்கொண்டுள்ள பணி என்பவற்றை அதில் உள்ளடக்க முடியும்.

அறிமுகத்தின் இறுதியில் அமர்வினை முன்னெடுத்துச் செல்வதற்காக வளவாளர்களுக்கு அழைப்பு விடுக்கவும்.

## படிமுறை 3

நிறுவனத் தலைவரின் அல்லது விசேட விருந்தினரின் சுருக்கமான சொற்பொழிவு
நேரம் - 10 - நிமிடங்கள் (மு.ப. 9.10 - 9.20)

**நிகழ்ச்சித்திட்டத்திற்கான வசதியளிப்பவர் மற்றும் பயிற்றுவிப்பாளருக்கான குறிப்பு**
நிறுவனத் தலைவருக்கு அல்லது விசேட விருந்தினருக்கு ஒரு தலைப்பு வழங்கப்பட வேண்டியிருக்கும் பட்சத்தில் “நேர்மைத்திறன்மிகு அரசசேவையை நோக்கி மேற்கொள்ளும் பயணத்தின்போது அரச உத்தியோகத்தர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்பு” போன்றதொரு தலைப்பு வழங்கப்பட முடியும்.

## படிமுறை 4

பங்கேற்பாளர்களை இனங்காணுதல்

நேரம் - 10 - நிமிடங்கள் (மு.ப.9.20 - 9.30)

**நிகழ்ச்சித்திட்டத்திற்கான வசதியளிப்பவர் மற்றும் பயிற்றுவிப்பாளருக்கான குறிப்பு**

பங்கேற்பாளர்கள் அனைவரையும் இனங்காண்பது முக்கியமானது என்ற போதிலும் 50 நபர்களைக் கொண்டமைந்த ஒரு குழுவினை இனங்காண்பதற்கு கணிசமான காலப்பகுதி

தேவைப்படும். எனவே முறைசாரற்றவகையில் குழுவினரை இனங்கண்டு பங்கேற்பாளர்கள் தொடர்பாக ஓரளவு புரிதலை ஏற்படுத்திக்கொள்வதற்கும், பயிற்றுவிப்பாளருக்கும் பயிற்சியாளர்களுக்கும் இடையிலான இடைவெளியைக் குறைத்துக்கொண்டு நட்புறவுடன்கூடிய பிரவேசத்தினை ஏற்படுத்திக்கொள்வதற்கும் இக்குறுகிய நேரத்தினைப் பயன்படுத்தவும்.

பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின்போது பங்கேற்பாளர்கள் எவ்வாறு செயற்பட வேண்டும்? என்பது தொடர்பான உடன்பாடுகளையும் (ஒழுங்கு விதிகளை - புசழரனெ சரடந) இச்சந்தர்ப்பத்திலேயே ஏற்படுத்திக்கொள்ள முடியும்.

# இரண்டாம் அமர்வு

## ஊழலை இனங்காணுத்

(நேரம் - 01 மணித்தியாலம்)
மு.ப.9.30 தொடக்கம் 10.30 வரை

### அமர்வுக்கான நோக்கங்கள்

- ஊழல் என்றால் என்ன? என்பதனை பல்வேறுபட்ட பொருள்கோடல்களின் மூலம் புரியச்செய்தல்.
- ஊழலின் பல்வேறுபட்ட வடிவங்கள் தொடர்பாக புரிதலை வழங்குதல்.
- ஊழலின் காரணமாக இழக்கப்படும் தேசிய சொத்துக்களும் அதன் விளைவுகளும்.
- ஊழலுக்கு எதிரான உலகளாவிய அணிதிரள்வு மற்றும் ஊழலை வெற்றிகொள்ளல் பற்றிய உதாரணங்கள் தொடர்பாக புரிதலை வழங்குதல்.

### அமர்வின் உள்ளடக்கம்

- ஊழல் என்றால் என்ன? - பல்வேறுபட்ட பொருள்கோடல்கள்/சட்டரீதியான பொருள்கோடல்கள் மூலமான தெளிவுபடுத்தல்.
- ஊழலின் பல்வேறுபட்ட வகைகளையும் வடிவங்களையும் புரிந்துகொள்ளச் செய்தல்
- ஊழலின் காரணமாக இழக்கப்படுகின்ற தேசிய சொத்துக்கள் மற்றும் ஊழலுக்கு எதிரான உலகளாவிய அணிதிரள்வு தொடர்பான கலந்துரையாடல்.
- ஊழலை வெற்றிகொள்ளல் பற்றிய ஹொங்கொங் முன்மாதிரியினைத் தெளிவுபடுத்துதல்.

#### அமர்வுக்கான தயார்நிலை தொடர்பான ஆலோசனைகள்

வளவாளர்கள்/பயிற்றுவிப்பாளர்கள் அமர்வினை நெறிப்படுத்துவதோடு ஏற்பாட்டாளர்/வசதியளிப்பவர் அல்லது உதவி பயிற்றுவிப்பாளர் நேர முகாமைத்துவத்திற்காக உதவியளிக்க முடியும். அமர்வின் இறுதி 15/10/5 நிமிடங்களை தொடர்பாடல் செய்வதற்காக ஊயசன ஒன்றைக் காண்பித்து சமிக்ஞை செய்தல் அல்லது வேறு பொருத்தமான முறையியல் தொடர்பாக உடன்பாட்டுக்கு வரவும்.

அமர்வின்போது வளவாளருக்கு ஏதேனும் உதவி தேவைப்படும் பட்சத்தில் அதனை நிறைவேற்றுவதற்காக வசதியளிப்பவர் அல்லது உதவிப் பயிற்றுவிப்பாளர் தயாராகவிருத்தல் வேண்டும்.

இந்த ஒட்டுமொத்த நிகழ்ச்சித்திட்டமும் மிகவும் சிறப்பாக திட்டமிடப்பட்டதொரு கூட்டுப்பணியாகும் என்பதனை பங்கேற்பாளர்கள் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் சகல அம்சங்கள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்படுவது முக்கியமாகும்.

## படிமுறை 1

**ஊழல் என்றால் என்ன?**

நேரம் - 10 - நிமிடங்கள் (மு.ப.9.30 - 9.40)

**பயிற்றுவிப்பாளருக்கான குறிப்பு**

PPT-01ஐ பயன்படுத்தி பங்கேற்பாளர்களுடன் சிந்தனைக்கிளர்ச்சி ரீதியான கலந்துரையாடலுக்குச் சென்று அமர்வினை ஆரம்பிக்கவும். “ஊழல் என்பதன் மூலம் கருதப்படுவது யாது?” ஊழல் என்ற வார்த்தையைக் கேட்டவுடனேயே நினைவுக்கு வருகின்ற பல்வேறுபட்ட ஊழல் வகைகள் யாவை? ஊழல் சமூகத்திற்குப் பாதகமாக அமைவது ஏன்? போன்ற எளிமையான சில கேள்விகளை பங்கேற்பார்களிடம் தொடுத்து PPT-01 இல் குறிப்பிடப்பட்டுள்ள உதாரணங்களின்பால் பங்கேற்பாளர்களின் கவனத்தைச் செலுத்தவும். அவை ஊழல் செயற்பாடுகளா? இல்லையா? என வினவியவாறு கலந்துரையாடலை ஆரம்பிக்க முடியும்.

இறுதியில் CIABOC இன் பொருள்கோடல் தொடர்பாக கூடிய கவனம்செலுத்தி அதன் அடிப்படை அம்சங்கள் தொடர்பாக கலந்துரையாடவும்.

CIABOC யைச் சேர்ந்த ஓர் உத்தியோகத்தர் பங்கேற்கும் சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட அமர்வினை அந்த உத்தியோகத்தரிடம் ஒப்படைக்க முடியும்.

## படிமுறை 2

**ஊழலின் பல்வேறுபட்ட வகையினங்கள் மற்றும் வடிவங்கள்**

நேரம் - 20 நிமிடங்கள் (மு.ப.9.40 - 10.00)

**வளவாளருக்கான/பயிற்றுவிப்பாளருக்கான குறிப்பு**

PPT - 02 இன் முதலாவது Slide ஐ மட்டும் பயன்படுத்தி, இலஞ்சம் - ஊழல், மோசடி - ஊழல் ஆகிய இணைமொழிச் சொற்களின் மூலம் ஊழலின் ஒரே வடிவம் கருதப்படுகின்றனவா? அல்லது அவற்றின் மூலம் வெவ்வேறான பொருள்கள் எடுத்தியம்பப்படுகின்றனவா? எனும் வினாவைத் தொடுத்து பங்கேற்பாளர்களிடம் சிந்தனைக் கிளறலை ஏற்படுத்தவும்.

பங்கேற்பாளர்களுக்கு பலவிதமான பதில்களைப் பெற்றுத்தருவதற்கு இடமளித்து ஊழல் என்பது மிகவும் பரந்த பொருளினைக் கொண்டுள்ளதெனவும் இலஞ்சம், மோசடி என்பன ஊழலின் பல்வேறுபட்ட வகையினங்கள் எனவும் தெளிவுபடுத்தி ஏனைய வகையினங்களை விபரிப்பதற்கு முன்னர் படிமுறை 3 குச் செல்லவும்.

## படிமுறை 3

**வளவாளருக்கான/பயிற்றுவிப்பாளருக்கான குறிப்பு**

ஊழலின் பல்வேறுபட்ட வகையினங்களுக்கு உதாரணமாக எடுக்கக்கூடிய சம்பவங்கள் உள்ளடங்கிய குறுகிய வினாக்கொத்தொன்றை (இணைப்பு 01) மறைக்கப்பட்ட உறையொன்றில் இட்டு பங்கேற்பாளர்கள் குழுக்களாக அமர்ந்துள்ள மேசைகளுக்கு பகிர்ந்தளிக்கவும். அமர்வின் இறுதியில் சகல குழுக்களிடமிருந்தும் அந்த வினாக்களுக்கு பதில் எதிர்பார்க்கப்படுவதாக அறிவிக்கவும்.

அதன் பின்னர் PPT - 02 இன் எஞ்சியுள்ள Slide களைக் கலந்துரையாடவும்.

## படிமுறை 4

**ஊழலின் பல்வேறுபட்ட வகையினங்கள் மற்றும் வடிவங்கள்**

நேரம் - 10 - நிமிடங்கள் (மு.ப.10.00 - 10.10)

**வளவாளருக்கான/பயிற்றுவிப்பாளருக்கான குறிப்பு**

ஊழலின் பல்வேறுபட்ட வடிவங்கள் (Hand out-2)துண்டுப்பிரசுரத்தையும் குழுக்களுக்கு பகிர்ந்தளித்து குழு ரீதியாகக் கலந்துரையாடி குறுகிய வினாக்கொத்திற்குப் பதிலளிக்குமாறு அறிவிக்கவும்.

சகல குழுக்களும் பதிலளித்ததன் பின்னர் குறிப்பிட்ட பதில்கள் தொடர்பாக கலந்துரையாடி ஊழலின் பல்வேறுபட்ட வடிவங்கள் தொடர்பாக மேலும் தெளிவுபடுத்தவும்.

## படிமுறை 5

**ஊழலின் தாக்கமும் விளைவுகளும்**

நேரம் - 10 - நிமிடங்கள் (மு.ப.10.10 - 10.20)

**வளவாளருக்கான/பயிற்றுவிப்பாளருக்கான குறிப்பு**

ஊழலின் தாக்கம் மற்றும் அதன் விளைவுகள் தொடர்பாக பங்கேற்பாளர்களிடம் கருத்துக்களை வினவியவாறு அமர்வினை ஆரம்பிக்கவும். கலந்துரையாடலின்போது ஊழல் என்பது பொதுவாக சமூகத்திற்குப் பாதகமாக அமைவது மட்டுமன்றி தனிப்பட்ட முறையில் ஒவ்வொருவரின் வாழ்க்கை மீதும் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது என்பதனை பங்கேற்பாளர்களுக்கு மெய்ப்பிப்பதற்கு முயற்சிக்கவும்.

## படிமுறை 6

**வளவாளருக்கான/பயிற்றுவிப்பாளருக்கான குறிப்பு**

இலஞ்சம், நீங்கள் உங்களுக்கே செய்துகொள்ளும் இழிவுச் செயலாகும். குறுந் திரைப்பட வீடியோவைக் காட்சிப்படுத்தி அது தொடர்பாக கலந்துரையாடவும்.

## படிமுறை 7

**வளவாளருக்கான/பயிற்றுவிப்பாளருக்கான குறிப்பு**

ஊழலின் பாதிப்பினைச் சுட்டிக்காட்டும் குறுந் திரைப்பட வீடியோவைக் காட்சிப்படுத்தி(உதாரணமாக: சத்திரசிகிச்சை) அத்தகைய நிலைமைகள் இடம்பெறுவதன் மூலம் ஒரு நாட்டுக்கும் சமூகத்திற்கும் ஏற்படக்கூடிய சேதம் தொடர்பாக கலந்துரையாடவும்.

## படிமுறை 8

### வளவாளருக்கான/பயிற்றுவிப்பாளருக்கான குறிப்பு

PPT-03ஐ பயன்படுத்தி ஊழலின் தாக்கமும் அதன் விளைவுகளும் தொடர்பாக கலந்துரையாடவும். ஊழல் புலப்பாட்டுச் சுட்டியின் (CPI) பிரகாரம் கடந்த 17 ஆண்டுகள் முழுவதுமாக இலங்கையானது ஊழல் நிறைந்த நாடாக அமைந்திருப்பதனை PPT - 03 இன் மூலம் சுட்டிக்காட்டி இந்த நிலைமையை மாற்றியமைப்பதற்காக அரச ஊழியர்கள் என்ற வகையிலும் பிரஜைகள் என்ற வகையிலும் எம் அனைவருக்கும் பாரிய பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதை வலியுறுத்தவும். (CPI ஐ நீண்ட வகையில் விவரிக்க வேண்டிய தேவை கிடையாது. PPT மூலம் கடந்த 17 வருடங்கள் முழுவதிலும் 180 நாடுகளுக்கு மத்தியில் இலங்கைக்குக் கிடைத்துள்ள இடத்தினையும் 100 புள்ளிகளில் இலங்கை பெற்றுக்கொண்டுள்ள புள்ளிகளையும் சுட்டிக்காட்டுவது போதுமானது).

## படிமுறை 9

**ஊழலுக்கு எதிரான சர்வதேசம**

நேரம் - 10 - நிமிடங்கள் (மு.ப.10.20 - 10.30)

### பயிற்றுவிப்பாளருக்கான குறிப்பு

ஊழலுக்கு எதிரான உலகளாவிய அணிதிரள்வு மற்றும் போக்குகள் தொடர்பாக சில நிமிடங்கள் கலந்துரையாடவும். ஐக்கிய நாடுகளின் ஊழலுக்கு எதிரான சமவாயம் (UNCAC), குற்றச் செயல்கள் மற்றும் போதைப் பொருட்களுக்கான ஐக்கிய நாடுகளின் அலுவலகம் (UNODC), ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நேஷனல் ஊழல் புலப்பாட்டுச் சுட்டி (CPI), உலகளாவிய ஊழல் பாரோமீட்டர், திறந்த அரசாட்சிக் கூட்டு, நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள் (SDG) போன்ற ஊழலுக்கு எதிரான உலகளாவிய போக்குகள் பல தொழிற்படுகின்றதென்பதைக் குறிப்பிடுவது போதுமானது.

(மேலதிக அறிவுக்காக நேர்மைத்திறன்மிகு பயிற்றுவிப்பாளர்களுக்கான வளக் கையேட்டின் பக்கம் 36-43 வாசிக்கவும்)

## படிமுறை 10

### பயிற்றுவிப்பாளருக்கான குறிப்பு –
### ஊழலை வெற்றிகொள்ளல் : ஹொங்கொங் முன்மாதிரி

ஊழலை வெற்றிகொள்ளல் : ஹொங்கொங் முன்மாதிரி PPT - 04ஐ சமர்ப்பிக்கவும் ஊழல் என்பது வெற்றிகொள்ளக்கூடிய ஒரு நிகழ்வு என்பதையும், ஊழலை இல்லாதொழிப்பதற்கும் அதன் இருப்பினை பலவீனப்படுத்துவதற்கும் சாதுரியம் பெற்றுள்ள நாடுகளின் வெற்றிகரமான உதாரணங்களை இலங்கைக்கும் ஏற்புடையதாக அமைத்துக்கொள்ள முடியும் என்பதையும் மேற்படி உதாரணத்தை அடிப்படையாகக் கொண்டு கலந்துரையாடவும்.

இத்தகைய நடவடிக்கைமுறைகளில் ஈடுபடுவதற்கு எமக்குள்ள தடைகள் யாவை என்பது தொடர்பாக பங்கேற்பாளர்களுடன் குறுகிய கலந்துரையாடலில் ஈடுபடவும்.

# மூன்றாம் அமர்வு

## ஊழலுக்கு எதிரான இலங்கையின் அணிதிரள்வு

(நேரம் - 01 மணித்தியாலம் 30 நிமிடங்கள்)
மு.ப.11.00 தொடக்கம் 12.30 வரை

### அமர்வுக்கான நோக்கங்கள்

- ஊழல் எனப்படுவது இல்லாதொழிக்கக்கூடிய ஒரு செயற்பாடு என்பது தொடர்பாக புரிதலை வழங்குதல்.
- ஆணைக்குழுவின் ஊழலை இல்லாதொழிப்பதற்கான மூலோபாயங்கள் தொடர்பாக புரிதலை வழங்குதல்.
- ஊழலுக்கு எதிரான தேசிய செயற்பாட்டுத் திட்டம் பற்றிய அடிப்படைப் புரிதலை வழங்குதல்.

### அமர்வின் உள்ளடக்கம்

- ஊழலைத் தடுக்கும் பல்வேறுபட்ட சட்டதிட்டங்கள் தொடர்பாக அடிப்படைப் புரிதலை வழங்குதல்.
- இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் தத்துவங்களும் செயற்பொறுப்பும் தெளிவுபடுத்தப்படுதல்.

### படிமுறை 1

நேரம் - 30 நிமிடங்கள் (மு.ப.11.00 - 11.30)

**பயிற்றுவிப்பாளருக்கான குறிப்பு**

PPT-05ஐ பயன்படுத்தி ஊழலை இல்லாதொழிப்பது தொடர்பாக தற்போது நடைமுறையில் உள்ள பல்வேறுபட்ட சட்ட ஏற்பாடுகள் தொடர்பாகக் கலந்துரையாடவும். அமர்வின் இறுதியில் ஊழலைத் தடுக்கும் சட்டங்கள் பற்றிய துண்டுப்பிரசுரம் இலக்கம் 04ஐ பங்கேற்பாளர்களுக்குப் பகிர்ந்தளிக்கவும். CIABOC உத்தியோகத்தர் ஒருவர் இருக்கின்ற சந்தர்ப்பத்தில் இந்த அமர்வினை அந்த உத்தியோகத்தரிடம் ஒப்படைக்க முடியும்.

### படிமுறை 2

நேரம் - 60 நிமிடங்கள் (மு.ப.11.30 - பி.ப.12.30)

**பயிற்றுவிப்பாளருக்கான குறிப்பு**

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் தத்துவங்கள் மற்றும் செயற்பொறுப்பு என்பன தொடர்பாக PPT - 06ஐ பயன்படுத்தி இயன்றளவு எளிமையாகக் கலந்துரையாடவும்.
அமர்வின் இறுதியில் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு தொடர்பாக தயாரிக்கப்பட்டுள்ள விசேட துண்டுப் பிரசுரத்தை பங்கேற்பாளர்களுக்கு பகிர்ந்தளிக்கவும்.

# நான்காம் அமர்வு

## ஊழலை இல்லாதொழிக்கும் இலங்கையின் திட்டங்கள்

(நேரம் - 01 மணித்தியாலம்)
பி.ப.13.30 தொடக்கம் 14.30 வரை

### அமர்வுக்கான நோக்கங்கள்

- ஊழலைத் தடுக்க முடியும் என்பது தொடர்பாக பங்கேற்பாளர்களுக்குள் நேர்மறையான (சாதகமான) மனோபாவம் ஏற்படுத்தப்படுதல்.
- அரச உத்தியோகத்தர்களுக்குள் நேர்மைத்திறனின் பெறுமதி தொடர்பாக கூருணர்வு ஏற்படுத்தப்படுதல்.
- அரச ஊழியரின் நேர்மைத்திறனை உறுதிப்படுத்துவதற்காக வலுவிலுள்ள சட்ட ஏற்பாடுகள் தொடர்பாக புரிதல் ஏற்படுத்தப்படுதல்.

### அமர்வின் உள்ளடக்கம்

- நேர்மைத்திறன்மிகு அரச ஊழியரின் பொருளளவான பயன்பாடு.
- நேர்மைத்திறன் இனங்காணப்படுதல்.
- அரச ஊழியர்களுக்குள் சுய ஒழுக்கம் ஏற்படுத்தப்படுதல்.
- நலன்களுக்கு இடையிலான முரண்பாடு பற்றிய எண்ணக்கரு.
- அன்பளிப்பு விதிகள் பற்றிய ஏற்பாடுகள்.
- இலஞ்சம் அல்லது ஊழலை இல்லாதொழிப்பதற்கான தேசிய செயற்பாட்டுத் திட்டத்தில் நிறுவனசார் பொறுப்பு.

### படிமுறை 11

நேரம் - 10 - நிமிடங்கள் (பி.ப.13.30 - 13.40)

**பயிற்றுவிப்பாளருக்கான குறிப்பு**

தொழில் துறையாக அரச சேவையை ஏன் தெரிவு செய்தீர்கள்? போன்ற எளிமையான கேள்வியொன்றைப் பங்கேற்பாளர்களிடம் தொடுத்து அவர்களுடன் மிகவும் நட்புறவாக கலந்துரையாடலை முன்னெடுத்துச் சென்று அரச சேவையில் இணைவதற்கான அரிய வாய்ப்பு, அரச சேவையின் முக்கியத்துவம், அரச சேவையில் ஈடுபடுவதன் மூலம் பொது மக்களுக்கும் சேவையினை வழங்கி தமக்கும் பெறுமதியை ஏற்படுத்திக்கொள்வதற்கு கிடைத்துள்ள பெறுமதியான அனுகூலம் தொடர்பாக அவர்களுடன் கலந்துரையாடவும்.

அரச உத்தியோகத்தரின் பெறுமதியை மேலும் அதிகரித்துக்கொள்வது எவ்வாறு? இருக்கின்ற பெறுமதியினை மேலும் மெருகூட்டிக் கொள்வது எவ்வாறு? என்பவை தொடர்பாக சிந்தனைக் கிளறலில் ஈடுபட்டு அடுத்த படிமுறைக்குச் செல்லவும்.

## படிமுறை 2

நேரம் - 10 - நிமிடங்கள் (பி.ப.13.40 - 13.50)

**பயிற்றுவிப்பாளருக்கான குறிப்பு**

PPT-07ஐ பயன்படுத்தி நேர்மைத்திறன் என்றால் என்ன? என்பது தொடர்பாக கலந்துரையாடவும். அக்கலந்துரையாடலை முன்னெடுத்துச் சென்று அரச சேவையில் தம்மைக் கட்டுப்படுத்துவதற்காக பிரதானியொருவர்.·.நிருவாகியொருவர் இல்லாத சந்தர்ப்பத்தில் சுய ஒழுக்கத்துடன் பணியாற்றுவதற்கான ஆற்றல் மற்றும் அதன்பொருட்டு காணப்படுகின்ற பல்வேறுபட்ட வழிகாட்டல்கள் தொடர்பாக பங்கேற்பாளர்களின் கவனத்தைச் செலுத்தி அடுத்த படிமுறைக்குச் செல்லவும்.

## படிமுறை 3

**பயிற்றுவிப்பாளருக்கான குறிப்பு**

அரச ஊழியர்கள் தமது கடமைகளை நிறைவேற்றும்போது முகங்கொடுக்க நேரிடுகின்ற சார்வுநிலைகள் யாவை? கடமையை உரிய முறையில் நிறைவேற்றுவதற்குத் தடைகளை ஏற்படுத்துகின்ற மேற்படி சார்வுநிலைகளிலிருந்து விடுபடுவது எவ்வாறு? சிந்தனைக் கிளறலுக்கான கலந்துரையாடலுக்குச் சென்றவாறு படிமுறை 04 ஐ பிரவேசிக்கவும்.

## படிமுறை 4

நேரம் - 10 - நிமிடங்கள் (பி.ப.13.50 - 14.00)

**பயிற்றுவிப்பாளருக்கான குறிப்பு**

PPT 08ஐ பயன்படுத்தி நலன்களுக்கு இடையிலான முரண்பாடு பற்றிய அடிப்படைப் புரிதலை வழங்கவும்.

"நலன்களுக்கு இடையிலான முரண்பாடு பற்றிய விதிகள்" (முரண்பாட்டு ஆர்வ விதிகள்)

வழிகாட்டல் கையேடு 3 ஐ பங்கேற்பாளர்களுக்குக் காண்பித்து குறிப்பிட்ட கையேட்டினை இணையத்தளத்தின் ஊடாக பரிசீலனை செய்யுமாறு பங்கேற்பாளர்களுக்குள் ஊக்கத்தை ஏற்படுத்தவும். குறிப்பிட்ட வழிகாட்டல் கோவையினை ஊஐயுடீழுஊ இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்வதற்கான வழிகாட்டல்களை வழங்கவும். (http://tamil.ciaboc.gov.lk)

## படிமுறை 5

நேரம் - 10 - நிமிடங்கள்(பி.ப.14.00 - 14.10)

**பயிற்றுவிப்பாளருக்கான குறிப்பு**

ஓர் அரச ஊழியர் தமக்குக் கிடைக்கின்ற அன்பளிப்பொன்றைப் பெற்றுக்கொள்ள முடியாதா? இலஞ்சத்திற்கும் அன்பளிப்புக்கும் இடையில் வித்தியாசம் உள்ளதா? அப்படியாயின் அது என்ன? பங்கேற்பாளர்களுடன் கலந்துரையாடலுக்குச் சென்று அமர்வினை ஆரம்பிக்கவும். அதன் பின்னர் படிமுறை 06 குப் பிரவேசிக்கவும்.

## படிமுறை 6

**பயிற்றுவிப்பாளருக்கான குறிப்பு**

PPT - 09ஐ பயன்படுத்தி அன்பளிப்பு பற்றிய விதிகள் தொடர்பான அடிப்படை விடயங்களைக் கலந்துரையாடவும்.

“அன்பளிப்பு பற்றிய விதிகள்”

வழிகாட்டல் கையேடு 2 ஐ பங்கேற்பாளர்களுக்குக் காண்பித்து குறிப்பிட்ட கையேட்டினை இணையத்தளத்தின் ஊடாக பரிசீலனை செய்யுமாறு பங்கேற்பாளர்களுக்குள் ஊக்கத்தை ஏற்படுத்தவும். குறிப்பிட்ட வழிகாட்டல் கோவையினை CIABOC வலைதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்வதற்கான வழிகாட்டல்களை வழங்கவும்.(http://tamil.ciaboc.gov.lk). அதேவேளை, அதனை அடிப்படையாகக்கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள “அன்பளிப்பு விதிகள” பற்றிய துண்டுப்பிரசுரத்தை பங்கேற்பாளர்களுக்கு மத்தியில் பகிர்ந்தளிக்கவும்.

## படிமுறை 7

நேரம் - 10 - நிமிடங்கள் (பி.ப.14.10 - 14.20)

**பயிற்றுவிப்பாளருக்கான குறிப்பு**

துண்டுப்பிரசுரம் 06ஐ பங்கேற்பாளர்களுக்கு மத்தியில் பகிர்ந்தளித்து இலஞ்சம் அல்லது ஊழல் தடுப்பு தேசிய செயற்பாட்டுத் திட்டம் தொடர்பாக சுருக்கமாகத் தெளிவுபடுத்தவும். அத்திட்டத்தின் கீழ் சாட்டப்படுகின்ற நிறுவனசார் பொறுப்புத் தொடர்பாக பங்கேற்பாளர்களுடன் கலந்துரையாடவும்.

இலங்கையிலிருந்து இலஞ்சம் அல்லது ஊழலை இல்லாதொழிப்பதற்கான தேசிய செயற்பாட்டுத் திட்டத்தைப் பங்கேற்பாளர்களுக்கு காண்பித்து அக்கையேட்டினை இணையத்தளத்தின் ஊடாக பரிசீலனை செய்வதற்காக பங்கேற்பாளர்களை ஊக்குவிக்கவும். இது தொடர்பாக வீடியோ நாடா இருக்குமாயின் வீடியோ நாடாவைக் காட்சிப்படுத்தி குறிப்பிட்ட கலந்துரையாடலை முன்னெடுத்துச் செல்லமுடியும்.

## படிமுறை 8

நேரம் - 10 - நிமிடங்கள் (பி.ப.14.20 - 14.30)

**பயிற்றுவிப்பாளருக்கான குறிப்பு**

நான்காம் அமர்வின் கீழ் கலந்துரையாடப்பட்ட விடயங்களை மீண்டும் சுருக்கமாக நினைவுபடுத்தி சிக்கல்கள் இருக்கும் பட்சத்தில் அவற்றைத் தெளிவுபடுத்தவும்.

# ஐந்தாம் அமர்வு

## நிறுவனங்களில் காணப்படுகின்ற ஊழல் அபாயநேர்வு நிலைமைகளை இனங்காணுதல்

(நேரம் 01 மணித்தியாலம்)
பி.ப.14.30 தொடக்கம் 15.30 வரை

### அமர்வுக்கான நோக்கங்கள்

- அரச நிறுவனங்களில் இலஞ்சம் மற்றும் ஊழல் இடம்பெறக்கூடிய அபாயநேர்வு நிலமைகளை இனங்காணுதல் மற்றும் குறிப்பிட்ட அபாயநேர்வு நிலைமைகளை இல்லாதொழிப்பதற்காக மேற்கொள்ளக்கூடிய தலையீடுகளை இனங்காணுதல்.

### அமர்வின் உள்ளடக்கம்

- பங்கேற்பாளர்கள் பிரதிநிதித்துவம் செய்கின்ற நிறுவனங்களில் ஊழல் இடம்பெறுவதற்கான அபாயநேர்வு நிலைமைகளை இனங்காண்பதற்கான முறைகளையும் அவற்றுக்காக பயன்படுத்தக்கூடிய தீர்வுகளையும் கலந்துரையாடுதல்.

### முறையியல்

#### குழுச் செயற்பாடு

- நிறுவனத்தில் இலஞ்சம் அல்லது ஊழல் இடம்பெறுவதற்கான அபாயநேர்வினைக்கொண்ட பிரிவுகள் யாவை என்பது தொடர்பாக கலந்துரையாடுதல் மற்றும் குறிப்பிட்ட அபாயநேர்வினை விபரித்தல்.

**பயிற்றுவிப்பாளருக்கான குறிப்பு**

பல்வேறுபட்ட நிறுவனங்களுக்கான பிரதிநிதித்துவம் காணப்படுகின்ற சந்தர்ப்பங்களில் ஒரு நிறுவனத்தைச் சேர்ந்த குழுவினர் ஒரு குழுவில் உள்ளடக்கும் வகையில் குழுக்களைப் பிரிக்கவும். ஒரே நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் பங்கேற்கும் சந்தர்ப்பங்களில் நிறுவனத்தின் பல்வேறுபட்ட பிரிவுகளைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற குழுவினரை அப் பிரிவுகளுக்கு ஏற்றவகையில் குழுக்களாகப் பிரிக்க முடியும்.பங்கேற்பாளர்களின் எண்ணிக்கையின் பிரகாரம் 4 அல்லது 5 குழுக்களுக்கு வரையறுக்கவும்.

### குழுச் செயற்பாடுகள

- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடி ½ மணித்தியாலத்திற்குள் பின்வரும் இரண்டு கேள்விகளுக்குப் பதிலளிக்குமாறு ஆலோசனை வழங்கவும். செயற்பாட்டின் இறுதியில் குழுக்களாக சமர்ப்பணங்களை முன்வைக்கவும்.
- உங்கள் நிறுவனத்தில் இலஞ்சம் அல்லது ஊழல் அபாயநேர்வு காணப்படுகின்ற பிரிவுகள் யாவை?
- அவற்றுள் மிகவும் ஆபத்தான 4 பிரிவுகளை இனங்கண்டு அப்பிரிவுகளில் காணப்படுகின்ற அபாயநேர்வினை விபரிக்கவும்.

# இறுதி அமர்வு

(நேரம் 1 1.∴2 மணித்தியாலம்)
பி.ப.15.30 தொடக்கம் 16.00 வரை

## அமர்வுக்கான நோக்கங்கள்

- நேர்மைத்திறனை வளர்த்துக்கொள்வதன் முக்கியத்துவம் தொடர்பாக மீண்டும் நினைவுகூர்தல்
- பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை மதிப்பிடுவதற்குத் தேவையான தரவுகளைப் பெற்றுக்கொள்ளல்.
- பங்கேற்பாளர்களின் பதிற்செயற்பாடுகளைப் பெற்றுக்கொள்ளல்
- பங்கேற்பாளர்களை மதிப்பிடுதல் மற்றும் நன்றி தெரிவிக்கப்படுதல்.

## அமர்வின் உள்ளடக்கம்

- செயலமர்வில் கலந்துரையாடப்பட்ட விடயங்களை மீண்டும் நினைவுமீட்டல்
- “நேர்மையான உள்ளத்துடன் வீடு செல்வோம்” பாடலின் மூலம் தொடர்பாடல் செய்யப்படுகின்ற செய்தி தொடர்பாக பங்கேற்பாளர்களின் கவனத்தினைச் செலுத்துதல்
- மதிப்பீடு
- நன்றி

## முறையியல்

- பங்கேற்பாளர்களுடனான கலந்துரையாடல்கள்
- பவர்பாயிண்ட் மற்றும் வீடியோ சமர்ப்பணங்கள்

**பயிற்றுவிப்பாளருக்கான குறிப்பு**

தினத்தில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் அனைத்தையும் சுருக்கமாகத் தெரிவித்து நேர்மைத்திறனை வளர்த்துக்கொள்வதன் முக்கியத்துவம் தொடர்பாகவும், ஊழலை இல்லாதொழிப்பதற்கான சமூகப்பணியின் நிமித்தம் பங்களிப்பு நல்குவதன் முக்கியத்துவம் தொடர்பாகவும் பங்கேற்பாளர்களுடன் சுருக்கமான கலந்துரையாடலில் ஈடுபடவும். ஊழலை இல்லாதொழிக்க முடியும் என்ற நம்பிக்கையினை பங்கேற்பாளர்களின் மனதில் ஏற்படுத்தக்கூடிய கலந்துரையாடலாக அது அமைதல் வேண்டும்.

கலந்துரையாடலின் இறுதியில் காணொளியொன்றைக் காட்சிப்படுத்தி “நேர்மையான உள்ளத்துடன் வீடு செல்வோம்” எனும் பாடலை இசைக்கவும்.

அதன் பின்னர் பின்னூட்டல் படிவங்களை பங்கேற்பாளர்களுக்குப் பகிர்ந்தளித்து பதிற்செயற்பாடுகளைப் பெற்றுக்கொள்ளவும்.
செயலமர்வில் பங்கேற்ற அனைவரையும் அரச ஊழியர்களுக்கான ஊழல் எதிர்ப்பு வலையமைப்பில் இணைத்துக்கொள்வதாகத் தெரிவித்து அந்த வலையமைப்புடன் உயிரோட்டமாக இணையுமாறு அழைப்பு விடுக்கவும். (இது நிகழ்ச்சித்திட்டத்தின் முடிவல்ல புதிய பயணத்திற்கான ஆரம்பமே எனத் தெரிவித்து) நன்றி கூறி நிகழ்ச்சித்திட்டத்தினை முடிவுக்குக் கொண்டுவரவும்.

பங்கேற்பாளர்களுக்கும் கருத்துத் தெரிவிப்பதற்கு வாய்ப்பளிக்கவும்.

# PPT-01 ஊழல் என்றால் என்ன?

ஊழல் என்றால் என்ன?

1

நீங்கள் வாழ்கின்ற சமூகத்திலும் இத்தகைய விடயங்கள் இடம்பெறுகின்றனவா?

உரிய தரமின்றி நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள கொன்கிறீட் வீதிக்கான இறுதிச் செலுத்தலைப் பெற்றுக்கொள்வதற்காக அது ஏற்றுக்கொள்ளப்பட்ட தரநியமத்தில் இருப்பதாகத் தெரிவித்து அறிக்கையொன்றைப் பெற்றுத் தருமாறும் அதற்காக 10,000 ரூபா தருவதாகவும் ஒப்பந்தகாரர் தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கு முன்மொழிகின்றார்.

பொருட் பட்டியலில் கொள்வனவாளராக அலுவலகத்தின் பெயரைக் குறிப்பிட்டு பட்டியலுக்கு 5% கழிவுத் தொகையை வழங்கி எஞ்சிய 10% கழிவுத் தொகையை தனியான ஒரு உறையில் இட்டு பெற்றுத்தருமாறு உத்தியோகத்தர் குழு சந்தைப்படுத்தல் முகாமையாளருக்கு முன்மொழிகின்றனர்.

நேர்முகப் பரீட்சைச் செயன்முறையில் தாம் எவ்வகையிலும் தலையீடு செய்யமாட்டேன் எனவும் அதனை வேண்டிய வகையில் சுதந்திரமாக மேற்கொண்டு வீடுகளை பகிர்ந்தளிப்பதற்காக இப்பதிவேட்டில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள 10 பேர் உட்பட இன்னும் சிலரை தெரிவு செய்யுமாறு அமைச்சர் நேர்முகப் பரீட்சைக் குழுவின் தலைவருக்குக் கூறுகின்றார்.

2



3

ஊழல் என்பது ....

ஊழல் (Corruption) என்பது 'அதிகாரத்தை நேர்மையற்ற அல்லது மோசடியான முறையில் பயன்படுத்துவதாகும்.'

- ஒக்ஸ்போர்ட் அகராதி

-'குறிப்பாக பலம்பொருந்திய நபர்களின் சட்டவிரோத அல்லது நேர்மையற்ற நடத்தை' ஊழல் ஆகும்.

- மெரியம் வெப்ஸ்டர் அகராதி

4

ஊழல் தொடர்பான சில பொருள்கோடல்கள்

அரசாங்கப் பதவிகளை தமது தனிப்பட்ட பயனுக்காக தவறான முறையில் பயன்படுத்துவது ஊழலாகும்.

- உலக வங்கி

ஊழல் எனப்படுவது தனியார் துறை மற்றும் பொதுத் துறை உத்தியோகத்தர்களுக்கு இடையில் இடம்பெறுகின்ற பொதுப் பொருட்களை சட்ட விரோதமாக தனிப்பட்ட பொருட்களாக மாற்றியமைக்கும் கொடுக்கல் வாங்கல் ஆகும்.

5

ஊழல் என்பது ....

ஊழல் என்பது ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்தினை தனிப்பட்ட நலன்களுக்காக தவறான முறையில் பயன்படுத்துவதாகும்.

- ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் அமைப்பு

அரச உத்தியோகத்தர் அந்தரங்கத்தன்மை, உறவுமுறை, நட்பு, சொத்து அல்லது அதிகாரம் போன்ற தனிப்பட்ட நோக்கங்களின் காரணமாக பொறுப்புக்கள் மீறப்படும் வகையில் நடந்துகொள்ளல் ஊழலாகும்.

- கொலின் ஹே

6

பொதுச் சொத்துக்களுக்களுக்குப் பொறுப்பாகவுள்ள அரச உத்தியோகத்தர்கள் அச்சொத்துக்களை தனிப்பட்ட நலன்களுக்காகப் பயன்படுத்துகின்றனரா என்பதைத் தேடுவதானது நீரில் நீந்தும் மீன் அந்த நீரினைப் பருகுகின்றதா என்பதைக் கண்டறிவதைப் போன்று கடினமானது"

- கௌடில்ய அர்த்த சாஸ்திரம் (கி.மு.400)

7

"நீதவானைக் காண்பதற்குப் பணம் இருக்கும் பட்சத்தில் வழக்கு சரியாயினும், தவறாயினும் அதற்காக அச்சப்பட வேண்டியதில்லை, என்பது இந்த நாட்டில் ஒரு பிரசித்திபெற்ற கூற்றாக அமைந்துள்ளது."

கி.பி. 1681 இல் எழுதப்பட்ட ராபர்ட் நொக்ஸ் இன் "இலங்கைத் தீவு பற்றிய வராற்றுத் தொடர்பு"
(எதா ஹெலதிவ)

8

2002 ஆம் ஆண்டு ஊழலுக்கு எதிரான ஐக்கிய நாடுகளின் சமவாயம் கலந்துரையாடப்படுவதற்கு ஆரம்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் ஊழல் என்பதன் மூலம் உணர்த்தப்படும் பொருள் நாட்டுக்கு நாடு, கலாசாரத்திற்குக் கலாசாரம் வேறுபடுவதனால் அதனைத் துல்லியமாகப் பொருள்கோடல் செய்யாமல் அதற்குப் பதிலாக ஊழலின் வடிவங்களும் செயற்பாடுகளும் சில பிரதான எண்ணக்கருக்களின் கீழ் கலந்துரையாடப்படுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளன.

9

### ஊழல் பற்றிய இலங்கையின் சட்டரீதியான பொருள்கோடல்

(இலஞ்சச் சட்டத்தின் 70 ஆம் பிரிவின் படி)

"அரசாங்கத்திற்கு தவறான அல்லது சட்டவிரோதமான நட்டத்தை ஏற்படுத்துகின்ற அல்லது தமக்கு அல்லது எவரேனும் ஆளுக்கு தவறான அல்லது சட்ட விரோதமான நன்மையை சாதகமான பயனை அல்லது அனுகூலத்தை அளிக்கின்ற முன்னத்துடன் அல்லது தவறான அல்லது சட்டவிரோதமான நட்டம் அரசாங்கத்திற்கு அல்லது எவரேனும் ஆளுக்கு ஏற்படும் அல்லது தவறான அல்லது சட்டவிரோதமான நன்மை, சாதகமான பயன் அல்லது அனுகூலம் எவரேனும் ஆளுக்கு அளிக்கப்படும் என்னும் அறிவுடன்-

மேற்கொள்ளப்படும் ஒரு செயற்பாடு

10

அவையாவன,

(அ) பகிரங்க ஊழியர் ஒருவராக அவரது பதவியின் பயனைக் கொண்டு எந்தச் செயலைச் செய்வதற்கு அவர் தத்துவம் கொண்டிருக்கின்றாரோ ஏதேனும் செயலைப் புரியுமாறு அல்லது புரியாது தவிர்க்குமாறு வேறு எவரேனும் பகிரங்க அலுவலரைத் தூண்டுகின்ற

(ஆ) பகிரங்க ஊழியர் ஒருவராக அவரது பதவியின் பயனைக் கொண்டு அவரது அறிவுக்கு எட்டுகின்ற ஏதேனும் தகவலைப் பயன்படுத்துகின்ற

(இ) பகிரங்க ஊழியர் ஒருவராக அவரது பதவியின் பயனைக் கொண்டு ஏதேனும் முடிவு எடுப்பதில் பங்குபற்றுகின்ற

(ஈ) பகிரங்க ஊழியர் ஒருவராக நேரடியாகவோ மறைமுகமாகவோ ஏதேனும் செயலைப் புரிவதற்கு அல்லது புரியாமல் தவிர்ப்பதற்கு அவரது பதவியை பயன்படுத்துமாறு வேறு எவரேனும் ஆளைத் தூண்டுகின்ற, ஒரு செயற்பாடு ஊழலாகும்.

11



12

அரச உத்தியோகத்தர்களுக்கான ஊழல் எதிர்ப்புப் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்
துண்டுப்பிரசுரங்கள் - இலக்கம் 01

## ஊழல் என்றால் என்ன?

இலஞ்சம் மற்றும் ஊழல் என்பது மனித நாகரீகத்தின் ஆரம்பத்திலிருந்து உலகளாவிய நிகழ்வாக இடம்பெற்றுள்ளது என்பதற்கான சான்றுகள் வரலாறு பூராகவும் காணக்கிடைக்கின்றன. கி.மு.400 போன்ற காலப்பகுதியில் எழுதப்பட்டதாக கருதப்படுகின்ற கௌடில்யவின் அர்த்த சாஸ்திரம் நூலானது அரச உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்படுகின்ற ஊழல்களைப் புலனாய்வு செய்வதில் காணப்படுகின்ற சிரமம் தொடர்பாகக் குறிப்பிட்டு "பொதுச் சொத்துக்களுக்களுக்குப் பொறுப்பாகவுள்ள அரச உத்தியோகத்தர்கள் அச்சொத்துக்களை தனிப்பட்ட நலன்களுக்காகப் பயன்படுத்துகின்றனரா என்பதைத் தேடுவதானது நீரில் நீந்தும் மீன் அந்த நீரினைப் பருகுகின்றதா என்பதைக் கண்டறிவதைப் போன்று கடினமானது" என சுட்டிக்காட்டுகின்றது.

"நீதவானைக் காண்பதற்குப் பணம் இருக்கும் பட்சத்தில் வழக்கு சரியாயினும், தவறாயினும் அதற்காக அச்சப்பட வேண்டியதில்லை, என்பது இந்த நாட்டில் ஒரு பிரசித்திபெற்ற கூற்றாக அமைந்துள்ளது." என கி.பி. 1681 இல் எழுதப்பட்ட ராபர்ட் நொக்ஸ் இன் "இலங்கைத் தீவு பற்றிய வராற்றுத் தொடர்பு"எனும் நூலில் (எதா ஹெலதிவ) குறிப்பிடப்பட்டுள்ளது.

மதரீதியான கற்பித்தல்களிலும் ஆதிகாலம் தொட்டு ஊழல் தொடர்பாக பல்வேறுபட்ட வகையில் கலந்துரையாடப்பட்டுள்ளன. பௌத்த தத்துவத்தின் பிரகாரம் தசராஜ தர்மத்தின்படி அரசாட்சியை மேற்கொள்ளும்போது ஊழலின்றி அரசாட்சியை மேற்கொள்வதும், ஒவ்வொரு மட்டத்திலும் ஊழல் தொடர்பாக செயல்படுவதும் அரசனின் பொறுப்பாக கருதப்பட்டுள்ளன.

"திருடாதே" என இயேசு கிறிஸ்துவும் தமது சீடர்களுக்கு கூறியுள்ளார். பிரித்தானிய ஆட்சி காலத்தில் 1883 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட தண்டனைச் சட்டக் கோவையின் மூலம் ஊழலின் பிரதான வகையினமொன்றாகிய இலஞ்சம் ஆனது இலங்கையில் சட்ட ரீதியான ஒரு தவறாக பெயரிடப்பட்டுள்ளது.

## ஊழல் பற்றிய பல்வகையான பொருள்கோடல்கள்

ஊழல் என்றால் என்ன? என்பது தொடர்பாக மிகவும் ஆழமாக ஆராயும்போது அது தொடர்பாக இதுவரையும் உலகம் பூராகவும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட துல்லியமானதொரு பொருள்கோடல் முன்வைக்கப்படவில்லை எனத் தெரிகின்றது. இருப்பினும் ஊழல் என்பது எத்தகையதொரு நிகழ்வு என்பதனை இலகுவாகப் புரிந்துகொள்ளச் செய்கின்ற பல்வகையான பல பொருள்கோடல்கள் ஊழல் தொடர்பாக ஆராயும்போது காணக்கிடைக்கின்றன. ஒக்ஸ்போர்ட் அகராதியின் பிரகாரம் ஊழல் (Corruption) என்பதன் பொருள் "அதிகாரத்தை நேர்மையற்ற அல்லது மோசடியான முறையில் பயன்படுத்துவதாகும்." மெரியம் வெப்ஸ்டர் அகராதியானது ஊழலை "குறிப்பாக பலம்பொருந்திய நபர்களின் சட்டவிரோத அல்லது நேர்மையற்ற நடத்தை" எனப் பொருள்கோடல் செய்கின்றது.

**பல்வேறுபட்ட அமைப்புகளால் முன்வைக்கப்பட்டுள்ள அத்தகைய மேலும்சில பொருள்கோடல்கள் பின்வருமாறு அமைகின்றன.**

- அரசாங்கப் பதவிகளை தமது தனிப்பட்ட பயனுக்காக தவறான முறையில் பயன்படுத்துவது ஊழலாகும். - உலக வங்கி
- இலஞ்சம் பெற்றுக்கொள்ளும் நபரால் மேற்கொள்ளப்பட வேண்டிய கடமை அல்லது அவரால் இடம்பெறவேண்டிய நடத்தை முறையிலிருந்து மாற்றமடையும் வகையில் நேரடியாக அல்லது மறைமுகமாக இலஞ்சம் அல்லது வேறு தவறான அனுகூலம் கோருதல், அளித்தல், வழங்குதல் அல்லது பெற்றுக்கொடுத்தல் ஊழல் ஆகும். - ஐரோப்பிய ஒன்றியம்.
- ஊழல் என்பது ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்தினை தனிப்பட்ட நலன்களுக்காக தவறான

முறையில் பயன்படுத்துவதாகும். - ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் அமைப்பு

- அரச உத்தியோகத்தர் அந்தரங்கத்தன்மை, உறவுமுறை, நட்பு, சொத்து அல்லது அதிகாரம் போன்ற தனிப்பட்ட நோக்கங்களின் காரணமாக பொறுப்புக்கள் மீறப்படும் வகையில் நடந்துகொள்ளல் ஊழலாகும். - கொலின் ஹே
- ஊழல் எனப்படுவது தனியார் துறை மற்றும் பொதுத் துறை உத்தியோகத்தர்களுக்கு இடையில் இடம்பெறுகின்ற பொதுப் பொருட்களை சட்ட விரோதமாக தனிப்பட்ட பொருட்களாக மாற்றியமைக்கும் கொடுக்கல் வாங்கல் ஆகும். - ஈடின் ஹோம்ஸ்

ஆழமான பொருளில் நோக்கும்போது மேற்படி பல்வகையான பொருள்கோடல்களின் பிரகாரம் ஊழல் என்பது பொதுத்துறைக்கு மட்டும் வரையறுக்கப்பட முடியாத, வர்த்தகத் துறையினரால் அரசியல்வாதிகளுக்கும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் இலஞ்சம் வழங்கப்படுதல் போன்ற சம்பவங்கள் தொடக்கம் பொதுத்துறை மற்றும் தனியார்துறை ஆகிய இருதுறைகளிலும் நலன்களுக்காக அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்துகின்ற, உயர் - கீழ் மட்டங்களைச் சேர்ந்தவர்களின் சட்டத்திற்கு எதிரான செயற்பாடுகளும் கொடுக்கல்-வாங்கல்களும் வரை விரிவான பரம்பலில் வியாபித்துள்ளதொரு நிகழ்வு என்பது தெளிவாகின்றது.

2002 ஆம் ஆண்டு ஊழலுக்கு எதிரான ஐக்கிய நாடுகளின் சமவாயம் கலந்துரையாடப்படுவதற்கு ஆரம்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் ஊழல் என்பதன் மூலம் உணர்த்தப்படும் பொருள் நாட்டுக்கு நாடு, கலாசாரத்திற்குக் கலாசாரம் வேறுபடுவதனால் அதனைத் துல்லியமாகப் பொருள்கோடல் செய்யாமல் அதற்குப் பதிலாக ஊழலின் வடிவங்களும் செயற்பாடுகளும் சில பிரதான எண்ணக்கருக்களின் கீழ் கலந்துரையாடப்படுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளன.

## ஊழல் பற்றிய இலங்கையின் சட்டரீதியான பொருள்கோடல்

ஊழல் என்றால் என்ன? என்பது தொடர்பில் சர்வதேச ரீதியில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட துல்லியமானதொரு பொருள்கோடல் இல்லாதபோதிலும் சட்ட ரீதியான தேவைப்பாடுகளின் நிமித்தம் இலங்கைக்குரியதாக ஊழல் என்பது தொடர்பில் தெளிவானதொரு பொருள்கோடல் வகுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. அப்பொருள்கோடல் 1994 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலஞ்ச, (திருத்தம்) சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1954 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க இலஞ்சச் சட்டத்தின் 70 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**அப்பிரிவின் பிரகாரம் ஊழல் என்பது,**

"அரசாங்கத்திற்கு தவறான அல்லது சட்டவிரோதமான நட்டத்தை ஏற்படுத்துகின்ற அல்லது தமக்கு அல்லது எவரேனும் ஆளுக்கு தவறான அல்லது சட்ட விரோதமான நன்மையை சாதகமான பயனை அல்லது அனுகூலத்தை அளிக்கின்ற முன்னத்துடன் அல்லது தவறான அல்லது சட்டவிரோதமான நட்டம் அரசாங்கத்திற்கு அல்லது எவரேனும் ஆளுக்கு ஏற்படும் அல்லது தவறான அல்லது சட்டவிரோதமான நன்மை, சாதகமான பயன் அல்லது அனுகூலம் எவரேனும் ஆளுக்கு அளிக்கப்படும் என்னும் அறிவுடன்-

- பகிரங்க ஊழியர் ஒருவராக அவரது பதவியின் பயனைக் கொண்டு எந்தச் செயலைச் செய்வதற்கு அவர் தத்துவம் பெற்றிருக்கின்றாரோ அந்த ஏதேனும் செயலைச் செய்கின்ற அல்லது செய்யாது தவிர்க்கின்ற,
- அத்தகைய வேறு எவரேனும் பகிரங்க ஊழியரை, பகிரங்க ஊழியர் ஒருவராக அவரது பதவியின் பயனைக் கொண்டு எந்தச் செயலைச் செய்வதற்கு அவர் தத்துவம் கொண்டிருக்கின்றாரோ ஏதேனும் செயலைப் புரியுமாறு அல்லது புரியாது தவிர்க்குமாறு வேறு எவரேனும் பகிரங்க அலுவலரைத் தூண்டுகின்ற,
- பகிரங்க ஊழியர் ஒருவராக அவரது பதவியின் பயனைக் கொண்டு அவரது அறிவுக்கு எட்டுகின்ற ஏதேனும் தகவலைப் பயன்படுத்துகின்ற,
- பகிரங்க ஊழியர் ஒருவராக அவரது பதவியின் பயனைக் கொண்டு ஏதேனும் முடிவு எடுப்பதில் பங்குபற்றுகின்ற,
- பகிரங்க ஊழியர் ஒருவராக நேரடியாகவோ மறைமுகமாகவோ ஏதேனும் செயலைப்

புரிவதற்குஅல்லது புரியாமல் தவிர்ப்பதற்கு அவரது பதவியை பயன்படுத்துமாறு வேறு எவரேனும் ஆளைத் தூண்டுகின்ற,ஒரு செயற்பாடு ஊழல் என பொருள்கோடல் செய்யப்பட்டுள்ளது.

இலஞ்சச் சட்டத்தின்படி அத்தகைய செயற்பாடு ஒரு குற்றவியல் தவறாகும். அத்தவறு தொடர்பாக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிற்கு புலனாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோடு ஊழல் குற்றமானது பிடியாணையின்றி கைது செய்யக்கூடிய ஒரு தவறாகக் கருதப்படுகின்றது. ஊழல் குற்றத்திற்கு 1994 ஆம் ஆண்டின் 20 இலக்க இலஞ்ச, (திருத்தம்) சட்டத்தின்படி நீதவான் நீதிமன்றத்தில் நடத்தப்படுகின்ற சுருக்கமுறையிலான விளக்கத்தின் மீது குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் அடிப்படையில் பத்து ஆண்டுகளை விஞ்சாதவொரு மறியற்றண்டனைக்கு அல்லது ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப் பணத்திற்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப் பணம் ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும். பின்னர் 2018 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க இலஞ்ச,(திருத்தம்) சட்டத்தின் மூலம் இலஞ்சம் பற்றிய வழக்குகளை முன்னெடுத்துச் செல்லல் மேல் நீதிமன்றத்திற்கு ஒப்படைக்கப்பட்டது.

## கலாநிதி கிளிட்கார்டின் ஊழல் பற்றிய சூத்திரம்

உலகம் பூராகவும் காணப்படுகின்ற உள்ளூராட்சி முறைகள் தொடர்பாக கற்கையில் ஈடுபட்ட பொருளியல் பற்றிய பேராசிரியர் ராபர்ட் கிளிட்கார்ட் (Robert Klitgaard) ஊழலின் இருப்பபின் மீது தாக்கம் ஏற்படுத்துகின்ற காரணிகள் மற்றும் அவை ஊழலின் ஏற்றத்தாழ்வின் மீது தாக்கம் ஏற்படுத்துகின்ற விதம் என்பன தொடர்பாக மிகவும் எளிமையான சூத்திரம் ஒன்றின் மூலம் தெளிவுபடுத்தியுள்ளார்.

கிளிட்கார்டின் சூத்திரம் என அழைக்கப்படுகின்ற இத் தெளிவுபடுத்தலின் மூலம் ஏகபோக உரிமைக்கான நிலைமை காணப்படுகின்ற சந்தர்ப்பத்தில் ஓர் அரச ஊழியர் குறிப்பிட்ட தத்துவங்களை

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஊழல் | = | ஏகபோகஉரிமை | + | தற்றுணிபு அதிகாரம் | - | வகைப்பொறுப்பு |
| Corruption | = | Monopoly | + | Discretion | - | Accountability |

நடைமுறைப்படுத்துவதற்கான தற்றுணிபு அதிகாரத்தைக் கொண்டுள்ள அதேவேளை அவர் எவ்வித வகைப்பொறுப்புக்கும் உள்ளாகாவிடத்து அங்கு ஊழல் நிலைமை ஏற்படுவதாக சுட்டிக்காட்டப்படுகன்றது. வினைத்திறன் மற்றும் பயனுறுதிமிக்க அரச துறையொன்றில் கட்டுப்படுத்தப்பட்ட தற்றுணிபு அதிகாரத்தைப் பேணி வருவதும், தற்றுணிபு அதிகாரத்திற்கும் வகைப்பொறுப்புக்கும் இடையில் சிறந்த சமநிலையைப் பேணிவருவதும் அவசியமானதென அவர் மேலும் சுட்டிக்காட்டுகின்றார்.

எனவே ஊழலைக் குறைப்பதற்காக ஏகபோக உரிமையையும் தற்றுணிபு அதிகாரத்தினையும் குறைக்கின்ற அதேவேளை வகைப்பொறுப்பினை அதிகரிப்பது தொடர்பாகவும் கவனம் செலுத்த வேண்டியது

# PPT-02 ஊழலின் பல்வேறுபட்ட வடிவங்கள்

ஊழலின் பல்வேறுபட்ட வடிவங்கள்

1

## பாரியளவிலாள மற்றும் சிறிய அளவிலான ஊழல்கள்

பாரியளவிலான ஊழல்கள் (புசயனெ ஊழசசரிவழைெ)- அரசாங்கத்தின் மேல் மட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற ஊழல்களாகும்.

சிறிய அளவிலான ஊழல்கள் (நவவல ஊழசசரிவழைெ) - கொள்கைகள் நடைமுறைபடுத்தப்படுகின்ற சந்தர்ப்பத்தில் நிருவாகச் செயன்முறையில் இடம்பெறுகின்ற ஊழல்களாகும்.

2

## ஊழலின் வகையினங்கள்

ஐக்கிய நாடுகளின் ஊழலுக்கு எதிரான சமவாயத்தின் பிரகாரம் பின்வரும் ஊழல் செயற்பாடுகள் சார்பாக ஓர் அரசு குற்றவியல் பொறுப்பினைச் சாட்டுவதற்காக சட்டங்களை வகுக்க வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலஞ்சம்
உத்தியோகத்தர் ஒருவரால் சொத்துக்கள் தவறான வகையில் பயன்படுத்தப்படுதல்
அழுத்தம் பிரியோகிக்கப்படுதல்
பதவிகளைப் தவறாகப் பயன்படுத்துதல்
நியாயமற்ற செல்வமீட்டல்
குற்றச்செயல்களிலிருந்து கிடைக்கப்படும் பணத் துய்த்தாக்கல்
நீதி நிர்வாகத்திற்கு தடை ஏற்படுத்துதல்

3

## இலஞ்சம் (Bribery)

ஊழலின் மிகவும் பிரபல்யமான விதமாகும்.
இலஞ்சம் என்பது சட்டத்திற்கு முரணாக பரிமாறும் அவாநிறைவாகும். ஏதேனும் பணியினை நிறைவேற்றிக்கொள்வதற்காக அல்லது ஏதேனும் தீர்மானம் தொடர்பில் தவறான முறையில் அழுத்தம் பிரியோகிப்பதற்காக அவாநிறைவு பரிமாறப்படுகின்றது.

குறிப்பிட்ட பணி நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் முன்கூட்டிய செலுத்தலாக அல்லது "பின்னரான செலுத்தலாக" இது பரிமாறலாம்.

அவாநிறைவு என்பதில் - பணம், பெறுமதியான பொருட்கள், கம்பபெனிப் பங்குகள், வாகனங்கள், உள்ளக இரகசியத் தகவல்கள் மட்டுமன்றி பாலியல் ரீதியான அல்லது வேறு ஏதேனும் வகையிலான செலுத்தல் உள்ளடங்கும்.

4

## இலஞ்சம் (Bribery)

ஊழலின் மிகவும் பிரபல்யமான விதமாகும்.
இலஞ்சம் என்பது சட்டத்திற்கு முரணாக பரிமாறும் அவாநிறைவாகும். ஏதேனும் பணியினை நிறைவேற்றிக்கொள்வதற்காக அல்லது ஏதேனும் தீர்மானம் தொடர்பில் தவறான முறையில் அழுத்தம் பிரியோகிப்பதற்காக அவாநிறைவு பரிமாறப்படுகின்றது.

குறிப்பிட்ட பணி நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் முன்கூட்டிய செலுத்தலாக அல்லது "பின்னரான செலுத்தலாக" இது பரிமாறலாம்.

அவாநிறைவு என்பதில் - பணம், பெறுமதியான பொருட்கள், கம்பபெனிப் பங்குகள், வாகனங்கள், உள்ளக இரகசியத் தகவல்கள் மட்டுமன்றி பாலியல் ரீதியான அல்லது வேறு ஏதேனும் வகையிலான செலுத்தல் உள்ளடங்கும்.

5

## பதவிகளை தவறாகப் பயன்படுத்துதல்

அரச ஊழியர் ஒருவரால் தமது பணி அல்லது பதவி தவறாகப் பயன்படுத்தப்படுதல்,

அதாவது, எவரேனும் அரச ஊழியருக்காக அல்லது வேறொரு நபருக்காக நேர்மையற்ற அனுகூலத்தை பெற்றுக்கொள்வதற்காக சட்டங்களை மீறி ஏதேனும் செயலைப் புரிதல் அல்லது வேண்டுமென்றே புரியாது தவிர்த்தல்.

6

## மோசடி

ஒருவரது அல்லது மூன்றாம் தரப்பினரது நன்மைக்காக வேறொரு நபரை ஏமாற்றுவதற்காக செயற்படுவது மோசடியாகும்.

### பலவந்தம்

ஏதேனும் செயலைப் புரிவதற்காக அல்லது புரியாதிருப்பதற்காக பெறுமதியான ஒரு பொருள் அல்லது பணம் தருமாறு கட்டாயப்படுத்துதல் பலவந்தம் ஆகும்.

7

## சட்டத்திற்கு எதிரான கையூட்டல்கள், பணிக்கொடை, கமிஷன் பெற்றுக்கொள்ளல்

அரசாங்கத்துடன் ஏதேனும் செயற்பாட்டினை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கின்ற தரப்பொன்றிலிருந்து ஏதேனும் பெறுமதி, பணம், இலாபம் பெற்றுக்கொள்ளப்படுதல் இதன் மூலம் கருதப்படுகின்றது. அரச ஊழியர் ஒருவர் கேள்விப்பத்திரங்களை அங்கீகரிப்பதற்காக பணம் அல்லது கமிஷன் கோருவது உதாரணமாகும்.

8

### முறையற்ற பாரபட்சம்

தனிப்பட்ட அறிமுகம், கட்சி நட்புறவு, இனம், மதம், சாதி அல்லது வேறு விருப்பத்தின் அடிப்படையில் அரச ஊழியர் ஒருவரால் சேவை அல்லது வளங்கள் வழங்கப்படுதல் இதில் உள்ளடங்கும். அரசியல் தொடர்புகளின் அடிப்படையில் தொழில் வாய்ப்புகள் வழங்கப்படுவதும் சேவைகள் வழங்கப்படுவதும் இதற்கான உதாரணங்களாகும்.

9

குழுச் செயற்பாட்டுக்கான வினாக்கொத்து
PPT - 02 / இணைப்பு 01

## ஊழலின் பல்வேறுபட்ட வடிவங்களை இனங்காண்பதற்கான குறுகிய வினாக்கொத்து

**பின்வரும் சம்பவங்களை இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய குற்றங்களாக கருத முடியுமா? "உமது கருத்தின் பிரகாரம் அது இலஞ்சம் தொடர்பான ஒரு குற்றமா? ஊழல் தொடர்பான ஒரு குற்றமா?" குறித்த குற்றமானது ஊழலின் எந்த வகையினத்திற்குள் வருகின்றது?**

1. பதவியுயர்வு தொடர்பாக துரிதமாக ஆராய்ந்து பார்க்க வேண்டுமானால் தமக்கும் உயர் வகையிலான கவனிப்பு கிடைக்கப்பட வேண்டுமென நிறுவனத் தலைவர் சுரங்கியிடம் கூறுகின்றார்.
2. சத்திரசிகிச்சையை ஆரம்பிப்பதற்கு முன்னர் தாம் கோரியுள்ள விலைக்கு காணியை விற்க முடியுமா? இல்லையா? என்பது தொடர்பாக மீண்டும் ஒருமுறை சிந்தித்து முடிவைத் தெரிவிக்குமாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள தமது அயலவரிடம் மருத்துவர் கேட்கின்றார்.
3. தமது நலன்புரிச் சங்கத்தின் வருடாந்த சுற்றுலாவிற்கான வதிவிட கட்டணப் பட்டியலை செலுத்துவதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகளை பெற்றுத்தர முடியுமாயின் பயங்கரவாத குற்றச் செயல்களின் கீழ் விசாரணைக்காக கைது செய்யப்பட்டுள்ள சிறிமெவன் என்பவரை விடுதலை செய்ய முடியும் எனவும், பொதுவான இந்த வேண்டுகோளை கருத்திற்கொள்ள முடியாதெனில் அவரை மேற்கொண்டும் தடுப்புக் கட்டளையின் மீது சிறையில் அடைத்து வைக்க நேரிடுமெனவும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சிறிமெவனின் மனைவியிடம் தெரிவிக்கின்றார்.
4. தமது அமைச்சரிடம் கேட்டு சுயாதீன ஆணைக்குழுவொன்றில் நிரந்தரமான உயர் பதவி ஒன்றைப் பெற்றுத்தர முடியுமெனத் தெரிவித்து அமைச்சரின் அலுவலகப் பதவியணியைச் சேர்ந்த அலுவலக உதவியாளரான நந்தசேன என்பவர் பட்டதாரியான பூர்ணஜீவனின் உயிரியல் தரவுப் பத்திரமொன்றுடன் ஒரு இலட்சம் ரூபாய் பணம் கோருகின்றார்.
5. நகர சபைக் கட்டடத்தில் பூசுவதற்காக கொண்டுவரப்பட்டுள்ள 10 லீட்டர் சாயமும் சாயம் பூசுகின்ற நான்கு தொழிலாளர்களையும் தனது வீட்டுக்கு அனுப்பி அன்னதான நிகழ்வுக்கு முன்னர் வீட்டின் திருத்தப்பணிகளை பூர்த்திசெய்து தருமாறு நகரசபையின் ஒரு உயரதிகாரி வேலை அத்தியட்சகருக்கு தொலைபேசியின் மூலம் அறிவிக்கின்றார். குறிப்பிட்ட 10 லீட்டர் சாயத்திற்குப் பதிலாக மேலும் 10 லீட்டர்களை நகர சபைக்கு அனுப்புமாறு தாம் சாயக் கம்பெனிக்கு அறிவித்துள்ளதாகவும் அவர் மேலதிகமாகவும் குறிப்பிடுகின்றார்.
6. அமைச்சரின் அந்தரங்கச் செயலாளரினால் தயாரிக்கப்பட்டு அனுப்பப்பட்ட காணி உரித்து கிடைக்கப்படவேண்டியவர்களின் பெயரிடாப்பில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள ஆதரவாளர்களுக்கு முறைசார் நேர்முகப் பரீட்சையில் குறைந்த புள்ளிகள் கிடைத்திருப்பதனால் அவர்களுக்கு போதியளவு புள்ளிகள் கிடைக்கும் வகையில் குறிப்பிட்ட ஆவணத்தைத் திருத்தியமைக்குமாறு நிறுவனத் தலைவர் நேர்முகப்பரீட்சை குழுவிற்கு ஆலோசனை வழங்குகின்றார்.

அரச உத்தியோகத்தர்களுக்கான ஊழல் எதிர்ப்புப் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்
துண்டுப்பிரசுரம் - இலக்கம் 02

## ஊழலின் பல்வேறுபட்ட வடிவங்கள்

ஊழல் என்பதனை அதன் பல்வேறுபட்ட வடிவங்களையும் செயற்பாடுகளையும் அடிப்படையாகக் கொண்டு இலஞ்சம் (Bribery), பொதுநிதி மோசடி, மோசடி(ஏமாற்றுதல்), பலவந்தமாக பணம் பெற்றுக்கொள்ளல் போன்றவகையில் வகைப்படுத்த முடியும். இந்த எண்ணக்கருக்கள் பகுதியளவில் ஒன்றின் மீது ஒன்று செயற்படுகின்றபோதும், ஏனைய எண்ணக்கருக்களுடன் பரஸ்பர ரீதியில் பரிமாறுகின்றபோதும் ஊழலின் சிற்சில அடிப்படைப் பண்புகளை இந்த எண்ணக்கருக்களின் மூலம் இனங்காண முடியும்.

ஊழல் தொடர்பாக குறிப்பிடப்படுகின்ற பெரும்பாலான சந்தர்ப்பங்களில் “ஊழல் - மோசடி”, “இலஞ்சம் - ஊழல்” என்ற வகையில் இணைமொழிச் சொற்களாக பயன்படுத்தப்படுகின்ற போதிலும் இலஞ்சம் அல்லது மோசடி எனப்படுவது ஊழலினுள் காணப்படுகின்ற ஒரு வடிவமல்ல மாறாக ஒன்றுடனொன்று வேறுபடுகின்ற இரு வடிவங்களாகும்.

### பாரியளவிலான ஊழல்களும் சிறிய அளவிலான ஊழல்களும்

ஊழலை, பாரியளவிலான ஊழல் (Grand Corruption) மற்றும் சிறிய அளவிலான ஊழல் (Petty Corruption) என இரண்டு பிரதான பகுதிகளின் கீழ் வகைப்படுத்த முடியும். பாரியளவிலான ஊழல் என்பது அரசாங்கத்தின் உயர்மட்டத்தில் இடம்பெறுகின்ற ஊழலாகும். வற் வரி மோசடி, பிணைமுறி கொடுக்கல்-வாங்கல் போன்ற முதன்மையான ஊழல்கள் பாரியளவிலான ஊழல்களுக்கு உதாரணங்களாகும்.

சிறிய அளவிலான ஊழல் எனப்படுவது கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் நிர்வாகச் செயன்முறையில் இடம்பெறுகின்ற ஊழலாகும். அன்றாட தினப்பணிகளை நிறைவேற்றிக்கொள்ளும்போது பொதுமக்களால் வழங்கப்படவேண்டி ஏற்படுகின்ற கையூட்டல்கள் சிறிய அளவிலான ஊழல்களுக்கு உதாரணங்களாகும்.

### ஐக்கிய நாடுகளின் ஊழலுக்கு எதிரான சமவாயத்தின் பிரகாரம் ஊழலின் வகையினங்கள்

ஐக்கிய நாடுகளின் ஊழலுக்கு எதிரான சமவாயத்தின் பிரகாரம் பின்வரும் ஊழல் செயற்பாடுகளுக்காக குற்றவியல் குற்றப் பொறுப்பினை சாட்டுவதற்காக ஓர் அரசினால் சட்டங்கள் வகுக்கப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

- இலஞ்சம்
- உத்தியோகத்தர் ஒருவரால் சொத்துக்கள் தவறான முறையில் பயன்படுத்தப்படுதல்
- அழுத்தம் பிரியோகிக்கப்படுதல்
- பதவிகளைப் தவறாகப் பயன்படுத்துதல்
- நியாயமற்ற செல்வமீட்டல்
- குற்றச்செயல்களிலிருந்து கிடைக்கப்படும் பணத் தூய்த்தாக்கல்
- நீதி நிர்வாகத்திற்குத் தடை ஏற்படுத்துதல்

### இலஞ்சம் (Bribery)

ஊழலின் மிகவும் பிரபல்யமான வகை இலஞ்சமாகும். இலஞ்சம் என்பது சட்டத்திற்கு முரணாக பரிமாறும் அவாநிறைவாகும். ஏதேனும் பணியை நிறைவேற்றிக்கொள்வதற்காகவோ அல்லது ஏதேனும் தீர்மானம் தொடர்பில் தகாத முறையில் அழுத்தம் பிரயோகிப்பதற்காகவோ ஏதேனும் அனுகூலத்தை வழங்குதல், வழங்குவதற்கு வாக்குறுதியளித்தல் அல்லது வழங்குவதற்கு விருப்பம் தெரிவித்தல் இதன்போது இடம்பெறுகின்றது. இலஞ்சத்திற்கான கொடுக்கல்-வாங்கலானது இரு தரப்பினதும் பரஸ்பர

புரிந்துணர்வின் அடிப்படையிலேயே இடம்பெறுகின்றது. இலஞ்சம் என்பது சம்பந்தப்பட்ட பணி நிறைவேற்றப்படுவதற்கு முன்னரான செலுத்தலாகவோ அல்லது சம்பந்தப்பட்ட பணி நிறைவேற்றப்பட்டதன் பின்னர் மேற்கொள்ளப்படுகின்ற "பின்னரான செலுத்தலாகவோ" பரிமாறமுடியும். இச்செலுத்தல் அல்லது அவாநிறைவு என்பதில் நிதி ரீதியான பெறுமதியுடன்கூடிய பணம், பெருமதியான பொருட்கள், கம்பெனிப் பங்குகள், வாகனங்கள், உள்ளக இரகசிய தகவல்கள் மட்டுமன்றி பாலியல் ரீதியான அல்லது வேறு அனுகூலங்களை வழங்குதல் போன்ற எவ்வகையான செலுத்தலும் உள்ளடங்கும்.

ஒரு செயற்பாட்டினை நிறைவேற்றிக்கொள்வதற்காக மட்டுமன்றி ஒரு செயற்பாட்டினை நிறைவேற்றாதிருப்பதற்காகவும், முடிவெடுக்கக்கூடிய உத்தியோகத்தர் ஒருவர் குறிப்பிட்ட பொறுப்பினை பொருட்படுத்தாதிருக்கும் நிலைமையை ஏற்படுத்திக்கொள்வதற்காகவும் சட்டத்திற்கு முரணான மேற்படி அவாநிறைவு வழங்கப்படுதல் இடம்பெறலாம். இலஞ்சம் கோருதல் அல்லது பெறுதல் மட்டுமன்றி இலஞ்சம் வழங்குவதற்கு முயற்சித்தல் அல்லது வழங்குதல் என்பனவும் சட்டத்தின் முன்னால் சமமான குற்றங்களாகக் கருதப்படுகின்றன.

அரச ஊழியர் ஒருவரால் இலஞ்சம் பெறப்படுதல் அல்லது அரச ஊழியர் ஒருவருக்கு இலஞ்சம் வழங்கப்படுதல் மட்டும் இலங்கையின் சட்டத்தில் குற்றச் செயல்களாக இனங்காணப்பட்டுள்ளன. இலங்கையில் தனியார் துறையில் இடம்பெறுகின்ற இலஞ்சச் செயற்பாடுகள் இன்னமும் குற்றவியல் சட்டத்தின் ஒரு பகுதியாக அமையவில்லை. சர்வதேச ஊழலுக்கு எதிரான சமவாயத்தின் பிரகாரம் அரச ஊழியர்களுக்கான இலஞ்சம், வெளிநாட்டு அரச ஊழியர்களுக்கான இலஞ்சம் மற்றும் சர்வதேச அரச அமைப்புகளின் உத்தியோகத்தர்களுக்கான இலஞ்சம் என்பனவும் குற்றவியல் குற்றங்களாக இணங்காணப்பட்டுள்ளன.

### உத்தியோகத்தர் ஒருவரால் சொத்துக்கள் தவறான முறையில் பயன்படுத்தப்படுதல்

அரச உத்தியோகத்தர் ஒருவரின் பதவியின் பிரகாரம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள ஏதேனும் சொத்தினை, பொது அல்லது தனிப்பட்ட நிதியினை அல்லது பிணை அல்லது பெறுமதியான ஒரு பொருளை குறிப்பிட்ட அரச உத்தியோகத்தர் அவரது அல்லது வேறொரு ஆளின் தவறான அனுகூலத்திற்காக மோசடி செய்வது அல்லது தவறாகப் பயன்படுத்துவது ஊழலாகும்.

### அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுதல்

ஏதேனும் செயப்பாட்டினை நிறைவேற்றுமாறு ஆரம்பத்தில் கோரிய நபருக்கு அல்லது வேறொரு நபருக்கு அரச தரப்பின் நிர்வாக அல்லது அரச அதிகார சபையிலிருந்து தவறான அனுகூலத்தைப் பெற்றுக்கொள்ளும் எண்ணத்துடன் அரச உத்தியோகத்தர் அல்லது வேறொரு நபர் அவரது செல்வாக்கினைப் பயன்படுத்துவதற்காக குறிப்பிட்ட அரச உத்தியோகத்தருக்கு தவறான அனுகூலத்தை நேரடியாகவோ வேறுவிதமாகவோ பெற்றுக்கொடுப்பதற்கு வாக்குறுதியளித்தல் அல்லது முன்மொழிதல் அழுத்தம் பிரயோகிக்கப்படுதலாக அழைக்கப்படுகின்றது.

ஏதேனும் தவறான அனுகூலத்தை அரச தரப்பின் நிர்வாக அல்லது அரச அதிகார சபையொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளும் எண்ணத்துடன் அரச உத்தியோகத்தர் ஒருவர் அல்லது வேறொரு நபர் அவரது செல்வாக்கினைப் பயன்படுத்துவதற்காக குறிப்பிட்ட அரச உத்தியோகத்தருக்கு தவறான அனுகூலத்தை நேரடியாகவோ அல்லது வேறு விதமாகவோ பெற்றுக்கொடுப்பதற்குக் கோருதல் அல்லது பெற்றுக்கொள்வதற்கு அழுத்தம் பிரயோகித்தல் என்பனவும் இதில் உள்ளடங்கும்.

### பதவிகளைப் தவறாகப் பயன்படுத்துதல்

எவரேனும் அரச உத்தியோகத்தர் தமது செயற்பொறுப்பினை அல்லது பதவியை தவறாகப் பயன்படுத்துதல். அதாவது, எவரேனுமொரு அரச உத்தியோகத்தருக்காக அல்லது வேறொரு நபருக்காக தவறான அனுகூலத்தைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கையின் பொருட்டு அவரது செயற்பொறுப்பினை நிறைவேற்றும்போது சட்டத்தை மீறி ஏதேனும் செயற்பாட்டினைப் புரிவது அல்லது வேண்டுமென்றே

புரிவதனைத் தவிர்ப்பது.

### நியாயமற்ற முறையில் பணம் ஈட்டல்

சட்டவிரோதமாக பணம் ஈட்டல் அதாவது அரச உத்தியோகத்தர் ஒருவரின் சட்டரீதியான வருமானத்திற்குரியதாக அவரால் நியாயமான முறையில் தெளிவுபடுத்த முடியாதளவு சொத்துக் குவிப்பினை ஏற்படுத்தியிருக்கும்போது அது சட்டவிரோத செல்வமீட்டலாக அமைகின்றது.

### குற்றச்செயல்களிலிருந்து கிடைக்கப்பெறும் பணத்தை தூய்மையாக்குதல்

ஏதேனுமொரு சொத்தினை சட்டவிரோத முறையில் பெற்றுக்கொண்டு அதன் சட்டவிரோத ஆரம்பத்தினை மறைத்தல் அல்லது மூடி மறைப்பதற்காக குறிப்பிட்ட சொத்தினை மாற்றியமைத்தல் அல்லது சாட்டுதல் தூய்மையாக்குதல் ஆகும்.

மேற்கூறப்பட்ட விதங்களுக்கு மேலதிகமாக பின்வரும் வடிவங்களிலான செயற்பாடுகளும் ஊழலாக அழைக்கப்படுகின்றன.

### மோசடி

ஒருவரது அல்லது மூன்றாம் தரப்பினரது நன்மைக்காக வேறொரு நபரை ஏமாற்றுவதற்காக செயற்படுவது இப்பெயரால் அழைக்கப்படுகின்றது. நோயாளர்களுக்கு அரச உதவிகள் வழங்கப்படுகின்ற சந்தர்ப்பமொன்றில் அரச மருத்துவரிடமிருந்து போலியான சான்றிதழைப் பெற்றுக்கொண்டு மேற்படி உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்காக செயற்படுவது இந்த வடிவத்திலான குற்றமாகும்.

### பலவந்தம்

ஏதேனும் செயலைப் புரிவதற்காக அல்லது புரியாதிருப்பதற்காக பெறுமதியான ஒரு பொருள் அல்லது பணம் தருமாறு கட்டாயப்படுத்துதல் பலவந்தம் ஆகும். இதனை மேற்கொள்ளாதிருத்தல், உடல் ரீதியான சித்திரவதை மற்றும் காயப்படுதல் வரை பாரதூரமடையலாம். நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள ஒருபெண் மருத்துவரை அழைக்குமாறு தாதியைக் கோரும்போது தமக்கு அதற்காகப் பணம் தருமாறு குறிப்பிட்ட வார்ட்டுக்குப் பொறுப்பாகவுள்ள தாதி கட்டாயப்படுத்துவது இந்த வடிவத்திலான ஒரு குற்றமாகும். அதனை புரியாதிருப்பதன் மூலம் சம்பந்தப்பட்ட பெண் மரணிக்கவும் வாய்ப்புள்ளது

### தீர்மானம் மேற்கொள்வதற்கான அதிகாரத்தைத் து்பிரயோகம் செய்தல்

ஒருவர் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி ஒரு குழுவினருக்கு முறையற்ற அனுசரணை வழங்குதல் அல்லது பாகுபாடு காட்டுதல் ஆனது இக்குற்றத்தில் உள்ளடங்கும். சட்டத்தை தவறாகப் பயன்படுத்தும்போது அல்லது தனித்துவமான தீர்மானங்களை நியாயப்படுத்துவதற்கு முறைசார் சட்டங்கள் அல்லது முறையியல்கள் இல்லாதபோது நிதமும் அதிகாரத் துஷ்பிரயோகம் இடம்பெறுவதைக் காணமுடியும்.

### தேவைகள் பற்றிய மோதலிலிருந்து முறையற்ற இலாபம் ஈட்டப்படுதல்/உள்ளக வர்த்தகம்

நியாயமற்ற செல்வமீட்டல் எனும் நோக்கத்துடன் ஒருவரின் பதவிக்கு உட்படாத கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுதல், அந்தஸ்து அல்லது வர்த்தக இலாபம் பெறுதல் இதன்மூலம் கருதப்படுகின்றது. உதாரணமாக ஒரு அரச உத்தியோகத்தர் தமக்குக் கிடைத்த தகவல்களின் பிரகாரம் அரசாங்கமானது பாரிய அபிவிருத்திக் கருத்திட்டமொன்றை ஒரு பிரதேசத்தில் நடைமுறைப்படுத்தப்போவதாக அறிகின்றார். அவர் குறிப்பிட்ட பிரதேசத்தில் பெரிய காணியொன்றை கொள்வனவுசெய்து அப்பிரதேசத்தில் அபிவிருத்திக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக அனுமதி வழங்கும் பொருட்டு முன்னின்று

செயற்படுகின்றார். குறிப்பிட்ட கருத்திட்டத்தின் நோக்கமானது பொதுமக்களுக்கு வசதிகளை வழங்குவது என்றபோதிலும் அரச உத்தியோகத்தர் அதன்மூலம் நியாயமற்ற வகையில் பாரிய இலாபத்தை ஈட்டுகின்றார்.

### சட்டத்திற்கு எதிரான கையூட்டல்கள், பணிக்கொடை, கமிஷன் பெற்றுக்கொள்ளல்

அரசாங்கத்துடன் ஏதேனும் செயற்பாட்டினை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கின்ற தரப்பொன்றிலிருந்து ஏதேனும் பெருமதி, பணம், இலாபம் பெற்றுக்கொள்ளப்படுதல் இதன் மூலம் கருதப்படுகின்றது. அரச ஊழியர் ஒருவர் கேள்விப்பத்திரங்களை அங்கீகரிப்பதற்காக பணம் அல்லது கமிஷன் கோருவது உதாரணங்கள் ஆகும்.

### முறையற்ற பாரபட்சம்

தனிப்பட்ட அறிமுகம், கட்சி நட்புறவு, இனம், மதம், சாதி அல்லது வேறு விருப்பத்தின் அடிப்படையில் அரச ஊழியர் ஒருவரால் சேவை அல்லது வளங்கள் வழங்கப்படுதல் இதில் உள்ளடங்கும். இதன் சிறப்புத்தன்மை யாதெனில் சாதாரண பொது மக்களுக்குக் கிடைக்கப்படாத வகையிலான கவனிப்பு தனிப்பட்ட விருப்பத்தின் மீது அரச ஊழியரின் நண்பர்களுக்குக் கிடைப்பதாகும். பொதுச்சொத்து முறைசாரற்ற வகையிலும் ஒழுங்கற்ற வகையிலும் பிரிந்து செல்வது இதன்மூலம் இடம்பெறுகின்றது.

### உறவினர்களுக்கான உபசரிப்பு

அரச ஊழியர் கொண்டுள்ள உறவுமுறையின் அடிப்படையில் அரச பதவிகளுக்கு நியமனம் செய்யப்படுதல் அல்லது வேறு நன்மைகள் பெற்றுக்கொடுக்கப்படுதல் இதன் தன்மையாகும். அரசியல்வாதிகள் தமது உறவினர்களையும் நண்பர்களையும் தமது அமைச்சுகளுக்கு நியமித்துக்கொள்வது இதற்கான உதாரணமாகும். இது அரசாங்கத்தின் உறுதிப்பாடு மற்றும் கூட்டாண்மை மீது பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது.

### சட்டவிரோத மானியங்கள்

அரசியல் கட்சிகளுக்கோ அல்லது ஆளும் கட்சிகளுக்கோ சிற்சில நடவடிக்கைகளில் தலையிடாதிருப்பதற்காக வழங்கப்படுகின்ற மானியங்கள் இந்த வகைக்குள் உள்ளடங்குகின்றன. அரச உத்தியோகத்தர் ஒருவரின் வகைப்பொறுப்பு புறக்கணிக்கப்படுதல் சார்பாக கிடைக்கப்படுகின்ற மானியமாகும். இதுகூட ஒருவகையான இலஞ்சமாகும்.

# PPT - 03 ஊழலின் தாக்கமும் அதன் விளைவுகளும்

ஊழலின் தாக்கமும் அதன் விளைவுகளும்

1

## ஊழல்

உலகளாவிய ரீதியில் இடம்பெற்று வருகின்ற ஒரு நிகழ்வாகும்.

ஒட்டுமொத்த சமூகம் பூராகவும் பரவியுள்ள பயங்கரமான புற்றுநோயைப் போன்றதொரு சமூகப் பேரழிவாகும்.

உலகம் பூராகவும் மத, கலாசார, தேசிய, புவியியல் போன்ற வேறுபாடுகளை விஞ்சி ஒரு வைரஸ் போன்று வியாபித்துள்ளது.

2

உலக வங்கி நிறுவனமானது தேசிய மட்டத்திலும் நிறுவன மட்டத்திலும் திரட்டிக்கொண்டுள்ள தகவல்களின் பிரகாரம் மதிப்பீடு செய்துள்ள வகையில்,

வருடமொன்றில் பரிமாறுகின்ற இலஞ்சத்தின் அளவானது ஒரு ட்ரில்லியன் அல்லது ஒட்டுமொத்த செலவினத்தில் 3மூ ஆகும்.

மேற்படி பணத்தொகையானது உலக வறுமை சார்பாக போராடுவதற்குத் தேவையான நிதி உதவியைப் போன்று 200 மடங்குகளாகும்.

“Governance and Corruption" வை புடழடியட ஊசளைளை அறிக்கை

3

## இலஞ்சத்திற்காக மட்டும் வருடமொன்றில் 1.5 கும் 2 கும் இடைப்பட்ட ட்ரில்லியன் டொலர் செலவாகின்றது.

இது உலகளாவிய மொத்தத் தேசிய உற்பத்தியில் அண்ணளவாக 2மூ ஆகும்.

- சர்வதேச நாணய நிதியம் (ஐஆகு) 2016 அறிக்கை

4

## சர்வதேச மட்டத்தில் இனங்காணப்பட்டுள்ள ஊழலின் விளைவுகள்

மிகவும் அதிகமாக இடம்பெறுகின்ற ஊழல் செயற்பாடுகள் ஒரு நாட்டினது பொருளாதாரத்தின் உறுதிப்பாட்டுக்கு ஓர் அச்சுறுத்தலாகும். அது நாட்டின் அபிவிருத்தியை குற்றுயிராக்கும்.

ஊழல் ஆனது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளின் பெறுமதியைத் தடுக்கின்ற காரணியாக செயற்படுகின்றது. கொடுக்கல் வாங்கல்களுக்கான செலவினத்தை அதிகரிக்கச் செய்து உறுதியமற்ற சூழலை உருவாக்குகின்றது.

ஊழல் ஆக்கவிளைவினைத் தடுக்கின்றது. பொருளாதார ரீதியில் முறைகேடுகளுக்கும் முறையற்ற செயற்பாடுகளுக்கும் வழிசமைக்கின்றது.

5

ஊழல் பொது உட்கட்டமைப்பு வசதிகளின் தரத்தினைக் குறைக்கின்றது. அரசாங்கம் பொது உட்கட்டமைப்பு வசதிகளுக்காக ஒதுக்கும் பணம் ஊழல் செய்யப்படும்போது குறிப்பிட்ட உட்கட்டமைப்பு வசதிகளானவை குறைந்த தரத்துடனேயே நிர்மாணிக்கப்படுகின்றன.

ஊழலின் காரணமாக ஒரு நாட்டின் மனித உரிமைகள் மீறப்படுகின்றன. இயல்பாகவே தகுதிவாய்ந்தவருக்கு பொருத்தமான இடம் கிடைக்காது செல்லும். ஊழல் நீதி நிலைநிறுத்தப்படுவதில் தடைகளை ஏற்படுத்தும்.

6

## ஊழல் புலப்பாட்டுச் சுட்டியின் (CPI) பிரகாரம் இலங்கையின் நிலைமை

ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நேஷனல் ஊழல் புலப்பாட்டுச் சுட்டியின் பிரகாரம் கடந்த இரண்டு தசாப்த காலப்பகுதி பூராகவும் இலங்கையானது 50மூ வீதத்திற்கும் குறைவான புள்ளிகளுக்கு உரிமை கோரும் (ஊழலால் நிறைந்த) நாடாகவே அமைந்துள்ளது.

அச்சுட்டியின் பிரகாரம், 2019 ஆம் ஆண்டில் உலகின் 180 நாடுகளுக்கு மத்தியில் இலங்கைக்கு 89 வது இடமே கிடைத்துள்ளது. 2019 ஆம் ஆண்டில் இலங்கை பெற்றுள்ள புள்ளிகளின் அளவு 38 ஆகும்.


7

## ஊழல் புலப்பாட்டுச் சுட்டி – 2019





8

CPI இன் பிரகாரம் இலங்கைக்கு உரித்தான இடம் – இடம் ?/180




9

CPI இன் பிரகாரம் இலங்கைக்கு உரித்தான இடம் – புள்ளிகள் ?/100




10

அரச உத்தியோகத்தர்களுக்கான ஊழல் எதிர்ப்புப் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்
துண்டுப்பிரசுரம் - இலக்கம் 03

# இலஞ்சம் மற்றும் ஊழலின் தாக்கமும் அதன் விளைவுகளும்

ஊழல் என்பது உலகளாவிய ரீதியில் இடம்பெற்று வருகின்ற ஒரு நிகழ்வாகும். அதேவேளை அது ஒட்டுமொத்த சமூகம் பூராகவும் பரவியுள்ள பயங்கரமான புற்றுநோயைப் போன்றதொரு சமூகப் பேரழிவாகும். ஊழலானது உலகம் பூராகவும் மத, கலாசார, தேசிய, புவியியல் போன்ற வேறுபாடுகளை விஞ்சி ஒரு வைரஸ் போன்று வியாபித்துள்ளது. உலகின் அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு மட்டுமன்றி அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளுக்கும் பொதுவானதொரு நிலைமையாகிய ஊழலானது குறிப்பாக, வளங்கள் வரையறுக்கப்பட்ட நாடுகளுக்கு மிகவும் அழிவுகரமான வகையில் தாக்கம் ஏற்படுத்துகின்றது.

உலக வங்கி நிறுவனமானது (World Bank Institute) தேசிய மட்டத்திலும் நிறுவன மட்டத்திலும் திரட்டிக்கொண்டுள்ள தகவல்களின் பிரகாரம் மதிப்பீடு செய்துள்ள வகையில் வருடமொன்றில் பரிமாறுகின்ற இலஞ்சத்தின் அளவானது ஒரு ட்ரில்லியன் அல்லது ஒட்டுமொத்த செலவினத்தில் 3மூ ஆகும். மேற்படி பணத்தொகையானது உலக வறுமை சார்பாக போராடுவதற்குத் தேவையான நிதி உதவியைப் போன்று 200 மடங்குகளாகும் என "Governance and Corruption" in Global Crisis அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது.

சர்வதேச நாணய நிதியம் (IMF) 2016 ஆம் ஆண்டுக்கான அறிக்கையின் மூலம் இலஞ்சத்திற்காக மாத்திரம் வருடமொன்றில் 1.5 கும் 2 கும் இடைப்பட்ட ட்ரில்லியன் டொலர் செலவாகின்றதென குறிப்பிடப்பட்டுள்ளது. அது உலகளாவிய மொத்தத் தேசிய உற்பத்தியில் அண்ணளவாக 2மூ ஆகும் எனவும் குறித்த அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது.

### சர்வதேச மட்டத்தில் இனங்காணப்பட்டுள்ள ஊழலின் சில விளைவுகள்

- ஊழல் ஆனது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளின் பெறுமதியைத் தடுக்கின்ற காரணியாக செயற்படுகின்றதுடன் கொடுக்கல் வாங்கல்களுக்கான செலவினத்தை அதிகரிக்கச் செய்து உறுதியமற்ற சூழலை உருவாக்குகின்றது.
- ஊழலின் காரணமாக உள்ளுர் தொழில்முயற்சியாளர்களுக்கு தடைகள் ஏற்படுவதோடு அரசாங்கத்தின் தற்றுணிபு அதிகாரம் பரவியுள்ள சந்தர்ப்பங்களில் இதனை விசேடமாகக் காணமுடியும்.
- ஊழல் ஆக்கவிளைவினைத் தடுக்கின்றது. அது பொருளாதார ரீதியில் முறைகேடுகளுக்கும் முறையற்ற செயற்பாடுகளுக்கும் வழிசமைக்கின்றது.
- ஊழல் பொது உட்கட்டமைப்பு வசதிகளின் தரத்தினைக் குறைக்கின்றது. அரசாங்கம் பொது உட்கட்டமைப்பு வசதிகளுக்காக ஒதுக்கும் பணம் ஊழல் செய்யப்படும்போது குறிப்பிட்ட உட்கட்டமைப்பு வசதிகளானவை குறைந்த தரத்துடனேயே நிர்மாணிக்கப்படுகின்றன. அதேவேளை, மக்களுக்கான சொத்துக்கள் பொது நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்படுதல், சேவைகளின் தரம் குறைவடைதல், வளங்கள் உரிய முறையில் பராமரிக்கப்படாமை போன்ற விடயங்களும் ஊழலுடன் பினைந்துள்ளன.
- மிகவும் அதிகளவில் இடம்பெறுகின்ற ஊழல் செயற்பாடுகள் ஒரு நாட்டினது பொருளாதாரத்தின் உறுதிப்பாட்டுக்கு ஓர் அச்சுறுத்தலாகும். அது நாட்டின் அபிவிருத்தியைக் குற்றுயிராக்கும்.
- ஊழலின் காரணமாக ஒரு நாட்டின் மனித உரிமைகள் மீறப்படுகின்றன. இயல்பாகவே தகுதிவாய்ந்தவருக்கு பொருத்தமான இடம் கிடைக்காது செல்லும். ஊழல் நீதி நிலைநிறுத்தப்படுவதில் தடைகளை ஏற்படுத்தும்.
- ஊழலின் காரணமாக ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்கள் மற்றும் பயங்கரவாதம் வளர்ச்சியடையும். பணத்தூய்தாக்கல், இரகசியமான மூலங்களினால் கிடைக்கப்படும் நிதி மற்றும் இலஞ்சம் என்பவற்றின் மூலம் ஊழல் நிறைந்த நீதித்துறை உத்தியோகத்தர்களும் ஊழல் நிறைந்த அரசியல்வாதிகளும் சமூகத்தில் குற்றச்செயல்களுக்கு பாதுகாப்பு

வழங்குகின்றனர். இதன் காரணமாக வன்முறை, சட்டவிரோத போதைப்பொருள், விபச்சாரம், பாலியல் அடிமைத்தனம் போன்றவைகளும் அதிகரிக்கின்றன.

- ஊழலானது வறுமை மற்றும் சமத்துவமின்மை என்பவற்றை மேம்படுத்துகின்றது. சர்வதேச எரிபொருள் கம்பெனியொன்றாகிய ஷெல் கம்பெனி தொடர்பாக மிகவும் பிரபல்யம்வாய்ந்த இலஞ்ச வழக்கொன்றுக்கான விசாரணையின்போது நைஜீரியாவின் தேசிய வரவுசெலவுத் திட்டத்தை பார்க்கிலும் அதிகமான தொகை ஊழல் நிறைந்த அதிகாரிகளுக்கு ஷெல் கம்பெனியினால் வழங்கப்பட்டுள்ளது என்ற தகவல் வெளியானது. இந்த இலஞ்சத்தின் காரணமாக நைஜீரிய மக்களுக்கு ஏற்பட்ட இழப்பு 11 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும்.
- இலஞ்சமும் ஊழலும் அரச நிறுவனங்களில் வியாபிப்பதன் மூலம் அந்நிறுவனங்கள் மீது மக்கள் வைத்துள்ள நன்மதிப்பும் நம்பிக்கையும் வீழ்ச்சியடையும்.

## ஊழல் புலப்பாட்டுச் சுட்டியின் பிரகாரம் இலங்கையின் நிலைமை

உலகின் ஒவ்வொரு நாட்டிலும் காணப்படுகின்ற ஊழலின் அளவினை அளவிட்டுப் பார்க்கும் ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நேஷனல் ஊழல் புலப்பாட்டுச் சுட்டியின் (CPI Index) பிரகாரம் இலங்கையானது கடந்த இரண்டு தசாப்தங்களாக 50மூகும் குறைந்த புள்ளிகளுக்கு உரிமைகோரும் (ஊழல் நிறைந்த) நாடாக அமைந்துள்ளது. மேற்படி சுட்டியின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டில் உலகின் 180 நாடுகளுக்கு மத்தியில் இலங்கைக்கு 93 ஆம் இடமே கிடைத்துள்ளது. 2019 ஆம் ஆண்டில் இலங்கைக்கு கிடைத்துள்ள புள்ளிகளின் எண்ணிக்கை 38 ஆகும். ஊழல் புலப்பாட்டுச் சுட்டியின் பிரகாரம் 2019 ஆண்டில் தலா 87 சம புள்ளிகளைப் பெற்றுள்ள நியூசிலாந்து மற்றும் டென்மார்க் ஆகிய நாடுகள் உச்ச நிலையில் உள்ளன. அடுத்த அளவிலான புள்ளிகள் பின்லாந்துக்குக் கிடைத்துள்ளது (86 புள்ளிகள்). 2019 ஆம் ஆண்டில் ஊழல் புலப்பாட்டுச் சுட்டியின் பிரகாரம் உலகின் 180 நாடுகளுக்கு மத்தியில் அதிக ஊழல் நிறைந்த நாடாக அமைந்திருப்பது 09 புள்ளிகளை மட்டுமே பெற்றுக்கொண்ட சோமாலியாவாகும். மேற்படி சுட்டியின் பிரகாரம் அடுத்ததாக ஆகக் குறைந்த புள்ளிகளைப் பெற்றுள்ள நாடுகளாக தென்சூடான் (12 புள்ளிகள்) மற்றும் சிரியா (13 புள்ளிகள்) அமைந்துள்ளனன.

ஊழல் புலப்பாட்டுச் சுட்டியானது குறிப்பாக, முதலீட்டாளர்கள் நிதமும் பரிசீலனை செய்கின்ற ஒரு சுட்டி என்பதோடு ஏதேனுமொரு நாடு அச்சுட்டியில் கீழ்நிலையில் (ஊழல் நிறைந்த நாடாக) அமைந்துள்ளபோது அந்நாட்டுக்கு முதலீடு வாய்ப்புகள் கிடைப்பதற்கான வாய்ப்புக்கள் குறைவாகவே காணப்படுகின்றன.

# PPT - 04 ஊழலை வெற்றிகொள்ளல் : ஹொங்கொங் முன்மாதிரி

ஊழலை வெற்றிகொள்ளல்: ஹாங்காங் முன்மாதிரி

1



Hong Kong ,1960

2

## ஹொங்கொங் தேசத்தின் கதை – 1960 ஆம் ஆண்டு

1960 ஆம் தசாப்தமாகும்போது உலகில் மிகவும் ஊழல் நிறைந்த பொலீசாக ஹாங்காங் தேசத்தின் பொலீஸ் கருதப்பட்டது.

போலீசாருக்கு இலஞ்சம் வழங்காமல் எதுவித செயற்பாட்டினையும் நிறைவேற்றிக்கொள்ள முடியாத நிலைமையே நாட்டில் காணப்பட்டது.

சட்டம் செயலிழந்திருந்ததோடு சகல சட்டவிரோத கொடுக்கல்-வாங்கல்களுடனும் போலீஸின் பிரதானிகளுக்கு தொடர்பிருந்தது.

சட்டவிரோத வியாபாரங்களுக்கான சந்தேக நபர்கள் பணக்காரர்களாக இருக்கும் பட்சத்தில் அவர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை. அவர்களுக்கு எதிராக வழக்குகள் தொடரப்படவுமில்லை.

3



4

ஹொங்காங் பொலீஸின் பிரதான பொலிஸ் அத்தியட்சகர் பீட்டர் கொட்பர் ஹாங்காங் டொலர் 4.3 மில்லியன்களுக்கு மேற்பட்ட தொகையை இலஞ்சமாக ஈட்டியுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டது. புலனாய்வு நடவடிக்கைகளிலிருந்து தப்பிக் கொள்வதற்காக அவர் உடனடியாக இங்கிலாந்துக்கு தப்பிச் சென்றார்.



5

கொட்பரின் சம்பவத்துடன் அரசாங்கமானது ஊழலுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென பாரிய மக்கள் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன.

கொட்பரை மீண்டும் வரவழைத்து அவரைக் கைது செய்து சட்டத்தை நடைமுறைப் படுத்துமாறு அவர்கள் அரசாங்கத்தை கட்டாயப்படுத்தினர்.

இந்த எதிர்ப்பு இயக்கங்களின் முன்னிலையை மாணவர்களே கொண்டிருந்தனர்.



6



7

## ஹொங்காங் சுயாதீன ஊழல் எதிர்ப்பு ஆணைக்குழுவின் (ICAC) உதயம்

1974 ஆம் ஆண்டு ஹொங்காங் அரசு சுயாதீன ஊழல் எதிர்ப்பு ஆணைக்குழுவினை (ICAC) நிறுவியது.

'ஹொங்காங் இராஜ்ஜியத்தை நீதியாகவும், நிலையாகவும், சௌபாக்கியமிக்கதாகவும் பேணிச்செல்வதற்கு உதவியளிக்கும் பொருட்டு பயனுள்ள சட்டங்களை நடைமுறைப்படுத்துதல், கல்வி மற்றும் தடுப்பு நடவடிக்கைகளின் மூலம் சுயாதீன ஊழல் எதிர்ப்பு ஆணைக்குழு சமுதாயத்துடன் இணைந்து ஊழலுக்கு எதிராக போராடுவதற்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளதாக' ICAC யின் பணி நோக்குக் கூற்றின் மூலம் தெரிவிக்கப்பட்டது.

8




9

**ஹொங்காங் சுயாதீன ஊழல் எதிர்ப்பு ஆணைக்குழுவின் (ICAC) உதயம்**

ICAC ஆணைக்குழுவின் முதலாவது பிரதானியாக ஜாக் காட்டர் (Jack Carter) நியமிக்கப்பட்டார்.

அதுவரையும் போலீசார் கொண்டிருந்த ஊழல் புலனாய்வு அதிகாரங்கள் ஆணைக்குழுவிற்குக் (ICAC) கிடைத்தன.

ஆணைக்குழுவின் முதலாவது நடவடிக்கையாக கொட்பருக்கு எதிரான விசாரணை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.



10

ICAC வேண்டுகோளின் பிரகாரம் பிரதான பொலிஸ் அத்தியட்சகர் பீட்டர் கொட்பர் இங்கிலாந்திலிருந்து ஹொங்காங் நாட்டுக்கு ஒப்படைக்கப்பட்டார்.

குற்றச்சாட்டுக்கள் மீதான விசாரணையின் பின்னர் குற்றவாளியாகிய அவருக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.



11

குற்றவாளியாக்கப்பட்டதன் பின்னர் பிரதான பொலிஸ் அத்தியட்சகர் பீட்டர் கொட்பரின் சொத்துக்கள் அரசுடமையாக்கப்பட்டன.



12

13

14

# PPT - 05 ஊழலைத் தடுக்கும் சட்டதிட்டங்கள்

ஊழலைத் தடுக்கும் சட்டதிட்டங்கள்

1

இலங்கையின் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய தவறுகள் மற்றும் சொத்துக்கள் அல்லது பொறுப்புக்கள் பிரகடனச் சட்டத்தின் கீழான தவறுகள் தொடர்பாக புலனாய்வு செய்வதற்கான மற்றும் வழக்குத் தொடுப்பதற்கான முதன்மைச் சட்ட அதிகாரம் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளது. (CIABOC)

(1954 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க இலஞ்சச் சட்டம் மற்றும் 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டம் என்பவற்றின் பிரகாரம்)

இலஞ்சம் அல்லது ஊழல் தொடர்பான குற்றமானது பிடியாணையின்றி ஒருவரை கைது செய்யக்கூடிய ஒரு தவறாகும்.

2

ஊஜயுடீழுஊ சட்டத்திற்கு மேலதிகமாக ஊழலை இல்லாதொழிப்பதற்கான மேலும் பல சட்டஏற்பாடுகள் இலங்கை சட்ட முறைமையில் காணப்படுகின்றன.

- அரசியலமைப்பு

"அரசாங்க ஆதனங்களைப் பேணிப் பாதுகாத்தலும், அரசாங்க ஆதனம் பிழையான முறையில் பயன்படுத்தப்படுதலையும் வீணாக்கப்படுதலையும் தடுத்து நிறுத்துதலும் இலங்கையிலுள்ள ஒவ்வோராளினதும் கடமையாதல் வேண்டும்."

- 28(ஈ) ஆம் உறுப்புரை

3

"பகிரங்க நிதிகளின் மீதான பூரண கட்டுப்பாட்டினைப் பாராளுமன்றம் கொண்டுள்ளது"

அரசு திரட்டு நிதியமொன்றைக் கொண்டுள்ளதோடு குறிப்பிட்ட திரட்டு நிதியத்திலிருந்து பணத்தொகை எதுவும் மீளப்பெறப்படுதலானது முழுமையாக பாராளுமன்றத்தின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட வகையில் இடம்பெறும்.

பாராளுமன்றத்தின் நிலையியற் குழுக்களின் மூலம் குறிப்பிட்ட செலவினங்களானவை அங்கீகரிக்கப்பட்ட சட்ட திட்டங்களின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பது தொடர்பாக புலனாய்வு செய்யப்படும்.

அரசியலமைப்பின் XVII ஆம் அத்தியாயம்.

4

## கணக்காய்வாளர் தலைமை அதிபதி

பகிரங்க நிதி தொடர்பில் செயலாற்றுவதற்காக அரசியலமைப்பின் 153 ஆவது உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி நியமிக்கப்பட்டுள்ளார்.

அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் தத்துவங்களின் பிரகாரம் உள்ளூர் அதிகார சபைகள் உட்பட அரசாங்கத்தின் சகல நிறுவனங்களுக்குமான அரசாங்கக் கணக்குகளை கணக்காய்வு செய்வதற்கான தத்துவங்களை அவர் கொண்டுள்ளார்.

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கணக்காய்வு அறிக்கைகள் வருடாந்தம் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுவதோடு பொதுமக்கள் அறிந்துகொள்வதற்காக அவை பகிரங்கப்படுத்தப் படுகின்றன.

கணக்காய்வின்போது வெளிப்படுகின்ற ஊழல்கள் தொடர்பாக விசாரணைகளை நடாத்துவதற்காகவும் வழக்குத் தொடுப்பதற்காகவும் அவை குற்றவியல் புலனாய்வுத் திணைக்களத்திற்கு ஆற்று படுத்தப்படுகின்றன.

பகிரங்க நிதி நடவடிக்கைகள் தொடர்பாக செயலாற்றுகின்ற பாராளுமன்ற நிலையியற் குழுக்கள் இரண்டாகிய அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு மற்றும் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு என்பன அரச நிறுவனங்கள் பற்றிய புலனாய்வுகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டே மேற்கொள்கின்றன.

5

## தண்டனைச் சட்டக் கோவை (15 ஆம் அத்தியாயம்)

இலஞ்சம் என்பதானது 1889 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட தண்டனைச் சட்டக் கோவையின் மூலமே ஒரு குற்றவியல் தவறாக முதன்முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் IX ஆம் அத்தியாயமானது "அரச ஊழியர்களினால் புரியப்படுகின்ற தவறுகள் அல்லது அரச ஊழியர்கள் சம்பந்தப்பட்ட தவறுகள்" சார்பாக ஒதுக்கப்பட்டுள்ளது.

தண்டனைச் சட்டக் கோவையின் 158 ஆம் பிரிவின் பிரகாரம் அரச ஊழியர் ஒருவர் உத்தியோகபூர்வ செயற்பாடு தொடர்பாக வழங்கப்படும் சட்ட ரீதியான செலுத்தலைத் தவிர அவாநிறைவு பெற்றுக்கொள்வது மூன்று வருட மறியற்றண்டனை மற்றும் குற்றப்பணம் ஆகிய தண்டனைகள் பெறக்கூடிய ஒரு தவறாகும்.

6

## தேர்தல்கள் பற்றிய சட்டங்கள்

1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டம், 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம், 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டம் மற்றும் 1947 ஆம் ஆண்டின் 55 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச்சட்டம் என்பவற்றின் பிரகாரம்,

தேர்தலொன்றின்போது சுதந்திரமாக வாக்களிப்பதனைத் தடுப்பதற்காக இலஞ்சம் வழங்கப்படுதல், உபாசாரம் வழங்கப்படுதல் மற்றும் தவறான அழுத்தம் பிரியோகிக்கப்படுதல் தவறாகும். இத்தவறுகளானவை குறித்த சட்டங்களில் ஊழல் செயற்பாடுகள் எனும் வகையினத்திற்குள் வருவதோடு அத்தகைய தவறுகளுக்கு குற்றத்தீர்ப்பளிக்கப்படும் பட்சத்தில் மறியற்றண்டனை மற்றும் குற்றப்பணம் என்பவற்றுக்கு மேலதிகமாக ஏழு வருடகாலம் வாக்காளராக பதிவு செய்யப்படுதல், வாக்களிக்கப்படுதல் மற்றும் வேட்பாளராக முன்னிற்கப்படுதல் தடை செயயப்படும்.

7

## சொத்துக்கள், பொறுப்புக்கள் பிரகடனச் சட்டம் (1975 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கம்)

சட்டத்தின் பிரகாரம்,

சொத்துக்களையும் பொறுப்புக்களையும் பிரகடனஞ் செய்வதற்கான பொறுப்பினைக் கொண்டுள்ள நபர்கள் சரியாகப் பூர்த்திசெய்யப்பட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய கூற்றுக்களை நிறுவனத் தலைவர்களிடம் கையளித்தல் வேண்டும்.

சொத்துக்களையும் பொறுப்புக்களையும் பிரகடனஞ் செய்வதற்கான பொறுப்பினைக் கொண்டுள்ள ஒருவர் நியாயமான காரணமின்றி அவ்வாறு பிரகடனஞ் செய்வதற்குத் தவறுதல், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய கூற்றுக்களில் போலியான தகவல்களை உள்ளடக்குதல், வேண்டுமென்றே ஒரு சொத்தினை அல்லது பொறுப்பினை வெளிப்படுத்தாதிருத்தல், குறிப்பிட்ட சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டுக்கு முரணாக செயற்படுதல் தண்டனைக்குரிய தவறுகள் ஆகும்.

8

### பொதுச்சொத்து துஷ்பிரயோகம் சட்டம்

1982 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கமுடைய சட்டத்தின் பிரகாரம்,

பொதுச் சொத்தழிப்பை ஏற்படுத்துதல், பொதுச் சொத்துக்களைத் திருடுதல், பொதுச் சொத்துக்களைக் கொள்ளையடித்தல், பொதுச் சொத்துக்களை நேர்மையீனமாகக் கையாடுதல், குற்றமுறையான நம்பிக்கைத் துரோகம், போலியான ஆவணங்களைத் தயாரித்தல் மற்றும் கணக்குகளைத் தவறாகக் காட்டுதல் என்பன குற்றவியல் தவறுகளாக இனங்காணப்பட்டுள்ளன.

பொதுச் சொத்து என்பதன் மூலம் அரசாங்கத்தின் சொத்துக்கள், ஏதேனும் திணைக்களத்தின், நியதிச் சட்ட சபையொன்றின், கூட்டுறவுச் சங்கமொன்றின் அல்லது கூட்டுறவு அமைப்பொன்றின் சொத்துக்கள் கருதப்படுகின்றன.

குற்றச்சாட்டுக்கான சொத்தின் பெறுமதியானது 25,000 ரூபாவை விஞ்சும் சந்தர்ப்பமொன்றில் அத்தகைய தவறுக்காக கைது செய்யட்டுள்ள ஒருவருக்கு தனிச்சிறப்புச் சூழ்நிலைகளில் மட்டுமே பிணை வழங்க முடியும்.

9

கேள்விகள்/சிக்கல்கள்
நன்றி

10

## ஊழலைத் தடுக்கும் சட்ட திட்டங்கள்

துண்டுப்பிரசுரம் - இலக்கம் 04

இலங்கையில் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய தவறுகள் தொடர்பாகவும் சொத்துக்களை அல்லது பொறுப்புக்களை பிரகடனஞ் செய்வதற்கான சட்டத்தின் கீழான தவறுகள் தொடர்பாகவும் புலனாய்வு செய்வதற்கும் வழக்குத் தொடுப்பதற்குமான முதன்மைச் சட்ட அதிகாரம் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிற்குக் (CIABOC) கிடைத்துள்ளது. 1954 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க இலஞ்சச் சட்டம் மற்றும் 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டம் என்பவற்றின் மூலமே அவ்வாறான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதன்படி இலஞ்சம் அல்லது ஊழலை இல்லாதொழிப்பதற்காகச் செயற்படுகின்ற முதன்மைச் சட்டமாக இலஞ்சச் சட்டத்தினை அறிமுகப்படுத்த முடியும். அச்சட்டத்தின் பிரகாரம் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய தவறு என்பது பிடியாணையின்றி ஒருவரை கைது செய்யக்கூடிய ஒரு தவறாகும். இலஞ்சச் சட்டம் மற்றும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்திற்கு மேலதிகமாக ஊழலை இல்லாதொழிப்பதற்காக பயன்படுத்தக்கூடிய மேலும் சட்டரீதியான ஏற்பாடுகள் பல இலங்கைச் சட்டமுறைமையில் காணப்படுகின்றன. அவற்றுள் சில பின்வருமாறு அமைகின்றன.

### அரசியலமைப்பு

நாட்டின் உன்னதமான ஆவணமாகிய அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் 28(1) ஆம் உறுப்புரையானது மக்களின் அடிப்படைக் கடமைகளையும் பொறுப்புக்களையும் எடுத்துக்காட்டி,

"அரசாங்க ஆதனத்தைப் பேணிக்காத்தலும் பாதுகாத்தலும் அரசாங்க ஆதனம் பிழையான முறையில் பயன்படுத்தப்படுதலையும் வீனாக்கப்படுதலையும் தடுத்து நிறுத்துதலும் இலங்கையிலுள்ள ஒவ்வோராளினதும் கடமையாதல் வேண்டும்" எனக் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை அரசியலமைப்பின் XVII ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் பகிரங்க நிதிகளின் மீது பூரண கட்டுப்பாட்டினைப் பாராளுமன்றம் கொண்டுள்ளது. அதன் பிரகாரம் அரசாங்கம் திரட்டு நிதியமொன்றைக் கொண்டுள்ளதோடு குறிப்பிட்ட திரட்டு நிதியத்திலிருந்து பணத் தொகைகளை மீளப்பெறலானது பாராளுமன்றத்தின் முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது. குறிப்பிட்ட செலவுகள் அங்கீகரிக்கப்பட்ட சட்ட திட்டங்களின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பது பாராளுமன்றத்தின் நிலையான குழுக்களின் மூலம் புலனாய்வு செய்யப்படுகின்றன.

பகிரங்க நிதி தொடர்பாக செயற்படும் பொருட்டு அரசியலமைப்பின் 153 ஆவது உறுப்புரை மூலம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி நியமிக்கப்படுகின்றார். அவரது பணிகளும் கடமைகளும் 154(1) ஆம் உறுப்புரையில் காட்டப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அல்லது அவரது அதிகாரத்தின்பேரில் செயற்படுகின்ற எந்தவொரு நபருக்கும் உள்ளூராட்சி நிறுவனங்களை உள்ளிட்ட அரசாங்கத்தின் சகல நிறுவனங்களினதும் அரசாங்கக் கம்பெனிகளினதும் கணக்குகளைக் கணக்காய்வு செய்வதற்கான தத்துவம் உள்ளது. கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வுகள் பற்றிய அறிக்கைகள் வருடாந்தம் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டு மக்கள் அறிந்துகொள்வதற்காக அவை பகிரங்கப்படுத்தப்படுவதுடன் அவற்றின் மூலம் வெளிப்படுகின்ற ஊழல்கள் தொடர்பாக விசாரணைகளையும் வழக்குத் தொடுத்தல்களையும் மேற்கொள்வதற்காக அவை குற்றவியல் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அனுப்பப்படுகின்றன. அதேவேளை பாராளுமன்றத்தில் நிதி நடவடிக்கைகள் தொடர்பாக செயற்படுகின்ற நிலையான இரண்டு குழுக்களாகிய அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (COPE) மற்றும் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு (COPA)என்பன அரச நிறுவனங்கள் பற்றிய புலனாய்வு நடவடிக்கைகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டே மேற்கொள்கின்றன.

### தண்டனைச் சட்டக் கோவை (15 ஆம் அத்தியாயம்)

இலஞ்சம் என்பதனை ஒரு குற்றவியல் தவறாக அறிமுகப்படுத்திய முதலாவது சட்டம் 1889 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட தண்டனைச் சட்டக் கோவையாகும். அதன் IX ஆம் அத்தியாயம் “பகிரங்க சேவையாளர்களினால் செய்யப்படும் அல்லது அவர்கள் தொடர்பான தவறுகள்” தொடர்பாக ஒதுக்கப்பட்டுள்ளது.

தண்டனைச் சட்டக் கோவையின 158வது பிரிவின் பிரகாரம் பகிரங்க சேவையாளராக இருந்துகொண்டு உத்தியோகச் செயல் தொடர்பில் சட்டமுறையான ஊமதியம் அல்லாத அவாநிறைவினைப் பெறுதல் மூன்று வருடகால மறியற்றண்டனை மற்றும் குற்றப்பணம் மூலம் தண்டிக்கப்படக்கூடிய ஒரு தவறாகும். அதேவேளை ஊழலான அல்லது சட்ட விரோதமான வழிகளில் பகிரங்க சேவையாளரொருவரின் மீது செல்வாக்கினைப் பிரியோகிப்பதற்கென அவாநிறைவொன்றைப் பெறுதல் (159 ஆம் பிரிவு), எவரேனுமாளுக்கு அல்லது அரசாங்கத்திற்கு ஊறு ஏற்படுத்தும் உளக்கருத்துடன் பகிரங்க சேவையாளர் சட்டப்பணிப்புக்குக் கீழ்ப்படியாமை(162ஆம் பிரிவு), குற்றமுறையான நம்பிக்கைத் துரோகம் (392 ஆம் பிரிவு) போன்ற இன்னும் பல குற்றவியல் தவறுகளாக காட்டுப்பட்டுள்ளன.

1954 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க இலஞ்சச் சட்டம் சட்டமயமாக்கப்பட்டதன் பின்னர் தண்டனைச் சட்டக் கோவையின் ஏற்பாடுகள் பயன்படுத்தப்படாமல் இலஞ்சச் சட்டத்தின் ஏற்பாடுகள் பயன்படுத்தப்படுகின்றன.

### தேர்தல்கள் சட்டங்கள்

1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதி தேர்தல்கள் சட்டம், 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்ற பொதுத் தேர்தல்கள் சட்டம், 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மாகாணசபைகள் தேர்தல்கள் சட்டம் மற்றும் 1946 ஆம் ஆண்டின் 55 ஆம் இலக்க உள்ளூராட்சி தேர்தல்கள் கட்டளைச்சட்டம் என்பவற்றின் பிரகாரம் வாக்கெடுப்பொன்றின் போது சுதந்திரமாக வாக்களிப்பதனைத் தடுப்பதற்காக இலஞ்சம் வழங்குதல், உபசரிப்பு செய்தல் மற்றும் சட்டவிரோத அழுத்தம் என்பன தவறுகளாகக் காட்டப்பட்டுள்ளன. இத் தவறுகள் மேற்படி சட்டங்களில் காட்டப்பட்டுள்ள ஊழல் செயற்பாடுகள் எனும் வகைக்குள் உள்ளடங்குவதோடு அத்தகைய தவறுக்கு குற்றத்தீர்ப்பளிக்கப்படும் பட்சத்தில் மறியற்றண்டனை மற்றும் குற்றப் பணம் என்பவற்றுக்கு மேலதிகமாக ஏழு வருடகாலத்திற்கு வாக்காளராகப் பதிவுசெய்யப்படுதல் மற்றும் வேட்பாளராக முன்னிற்றல் தடை செய்யப்படும்.

### சொத்துக்கள் பொறுப்புக்கள் பிரகடனச் சட்டம்

1975 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பிரகடனச் சட்டத்தின்படி சொத்துக்களையும் பொறுப்புகளையும் பிரகடனம் செய்வதற்கான பொறுப்பினைக்கொண்டுள்ள நபர்கள் உரியமுறையில் பூர்த்தி செய்யப்பட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய பிரகடனங்களை சம்பந்தப்பட்ட நிறுவனத் தலைவர்களுக்குக் கையளித்தல் வேண்டும்.

சொத்துக்களையும் பொறுப்புக்களையும் பிரகடனம் செய்ய வேண்டிய கடப்பாட்டினைக் கொண்டுள்ள ஒருவர் நியாயமான காரணமின்றி அவ்வாறு பிரகடனம் செய்யத் தவறுதல், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய பிரகடனத்தில் போலியான தகவல்களை உள்ளடக்குதல், வேண்டுமென்றே சொத்துக்களையும் பொறுப்புக்களையும் பிரகடனம் செய்யாதிருத்தல், இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டுக்கு முரணாக செயற்படுதல் போன்ற தவறுகள் சட்டத்தின் கீழ் தண்டனை கிடைக்கப்பட வேண்டிய தவறுகளாகக் காட்டுப்பட்டுள்ளன. சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்த வேண்டிய கடப்பாட்டினைக் கொண்டுள்ள ஒருவர் அவரது ஆரம்பச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய பிரகடனத்திற்குப் பின்னர் வருடம்தோறும் அப்பிரகடனங்களை முன்வைக்க வேண்டிய பொறுப்பினால் கட்டுப்படுவதோடு ஆரம்பச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய பிரகடனத்திற்கும் அடுத்தவரும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய பிரகடனத்திற்கும் இடையிலான வித்தியாசத்தைத் தெளிவுபடுத்துவதற்கான பொறுப்பும் அவருக்கு உள்ளது.

இதன் பிரகாரம் இலஞ்சம் மற்றும் ஊழல் செயற்பாடுகளிலிருந்து ஈட்டப்பட்ட சொத்துகளானவை சட்டரீதியான ஈட்டல் என்பதை உறுதிப்படுத்த அவர் தவறும் பட்சத்தில் இச் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் குறித்த நபர் குற்றவாளியாகக் கருதப்படுவார்.

### 1982 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பொதுச் சொத்துக்கள் சம்பந்தமாக செய்யப்படும் தவறுகள்

இச் சட்டத்தின் பிரகாரம் பொதுச் சொத்தழிப்பை ஏற்படுத்துதல், பொதுச் சொத்துக்களைத் திருடுதல், பொதுச் சொத்துக்களைக் கொள்ளையடித்தல், பொதுச் சொத்துக்களை நேர்மையீனமாகக் கையாடுதல், குற்றமுறையான நம்பிக்கைத் துரோகம், போலியான ஆவணங்களைத் தயாரித்தல் மற்றும் கணக்குகளைத் தவறாகக் காட்டுதல் என்பன குற்றவியல் தவறுகளாக இனங்காணப்பட்டுள்ளன.

சுட்டத்தின் பிரகாரம் பொதுச் சொத்து என்பதன் மூலம் அரசாங்கத்தின் சொத்துக்கள், ஏதேனும் திணைக்களத்தின், நியதிச் சட்ட சபையொன்றின், கூட்டுறவுச் சங்கமொன்றின் அல்லது கூட்டுறவு அமைப்பொன்றின் சொத்துக்கள் கருதப்படுகின்றன.

குற்றச்சாட்டுக்கான சொத்தின் பெறுமதியானது 25,000 ரூபாவை விஞ்சும் சந்தர்ப்பமொன்றில் அத்தகைய தவறுக்காக கைது செய்யட்டுள்ள ஒருவருக்கு தனிச்சிறப்புச் சூழ்நிலைகளில் மட்டுமே பிணை வழங்க முடியும்.

### 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க பணம் தூய்தாக்கல் தடைச் சட்டம்

இலஞ்சம் மற்றும் ஊழல் என்பவற்றின் மூலம் ஈட்டிக்கொள்ளும் சொத்துக்களை நேரடியாக முன்வைக்கும்போது சமூகத்தில் சந்தேகங்கள் எழுவதனால் பெரும்பாலானோர் இலஞ்சம் மற்றும் ஊழல் என்பவற்றின் மூலம் ஈட்டிக்கொள்கின்ற சொத்துக்களை வெவ்வேறான கொடுக்கல்-வாங்கல்களுக்கு உட்படுத்தி சமூகத்திற்கு முன்வைக்கின்றனர். அது பணத் தூய்தாக்கல் என்றழைக்கப்படுகின்றது. ஊழலைத் தடுக்கும்போது பணத் தூய்தாக்கலைத் தடுக்க வேண்டியது முதன்மையான தேவைப்பாடாகும்.

இச்சட்டத்தின் பிரகாரம் பணத் தூய்தாக்கல் குற்றவியல் தவறாக இனங்காணப்பட்டுள்ளதோடு அத்தகைய தவறுகள் தொடர்பான வழக்குகள் மேல் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட வேண்டும் என்பதோடு குற்றத் தீர்ப்பளிக்கப்படும் ஒருவர், தவறு எவ்வாதனம் தொடர்பில் புரியப்பட்டதோ அவ்வாதனத்தின் பெறுமதிக்குக் குறையாததும், அவ்வாதனத்தின் பெறுமதியின் மூன்று மடங்குக்கு மேற்படாததுமான குற்றப் பணமொன்றுக்கு அல்லது ஐந்தாண்டுகளுக்கு குறையாததும் இருபது ஆண்டுகளை விஞ்சாததுமானதொரு காலப்பகுதிக்கான கடூழிய மறியற்றண்டனைக்குஆளாதல் வேண்டும். அதேவேளை பணத் தூய்தாக்கலின் மூலம் ஈட்டிக்கொள்ளப்பட்ட சொத்துக்கள் அரசுடமையாக்கப்படும்.

### 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்டம்.

வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துவதானது ஊழலைத் தடுப்பதற்கானதொரு முதன்மைத் தேவைப்பாடாகும். பொது அதிகார சபைகளின் வெளிப்படைத்தன்மை மற்றும் வகைப்பொறுப்பு என்பவற்றை மேம்படுத்துவதற்காக நிறைவேற்றப்பட்ட தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் சகல பிரஜைகளுக்கும் பொது அதிகாரசபைகளின் பொறுப்பில், உடைமையில் அல்லது கட்டுப்பாட்டில் காணப்படுகின்ற தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான முறையியல்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அதேவேளை சட்டங்களின் மூலம் பிரஜைகளுக்கு பொது அதிகாரசபைகளிலிருந்து தகவல்களைக் கோரிப் பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளதோடு பிரஜைகளுக்கு நிதமும் தேவைப்படுகின்ற தகவல்களை முற்போக்கான வகையில் பகிரங்கப்படுத்துவதற்கான பொறுப்பு பொது அதிகாரசபைகளுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஆட்சேர்ப்புகள், பதவி உயர்வுகள், பெறுகைகள் மற்றும் ஒப்பந்த நிவாரண செயன்முறை போன்ற தகவல்கள் தடையின்றி மக்களுக்குக் கிடைக்கும்போது ஊழல்களை இல்லாதொழிப்பதற்கான வாய்ப்புக் கிடைக்கின்றது. அதேவேளை சட்டத்தின் மூலம் ஊழலுக்கு எதிராக குரல் எழுப்புவோருக்கான

பாதுகாப்பு தொடர்பாகவும் ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளன.

மேற்படி சட்ட ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக தேசிய கணக்காய்வு ஆணைக்குழுச் சட்டம், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டம், நிருவாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் சட்டம், விசேட சனாதிபதி ஆணைக்குழுச் சட்டம், நிதிப் பிரமாணங்கள், பெறுகை வழிகாட்டல் கோவை போன்ற ஏற்பாடுகள் மூலமும் ஊழலைத் தடுப்பதற்கான பல சட்டதிட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.


## PPT - 06 இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் தத்துவங்களும் பொறுப்புக்களும் (CIABOC)

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் தத்துவங்களும் பொறுப்புக்களும் (ஊஐயுடீழுஊ)

1


இலஞ்சம் அல்லது ஊழல் ஆணைக்குழுவின் கட்டமைப்பு

2




3

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் கட்டமைப்பு




1994/19 පනතේ 3(2) (අ) වගන්තිය

4

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டம்
இலஞ்சச் சட்டம்.
சொத்துக்கள், பொறுப்புக்கள் பிரகடனச் சட்டம்

மேற்படி சட்டங்களின் கீழ் இந்த ஆணைக்குழுவிற்கு செயற்படுவதற்கான அதிகாரம் கிடைத்துள்ளது.

5

### தத்துவங்கள்

சகல எழுத்திலான/வாய்மூலமான சாட்சிகளைப் பெற்றுக்கொள்ளல்.

மேற்படி விடயங்களுக்காக ஆணைக்குழுவிற்கு முன்னால் பிரசன்னமாகுமாறு அல்லது சத்தியத்தின் கீழ் வாய்மூலமான பதிலளிக்குமாறு குறித்துரைப்பதற்கும்,

தமது பொறுப்பில் அல்லது கட்டுப்பாட்டில் இருக்கின்ற ஆவணங்களை/வேறு ஏதேனும் முன்வைப்பதற்காக வேறொருவரை அழைத்தல்.

சொத்துக்குவிப்புத் தொடர்பாக தகவல் கிடைத்துள்ளபோது அவர்களினதும்/மனைவியினது/பிள்ளைகளினது வங்கிப் புத்தகங்களை அல்லது காசோலைப் புத்தகங்கள் அல்லது அத்தாட்சிப்பிரதிகளை பெற்றுத்தருமாறு வங்கி முகாமைத்துவத்திற்குக் கட்டளையிடுதல்.

6

உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்குக் கட்டளையிடுதல்.

அரசாங்க நிறுவனமொன்றுக்குப் பொறுப்பாகவுள்ள ஒருவருக்கு அத்திணைக்களத்திடமுள்ள ஏதேனும் ஆவணத்தை அல்லது அதன் பிரதியொன்றை முன்வைக்குமாறு கட்டணையிடுதல்.

சொத்துக்கள் தொடர்பாக புலனாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்போது குறிப்பிட்ட நபருக்கு சத்தியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கூற்றொன்றை ஆவணத்தின் மூலம் முன்வைக்குமாறு கட்டளையிடுதல்.

புலனாய்வு நடத்தப்படும் சந்தர்ப்பமொன்றில் குறிப்பிட்ட நபரின் வெளிநாட்டுக் கடவுச்சீட்டு மற்றும் ஏனைய ஆவணங்கள் என்பவற்றை 3 மாதங்களை விஞ்சாத காலப் பகுதிக்கு தடைசெய்யுமாறு குடிவரவு குடியகழ்வுக் கட்டுப்பாட்டாளருக்கு கட்டளையிடுதல்.

7

இலஞ்சச் சட்டம்

8

### இலஞ்சம் என்றால் என்ன?

அரச ஊழியரொருவரால் அல்லது அரச ஊழியருக்காக சட்டரீதியற்ற அவாநிறைவு கோரப்படுதல் அல்லது பெற்றுக்கொள்ளப்படுதல் மற்றும் அரச ஊழியருக்காக அல்லது அவர் சார்பாக சட்ட ரீதியற்ற அவாநிறைவு வழங்கப்படுதல் அல்லது வழங்குவதற்கு முயற்சிக்கப்படுதல்.

9

### இலஞ்சம் என்பது ஒரு குற்றச் செயலா…?

அவாநிறைவு கோருதல், வழங்குதல் அல்லது வழங்குவதற்கு முயற்சித்தல் அரச ஊழியரின் உத்தியோகபூர்வ பணியினை நிறைவேற்றுவதற்குத் தூண்டுதலாக அல்லது அன்பளிப்பாக அமையும் பட்சத்தில் அது இலஞ்சச் சட்டத்தின் கீழ் ஒரு தவறாகும்.

10

### உத்தியோகபூர்வ பணி நிறைவேற்றப்படுதல்

உத்தியோகபூர்வ பணி நிறைவேற்றப்படுதல் என்பதில் அதனைத் துரிதப்படுத்துதல், தாமதப்படுத்துதல், நிறைவேற்றுவதற்குத் தடை ஏற்படுத்துதல், நிறைவேற்றுவதனைத் தடுத்தல், நிறைவேற்றும்போது பக்கச் சார்பாகவிருத்தல் மட்டுமன்றி உத்தியோகபூர்வ பணி நிறைவேற்றாதிருப்பதும் உள்ளடங்கும்.

11

### இலஞ்சம் = அன்பளிப்பு ?

இலஞ்சம் மற்றும் அன்பளிப்பு என்பவற்றுக்கு இடையில் தெளிவான வித்தியாசம் உள்ளது.

அன்பளிப்பு வழங்கப்படும்போது அல்லது பெற்றுக் கொள்ளப்படும் போது அதில் எவ்விதமான தவறான எண்ணமும் கிடையாது. ஆனால் இலஞ்சத்தின்போது நிதமும் தவறான எண்ணம் உள்ளது.

12

### இலஞ்சம் பற்றிய தவறுகள்

14. நீதித்துறை உத்தியோகத்தர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் சம்பந்தமான இலஞ்சம்.

15. அரச ஊழியர் ஒருவருக்கான நேர்முகப் பரீட்சைக்காக பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரால் அவாநிறைவு பெறப்படுதல்.

16/17 பொலிஸ் உத்தியோகத்தர்கள், சமாதான உத்தியோகத்தர்கள் ஏனைய அரச ஊழியர்கள் தொடர்பான இலஞ்சம்.

18. கேள்விப் பத்திரங்களை இரத்துச் செய்துகொள்வதற்கான இலஞ்சம்.

13

19. அரசாங்கத்தின் நடவடிக்கைகள் தொடர்பான இலஞ்சம்

20. கோரிக்கைகளுக்கான செலுத்தல்கள், சேவையில் ஈடுபடுத்துதல், எனைய அனுகூலங்கள் தொடர்பான இலஞ்சம்.

21. அரசாங்கத்துடனான கொடுக்கல் வாங்கல்களை கொண்டுள்ள நபர்களினால் அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் இலஞ்சம்.

22. உள்ளுராட்சி நிறுவனமொன்றில் அல்லது பட்டியலிடப்பட்டுள்ள நிறுவனமொன்றில் அல்லது பட்டியலிடப்பட்டுள்ள நிறுவனமொன்றின் கட்டுப்பாட்டுச் சபையின் உறுப்பினர் ஒருவருக்கான இலஞ்சம் அல்லது நிறுவனம் ஒன்றின் உத்தியோகத்தர் அல்லது ஊழியருக்கான இலஞ்சம்.

14

23. உள்ளுாராட்சி நிறுவனமொன்றில் அல்லது பட்டியலிடப்பட்டுள்ள நிறுவனமொன்றில் அல்லது பட்டியலிடப்பட்ட நிறுவனமொன்றின் கட்டுப்பாட்டுச் சபை உறுப்பினர் ஒருவரின் வாக்குத் தொடர்பில் தாக்கம் ஏற்படுத்துவதற்காக அச்சுறுத்தல் விடுத்தல் அல்லது மோசடி செய்தல்.

23அ. இலஞ்சத்தின் மூலம் கைப்பற்றிகொள்ளப்பட்டுள்ள சொத்துக்கள் அல்லது இலஞ்சத்தின் மூலம் கைப்பற்றிக்கொண்ட சொத்துக்களிலிருந்து மாற்றியுள்ள அல்லது மாற்றப்பட்டிருந்த சொத்துக்களாக இந்தப் பிரிவின் கீழ் கருதப்படுகின்ற சொத்துக்களைக் கொண்டிருத்தல் அல்லது கொண்டிருந்தமை குற்றமாக அமைதல் வேண்டும் என்பது.

25. இப்பகுதியின் கீழான தவறொன்றைப் புரிவதற்கு எத்தனித்தல் அல்லது பக்கபலம் வழங்குதல்.

15

### இலஞ்சமாக ....

பணம்
பணத்தின் மூலம் பெறுமதியை அளவிடக்கூடிய ஒரு பொருள்
பணத்தினால் பெறுமதியை அளவிட முடியாத ஒரு பொருள்

- கைமாறலாம்.

16

அதாவது..

1.கடன், கட்டணம், அனுகூலம் கிடைக்கப்படுதல்
2.ஏதேனும் பதவி அல்லது தொழில் கிடைக்கப்படுதல்
3.கடன் அல்லது கடப்பாட்டிலிருந்து விடுவிப்பு
4.உரிமை அல்லது ஒழுக்காற்று நடவடிக்கையிலிருந்து பாதுகாப்பு
5.எவ்வகையிலுமான சேவை, உதவி அல்லது நன்மை வழங்கப்படுதல்

17

சேவை, உதவி அல்லது அனுகூலம் எனப்படுவது....

1. பாலியல் ரீதியான திருப்தி பெறுவதன் ஊடாக உடல் ரீதியாக பெற்றுக்கொள்ளும் சேவை....
2. ஒரு பிள்ளையை பிரபல்யமான பாடசாலையில் சேர்த்துக்கொடுப்பதன் மூலம் பெறப்படுகின்ற உதவி..
3. வெளிநாட்டு புலமைப்பரிசில் பெற்றுக் கொள்வதன் மூலம் உடல் ரீதியாக பெற்றுக்கொள்ளும் அனுகூலம் ...

இலஞ்சமாக அமையலாம்.

18

## இடைத்தரகர் மூலமான இலஞ்சம் ...?

இடைத்தரகரின் அறிவு அல்லது உடன்பாட்டுடன் அந்த நபர் அல்லது வேரொரு நபர் சார்பாக நேரடியாகவோ அல்லது வேரொரு வகையிலோ இலஞ்சக் குற்றமொன்று புரியப்படும் பட்சத்தில் அத் தவறானது மூலநபரால் புரியப்பட்ட தவறாக சட்டம் கருதுகின்றது.

- 89 ஆம் பிரிவு

19

## ஊழல்

20

## ஊழல் என்றால் என்ன?

அரச ஊழியரொருவர் தமது பதவியை தனிப்பட்ட நலன்களைப் பெற்றுக்கொள்வதற்காகப் பயன்படுத்துதல் ஊழல் என அழைக்கப்படுகின்றது.

- 70 ஆம் பிரிவு

21

## ஊழல் என்றால் என்ன?

அரச ஊழியர் ஒருவர் தமக்கு முறையற்ற அனுகூலத்தைப் பெற்றுக்கொள்வதற்காக அல்லது வேரொரு நபருக்கு முறையற்ற அனுகூலத்தைப் பெற்றுக்கொடுப்பதற்கு அல்லது அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்படுத்துவதற்கு அல்லது வேறொருவருக்கு முறையற்ற நட்டத்தை ஏற்படுத்துவதற்கு,

தமது உத்தியோகபூர்வ பதவியின் பயனைக் கொள்வது ஊழலாகும்...!

22

## தண்டனைகள் ...

07 வருடங்களுக்கு மேற்படாத காலப்பகுதிக்கான கடுழிய சிறைத்தண்டனை மற்றும் 5000.00 ரூபாவினை விஞ்சாத குற்றப்பணம்.

ஊழல் தொடர்பான குற்றவாளியாக தீர்மானிக்கப்படும் பட்சத்தில் 10 வருடங்களுக்கு மேற்படாத சிறைத்தண்டனை மற்றும் 10000.00 ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணம்.

சன்மானத்தின் பெறுமதிக்கு ஏற்ற குற்றப்பணம்.

ஆதனங்கள் அரசுடமையாக்கப்படுதல்.

பிரசாவுரிமை இல்லாதொழிக்கப்படுதல்.

23

## சொத்துக்கள் பற்றிய சட்டம்

ஒருவர் கொண்டுள்ள சொத்துக்கள் அந்த நபரின் அறியப்பட்ட வருமானங்களின் அல்லது கிடைப்பனவுகளின் ஒரு பகுதியாக அமையாத சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட சொத்துக்கள் இலஞ்சத்தின் மூலம் கைப்பற்றிக்கொள்ளப்பட்ட சொத்துக்களாக சட்டம் கருதும்.

ஒருவரது மனைவி்.கணவன் அல்லது 18 வயதுக்குக் குறைந்த திருமணமாகாத பிள்ளையொன்றின் பெயரிலுள்ள பணம் அல்லது பணமல்லாத ஆதனங்கள் குறிப்பிட்ட நபரால் கைப்பற்றிக்கொள்ளப்பட்டவையாக சட்டம் கருதும்.

24

விளைவுகள்

25

26

# PPT - 07 நேர்மைத்திறன் என்றால் என்ன?

## நேர்மைத்திறன் என்றால் என்ன?

1

எமது பழங்கால விழுமியங்கள்/பெறுமதிகள்

துட்டகைமுனு மன்னன் மஹா ஸ்தூபத்தை அல்லது ருவன்வெலிசேய தாது கோபுரத்தை நிர்மாணித்ததன் பின்னர் விகாரைக்கான நான்கு வாயில்களிலும் 4 பணக் கடாரங்களை வைத்து கோபுரத்தை நிர்மாணிப்பதற்காக அர்ப்பணித்த உழைப்பிற்குப் போதியளவு பணத்தை எடுத்துக்கொள்ளுமாறு நிர்மாணப் பணிகளில் ஈடுபட்ட நாட்டு மக்களிடம் கோட்டுக்கொண்டதாக வரலாறில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2

Oxford அகராதி Integrity எனும் பதத்தினை “the quality of being honest and having strong moral principles” (நேர்மைப் பண்பினையும் வலுவான நெறிமுறைகளையும் கொண்டிருத்தல்) என பொருள்கோடல் செய்கின்றது.

சென்னைப் பல்கலைக்கழக அகராதி Integrity எனும் பதத்திற்கு தமிழ்ப் பொருள் வழங்கும்போது முழுமை, கூறுபடாநிலை, நேர்மை, வாய்மை, நாணயம், ஒழுங்கு போன்ற சில பதங்களைப் பயன்படுத்தியுள்ளன.

3

### நேர்மைத்திறன் – பலவிதமான பொருள்கோடல்கள்

நேர்மைத்திறன் என்பது தனக்கு உண்மையாகவிருப்பதாகும். நேர்மை என்பது மற்றவர்களுக்கு உண்மையைக் கூறுவதாகும். (Integrity is telling myself the truth. And honesty ai telling the truth to other people)

- அமெரிக்க எழுத்தாளர் ஸ்பென்சர் ஜோன்சன்

நேர்மைத்திறன் என்பது எது வசதியானது எது சரியானது என்பவற்றுக்கிடையிலான தேர்வாகும். (ஐவெநபசவைல - வாந உாழளைந டிநவறநநெ றாயவ'ள உழஅகழசவயடிடந யனெ றாயவ'ள சபைாவ)

- டோனி டன்ஜி

நேர்மைத்திறன் என்பது பிறர் உங்களைப் பார்த்துக்கொண்டிராத வேளையிலும் சரியானதைச் செய்வதாகும். (ஐவெநபசவைல ளை னழஇபெ வாந சபைாவ வாபைெஇ நளநஎ றாநஎ ழெ ழநெ ளை றயவஉாபைெ ) - ஆங்கிலேய எழுத்தாளர் சீ.எஸ்.லுவீஸ்.

4

### நேர்மைத்திறன்

நம்பிக்கை, பொறுப்பு, ஒத்துணர்வு, சட்டத்திற்கு மதிப்பளித்தல், ஒழுங்கம், நேர்மை, கொள்கைப் பிடிப்பு போன்ற பண்புகளைக் கொண்டமைந்த ஒருவரின் பெறுமதிகளுக்கும் செயற்பாடுகளுக்கும் இடையிலான ஒரு கலப்பாகும்.

நேர்மைத்திறன்மிக்க ஒருவர் சமூகத்தில் ஏனையோருக்கு உண்மையாக இருப்பது மட்டுமன்றி தமக்கும் உண்மையானவராக இருத்தல் வேண்டும்.

5

### நேர்மைத்திறன் என்பதுடன் இணைந்துள்ள விழுமியங்களும் பண்புகளும்

| | |
|---|---|
| தார்மீகம் | - RIGHTEOUS |
| மாண்பு | - HONOURABLE |
| உண்மை | - TRUTHFUL |
| குற்றமின்மை | - BLAMELESS |
| வசீகரம | - GRACEFUL |
| நிமிர் நேர்வான தன்மை | - UPRIGHT |
| ஒழுக்காறு | - DISCIPLINED |
| விசுவாசம் | - FAITHFUL |
| பரிசுத்தம்/புனிதம் | - HOLY |

6

### நேர்மைத்திறன்மிகு தேசத்தை உருவாக்குவதற்காக...

தனிநபர் நேர்மைத்திறன்மிக்கவராக இருத்தல் வேண்டும்.

ஆட்கள் குழுக்கள் இணைந்து உருவாகியுள்ள சமூகம் நேர்மைதிறன்மிக்கதாக இருத்தல் வேண்டும்.

நிறுவனங்கள் நேர்மைத்திறன்மிக்கதாக இருத்தல் வேண்டும்.

தேசம் நேர்மைத்திறன்மிக்கதாக இருத்தல் வேண்டும்.

தேசங்களைக் கொண்டமைந்த உலகம் நேர்மைத்திறன்மிக்கதாக இருத்தல் வேண்டும்.

7

### சொத்துக்கள், பொறுப்புக்கள் பிரகடனச் சட்டம் (1975 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கம்)

- சட்டம் இயற்றப்படுகின்ற இடம்
- சட்டம் நடைமுறைபடுத்தப்படுகின்ற இடம்
- நீதிநிலைநிறுதப்படுகின்ற இடம்
- அரச துறை
- தனியார் துறை
- மத, ஊடகம், சிவில் சமூகம் உள்ளிட்ட சகல துறைகளும்
- பொது மக்கள்
- எதிர்கால சந்ததியினராகிய இளைஞர் யுவதிகள் மற்றும் சிறுவர்கள்

8

## நேர்மைத்திறன் என்றால் என்ன ?


துண்டுப்பிரசுரம் - இலக்கம் 05

"நேர்மைத்திறன" என்பது ஆங்கில மொழிச் சொல்லாகிய Integrity என்பதற்கான பொருளை வழங்குவதற்காகவே உருவாக்கப்பட்டுள்ள தமிழ்ச் சொல்லாகும். நேர்மைத்திறன் என்பதன் சொல்லர்த்தினை மேற்கொண்டும் விளக்கும்போது "சிறந்த ஒழுங்கமைவுடன்கூடிய" எனும் பொருள் அதில் உள்ளடங்கியிருப்பதனைக் காணமுடியும். Oxford அகராதி Integrity எனும் பதத்தினை "the quality of being honest and having strong moral principles" (நேர்மைப் பண்பினையும் வலுவான நெறிமுறைகளையும் கொண்டிருத்தல்) என பொருள்கோடல் செய்கின்றது. சென்னைப் பல்கலைக்கழக அகராதி Integrity எனும் பதத்திற்கு தமிழ்ப் பொருள் வழங்கும்போது முழுமை, கூறுபடாநிலை, நேர்மை, வாய்மை, நாணயம், ஒழுங்கு போன்ற சில பதங்களைப் பயன்படுத்தியுள்ளன.

நேர்மைத்திறன் என்றால் என்ன என்பது தொடர்பாக துல்லியமானதும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டதுமான ஒரு பொருள்கோடல் இதுவரை முன்வைக்கப்படவில்லையென்ற போதிலும் அது தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள பலவிதமான பொருள் கோடல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்களின் ஊடாக அதன் மூலம் புலப்படுகின்ற பொருளைப் புரிந்துகொள்வது கடினமல்ல.

- நேர்மைத்திறன் என்பது தனக்கு உண்மையாகவிருப்பதாகும். நேர்மை என்பது மற்றவர்களுக்கு உண்மையைக் கூறுவதாகும். (Integrity is telling myself the truth. And honesty ai telling the truth to other people) - அமெரிக்க எழுத்தாளர் ஸ்பென்சர் ஜோன்சன்.
- நேர்மைத்திறன் என்பது எது வசதியானது, எது சரியானது என்பவற்றுக்கிடையிலான தேர்வாகும். (Integrity - the choice between what's convenient and what's right) - டோனி டன்ஜி.
- நேர்மைத்திறன் என்பது பிறர் உங்களைப் பார்த்துக்கொண்டிராத வேளையிலும் சரியானதைச் செய்வதாகும். (ஐவெநபசவைல ளை னழைபெ வாந சபைாவ வாைெஇ நளநெ றாநெ ழெ ழநெ ளை றயவஉாைபெ) - ஆங்கிலேய எழுத்தாளர் சீ.எஸ்.லுவீஸ்.
- நேர்மைத்திறன் என்பது ஆட்களால் மட்டுமன்றி நிறுவனங்களினாலும் பின்பற்றப்பட வேண்டிய, ஊழலுக்கு எதிரான தடைகளை ஏற்படுத்துகின்ற, விழுமியங்களுக்கும் நல்லொழுக்கங்களுக்கும் அமைவான கொள்கைகளும் நியமங்களுமாகும் என்பது அது அது தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள மற்றுமொரு பொருள்கோடலாகும்.

**நேர்மைத்திறன் - ஆளொருவரின் விழுமியங்களினதும் செயற்பாடுகளிதும் கலப்பாகும்.**




மேற்படி பொருள்கோடல்களும் தெளிவுபடுத்தல்களும் பொருள்படுத்தும் பொருளின் பிரகாரம் நேர்மைத்திறன் என்பதனை நேர்மை, நல்லொழுக்கம், ஒழுக்கநெறி, நற்பண்புகளின் மீது செயற்படுதல், ஒப்பந்தங்களின்றி நெறிமுறைக் கோட்பாடுகளுக்கும் விழுமியங்களுக்கும் அமைவாக செயற்படுதல் போன்ற பெறுமதிகள் (Values) மற்றும் செயற்பாடுகள் (Actions) என்பவற்றின் கலப்பின நிலைமையாக

கருதுவது மிகவும் நியாயமானதெனத் தெரிகின்றது.

நேர்மைத்திறனுடன்கூடிய ஒருவர் சமூகத்தின் முன்னால் பிறருக்கு உண்மையானவராகவிருத்தல் மட்டுமன்றி தமது மனச்சாட்சியின் பிரகாரம் தமக்கும் உண்மையானவராக இருத்தல் வேண்டும்.

**நேர்மைத்திறன் என்பதுடன் இணைந்துள்ள விழுமியங்களாக பின்வரும் பண்புகளை இனங்காண முடியும்.**

- தார்மீகம் - RIGHTEOUS
- மாண்பு - HONORABLE
- உண்மை - TRUTHFUL
- குற்றமின்மை - BLAMELESS
- வசீகரம் - GRACEFUL
- நிமிர் நேர்வான தன்மை - UPRIGHT
- ஒழுக்காறு - DISCIPLINED
- விசுவாசம் - FAITHFUL
- பரிசுத்தம்/புனிதம் - HOLY

நேர்மைத்திறன் என்பது எமக்கு ஒரு புதிய எண்ணக்கருவல்ல. எமது பழங்கால விழுமியங்களையும் பெறுமதிகளையும் தேடிச் செல்லும்போது நேர்மைத்திறன் தொடர்பாக கூறப்படுகின்ற பல உதாரணங்கள் எமது வரலாற்று மரபுரிமைகளில் காணப்படுகின்றன. துட்டகைமுனு மன்னன் மஹா ஸ்தூபத்தை அல்லது ருவன்வெலிசேய தாது கோபுரத்தை நிர்மாணித்ததன் பின்னர் விகாரைக்கான நான்கு வாயில்களிலும் 4 பணக் கடாரங்களை வைத்து கோபுரத்தை நிர்மாணிப்பதற்காக அர்ப்பணித்த உழைப்பிற்குப் போதியளவு பணத்தை எடுத்துக்கொள்ளுமாறு நிர்மாணப் பணிகளில் ஈடுபட்ட நாட்டு மக்களிடம் கோட்டுக்கொண்டதாக வரலாறில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தேவையாயின் அதற்குப் பங்களிப்பு நல்காதவர்களும் குறிப்பிட்ட சந்தர்ப்பத்தை தவறான முறையில் பயன்படுத்தி பயன்பெற்றிருக்க முடியும் என்றபோதிலும் எவரும் அவ்வாறு செயற்படவில்லை என வரலாறில் கூறப்பட்டுள்ளது.

நேர்மைத்திறன்மிகு தேசத்தை உருவாக்கும் முயற்சியானது அனைத்துத் தரப்புகளும் ஒன்றினைந்து யதார்த்தமாக அமைத்துக்கொள்ள வேண்டிய ஒரு இலக்காகும். அதன்போது தனிநபர் நேர்மைத்திறன்மிக்கவாராக இருத்தல் வேண்டுமென்பது மட்டுமன்றி ஒவ்வொரு ஆட்கள் குழுக்களையும் கொண்டமைந்த சமூகமும் நேர்மைத்திறன்மிக்கதாக இருத்தல் வேண்டும். அதேவேளை, அச்சமூகத்தில் காணப்படுகின்ற நிறுவன முறைமையும் நேர்மைத்திறன்மிக்கதாக இருப்பதும் அவசியமாகும். மேற்படி அனைத்துத் துறைகளும் ஒன்றாக இணைவதன் மூலம் தேசம் நேர்மைத்திறன்மிக்க தேசமாக அமையும்.

**நேர்மைத்திறன் அதிகளவில் தேவைப்படும் துறைகள்/நிறுவனங்கள்**

- சட்டம் இயற்றப்படுகின்ற இடம்
- சட்டம் நடைமுறைபடுத்தப்படுகின்ற இடம்
- நீதிநிலைநிறுதப்படுகின்ற இடம்
- அரச துறை
- தனியார் துறை
- மத, ஊடகம், சிவில் சமூகம் உள்ளிட்ட சகல துறைகளும்
- பொது மக்கள்
- எதிர்கால சந்ததியினராகிய இளைஞர் யுவதிகள் மற்றும் சிறுவர்கள்

# PPT - 08 நலன்களுக்கு இடையிலான முரண்பாடு பற்றிய விதிகள் (முரண்பாட்டு ஆர்வ விதிகள்)

## நலன்களுக்கு இடையிலான முரண்பாடு பற்றிய விதிகள் (முரண்பாட்டு ஆர்வ விதிகள்)

1

### நலன்களுக்கு இடையிலான முரண்பாடு என்றால் என்ன?

மனிதர்கள் என்ற வகையில் எம் அனைவருக்கும் பல்வேறுபட்ட நலன்கள் காணப்படுகின்றன. (உறவுமுறை, ஒரு கிராமம் எனும் மனப்பாங்கு, இனம், சாதி, படித்த பாடசாலை என்ற வகையில் …)
இந்த நலன்களுடன் மோதல்கள் ஏற்படுவதும் வழக்கமான ஒரு விடயமாகும். இருப்பினும், அத்தகைய மோதல்கள் தொடர்பாக இங்கு கலந்துரையாடப்படவில்லை.

நலன்களுக்கு இடையிலான முரண்பாடு என்பதன் மூலம் ஊழல், மோசடி, களவு போன்ற சமூகப் பிரச்சினையாக மாறியுள்ள கடமைசார் பொறுப்பினை விஞ்சி தனிப்பட்ட பற்றுக்களின் மீது செயற்படுவதன் பிரச்சினை கருதப்படுகின்றது.

இதன்போது தம்முடன் விசேட தொடர்பினைக் கொண்டவர்களுக்கு கடமையின்போது தவறான அனுசரணை வழங்கப்படுவது இடம்பெறுகின்றது.

2

### உறவுகளுக்கு இடையிலான முரண்பாடு என்பது,

**'ஒருவரது கடமை ரீதியான அபிலாஷைகள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தனிப்பட்ட அபிலாஷைகள் மூலம் நிராகரிக்கப்படலாகாது'** எனும் கோட்பாட்டுக்கு முரணாக செயற்படுவதாகும்.

'நலன்களுக்கு இடையிலான முரண்பாடு வெளிப்படுத்தப்படாமை' ஆனது இலஞ்சச் சட்டத்திற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திருத்தங்களின் பிரகாரம் சட்ட ரீதியான ஒரு தவறாக பொருள்கோடல் செய்யப்பட்டுள்ளது. அதன்பிரகாரம் தாபன விதிக்கோவையின் XLVII மற்றும் XXIX ஆகிய அத்தியாயங்களில் இது தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களும் இன்றைக்கு ஏற்புடையதாக அமையும் வகையில் விரிவாக்கப்பட்டுள்ளன. இந்த வழிகாட்டல்களின் நோக்கம் நலன்களுக்கு இடையிலான முரண்பாடு தொடர்பாக விழிப்புடன் செயற்படுகின்ற கலாசாரமொன்றை மேம்படுத்துவதாகும்.

3

### நலன்களுக்கு இடையிலான முரண்பாட்டின் வடிவங்கள்

**உன்மையாகவே நலன்களுக்கு இடையில் முரண்பாடு காணப்படும் சந்தர்ப்பம் -**
கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் அல்லது தீர்மானம் மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் முரண்பாடு தெளிவாகக் காணப்படும். அதனை தற்காலத்தில் தெளிவாகக் காண முடியும்.

எதிர்காலத்தில் நலன்களுக்கு இடையிலான முரண்பாடு ஏற்படக்கூடிய சந்தர்ப்பம் -
முரண்பாடு எதிர்காலத்தில் ஏற்பட முடியும். அத்தகைய ஒரு விடயம் தற்போது தெளிவாகக் காணப்படாவிடினும் அத்தகைய மோதல் ஏற்படுவதற்கான வாய்ப்புள்ளது.

**நலன்களுக்கு இடையில் மோதல் உண்மையாகவே இல்லாதபோதிலும் ,அவ்வாறு உள்ளதெனத் தெரியும் சந்தர்ப்பம் -**

உண்மையான அல்லது எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய மோதல் இல்லாத போதிலும் பிறர் அதனை நோக்கும் விதத்தில் நலன்களுக்கு இடையில் மோதல் உள்ளதென்ற கருத்து உருவாகலாம்.

4

### நலன்களுக்கு இடையில் முரண்பாடு ஏற்படும்போது என்ன செய்ய வேண்டும்?

நலன்களுக்கிடையிலான மோதல் நிலைமைகளை பயனுள்ள வகையில் முாகமை செய்வதற்கான பொறுப்பு நிறுவனத் தலைவர்களுக்கே ஒப்படைக்கப்படுகின்றது.

அதற்காக முகாமைத்துவக் குழுவொன்று நிறுவப்படும்.

எவரேனும் உத்தியோகத்தருக்கு நலன்கள் தொடர்பில் முரண்பாட்டு நிலைமை ஏற்படும் பட்சத்தில் முதலாவதாக அது தொடர்பாக சம்பந்தப்பட்ட குழுவிற்கு வெளிப்படுத்த வேண்டும்.

அதிலிருந்து ஏற்பட்டுள்ள சிக்கலை முகாமை செய்வது தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்வது குழுவின் பொறுப்பாகும். இவ்வாறு வெளிப்படுத்தப்படுவதன் மூலம் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தருக்கு சிக்கலுக்கு முகங்கொடுப்பது இலகுவாக அமைவதோடு அவருக்குப் பாதுகாப்பும் கிடைக்கும்.

5

### முரண்பாட்டு நிலைமையொன்றில் முகாமைத்துவக் குழுவினால் மேற்கொள்ளப்படக்கூடிய தீர்மானங்கள்

1. **கைவிடல்** - சில காரணங்களின் அடிப்படையில் முரண்பாடுகளை பொருட்படுத்தாது விடுவதற்குத் தீர்மானித்தல்.

2.**அகற்றுதல்** - தீரமானம் மேற்கொள்ளும் செயன்முறையிலிருந்து விலகுமாறு உத்தியோகத்தருக்கு அறிவுறுத்தல் வழங்குதல்.

3.**பிறருக்கு மாற்றுதல்** - உத்தியோகத்தர் முரண்பாட்டுக்குக் காரணமாக அமையும் நலனிலிருந்து விலகுதல்(உதாரணமாக: பங்கு உரிமையை வேறு ஒருவருக்குச் சாட்டுதல்)

4.**வரையறுக்கப்படுதல்** - சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் செயற்பாட்டிலிருந்து முழுமையாக விலகுவதற்குப் பதிலாக சில வரையறைகளுக்கு உட்பட்டுசெயறபடுவது இங்கு இடம்பெறுகின்றது.

5.ஆட்சேர்ப்பு - விடயம் தொடர்பான செயற்பாட்டின் ஒரு பகுதியை அல்லது முழுவதையும் மேற்பார்வை செய்வதற்கான நடவடிக்கைகளை பக்கச்சார்பற்ற மூன்றாம் தரப்பிற்கு ஒப்படைத்தல்.

6.**இராஜினாமாச் செய்தல்** - உத்தியோகத்தர் நிறுவனத்தில் வகிக்கும் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்தல்.

6

# PPT- 09 அன்பளிப்பு பற்றிய விதிகள்

## அன்பளிப்பு பற்றிய விதிகள் என்றால் என்ன?

1

### திவங்காவின் அன்பளிப்பு

திவங்கா, ரஜித்த என்பவருடன் சிறிய காலம்தொட்டு ஒன்றாகப் படித்த ஒரு நண்பி. அவள் தற்போது வெளிநாட்டு தூதர் சேவையில் முதலாம் வகுப்பைச் சேர்ந்த செயலாளராக பணியாற்றுகின்றாள். குறுகிய விடுமுறை ஒன்றுக்காக நாட்டிற்கு வந்திருந்த அவள் தனது பழைய நண்பனைச் (ரஜித்த) சந்திப்பதற்காக சியம்பலாண்டுவ பிரதேச செயலகத்திற்குச் சென்றாள்.

திவங்கா ரஜித்தவைச் சந்திப்பதற்காக வெறுங்கையுடன் வரவில்லை. அவள் ரஜித்தவிற்காக விசேடமாக தயாரித்துக்கொண்டுவந்த சிறிய பார்சல் ஒன்றுக்குள் காந்தியின் அகிம்சைப் போராட்டம் தொடர்பாக புதிதாக எழுதப்பட்ட நூல் ஒன்றும், ரஜித்தவிற்கு மிகவும் பிடித்த கழுத்துப்பட்டியொன்றும் ரஜித்தவின் மனைவிக்குப் பரிசாக கொண்டுவந்த சிறிய பணப்பையயொன்றும் ரஜித்தவின் குட்டி மகளுக்கு ஜப்பானிலிருந்தே கொண்டுவந்த சிறிய பொம்மை ஒன்றும் இருந்தன.

கடமை புரியும் இடத்தில் ரஜித்தவிற்கு திவங்காவின் அன்பளிப்பினைப் பெற்றுக்கொள்ள முடியுமா?

2

### சுசிறிபால முதலாளியின் இலக்கிய அனுசரணை

சுசிறிபால முதலாளி ஒரு மர வியாபாரி. அதே நகரத்தில் மேலும் சில தொழில்முயற்சிகளில் ஈடுபடுகின்ற முதற்தர பணக்காரர். அவருடைய பல்வேறுபட்ட நடவடிக்கைகளுக்காக நிதமும் பிரதேச செயலகத்திற்கு வருகின்ற ஒருவர். அதேவேளை கலை இலக்கிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் ஊக்கம் காட்டுகின்ற ஒரு ரசிகர்.

பிரதேச செயலகத்தின் இலக்கிய விழாவுக்கான சகல செலவுகளையும் தாமே தனியாக ஏற்றுக்கொள்ளத் தயாரென சுசிறிபால முதலாளி பிரதேச செயலாளரிடம் கூறுகின்றார். அதற்காக எதுவிதமான பிரசித்தியும் தனக்குத் தேவையில்லை எனவும் அவர் மேலதிகமாகவும் குறிப்பிடுகின்றார்.

பிரதேச செயலாளர் சுசிறிபால முதலாளியின் இலக்கிய அனுசரணையை பெற்றுக்கொள்வதில் தவறு உள்ளதா?

3

### இலஞ்சம் மற்றும் அன்பளிப்புகள்

இலஞ்சம் அல்லது ஊழல் என்பது பல்வேறுபட்ட வடிவங்களில் அரச சேவையிலும் அதற்கு வெளியிலும் இடம்பெறுகின்றன.

அன்பளிப்புகளாக இலஞ்சம் அல்லது ஊழல் வழங்கப்படுதல் சமூகத்தில் பேசப்படுகின்ற ஒரு விடயமாகும்.

அரச ஊழியர் ஒருவர் தமது உத்தியோகபூர்வ கடமையை துரிதமாக நிறைவேற்றுவதற்கு அல்லது அதிலிருந்து விலகியிருப்பதற்கு ஏதேனும் அவாநிறைவு பெற்றுக்கொள்வாராயின் இலஞ்சச் சட்டத்தின் கீழ் குற்றவாளியாக கருதப்படுவதற்கான ஒரு தவறைப் புரிகின்றார்.

4

### அன்பளிப்பும் அவாநிறைவும்

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துக்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்டுள்ள அன்பளிப்பு விதிகள் பற்றிய நடத்தைக் கோவையானது அன்பளிப்பு மற்றும் அவாநிறைவு என்பவற்றுக்கிடையிலான வித்தியாசத்தை காட்டுவதற்காக ஏற்பாடுகளை முன்வைத்துள்ளது.

பார்த்த பார்வையில் அன்பளிப்பாக தெரிகின்ற சில செயற்பாடுகளுக்கு இடமளிக்கின்ற சில விதிவிலக்குகளை காட்டுவதற்காகவும் அதில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தனிப்பட்ட தொடர்பின் அடிப்படையில் ஏற்றுக்கொள்ளக்கூடிய நடத்தை மற்றும் உத்தியோகபூர்வ நிலையில் பக்கச் சார்பின்மைக்கு சேதம் ஏற்படக்கூடிய நல்லொழுக்கத்திற்கு மாறான அல்லது குற்றவியலான நடத்தை தொடர்பான ஏற்பாடுகள் அன்பளிப்பு விதிகளில் தரப்பட்டுள்ளன.

5

### அன்பளிப்புகளை ஏற்றுக்கொள்ளல் பற்றிய ஏற்பாடுகள்

அன்பளிப்புகளை ஏற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகள் தொடர்பாக தாபன விதிக்கோவையின் XLVII ஆம் அத்தியாயத்திலும் தொடர்புடைய சுற்றறிக்கைகளிலும் ஏற்பாடுகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட விதிவிலக்குகளின் வரையறைகளை விரிவுபடுத்தி ஒன்றுக்கொன்று வித்தியாசமான சந்தர்ப்பங்களில் அவற்றை ஏற்புடையதாக அமைத்துக் கொள்ளும் விதம் தொடர்பாக மட்டுமன்றி அவற்றை எவ்வாறு பொருள்கோடல் செய்வது என்பது தொடர்பாகவும் இந்த அன்பளிப்பு விதிகளுக்கான வழிகாட்டலின் மூலம் தெளிவுபடுத்தப்படுகின்றன.

6

### அன்பளிப்பு பற்றிய விதிகளின் நோக்கங்கள்

அன்பளிப்பு கோரப்படுவதனைத் தடைசெய்தல்

அன்பளிப்பு வழங்கப்படுதல் மற்றும் பெற்றுக் கொள்ளப்படுதல் என்பவற்றை மட்டுப்படுத்துதல்.

அன்பளிப்பொன்றைப் பெற்றுக்கொள்ளும்போது தடைசெய்யப்பட வேண்டிய மூலங்கள் மற்றும் குறிப்பிட்ட தடைக்கான விதிவிலக்கினை
குறித்துரைத்தல்.

பெற்றுக்கொள்ளப்படும் அன்பளிப்புகளை பகிரங்கப் படுத்துவதற்காக செயன்முறை ஒன்றை வகுத்தல்.

அன்பளிப்புகளை அப்புறப்படுத்துவதற்காக செயன்முறையொன்றை வகுத்தல்.

இந்த விதிகளை பயனுள்ள வகையில் நடைமுறைப்படுத்துவதனை முகாமை செய்வதற்குத் தேவையான வழிகாட்டல்களை வகுத்தல்.

7

## கேள்விகள்/சிக்கல்கள்
## நன்றி

8

### அரச உத்தியோகத்தர்களுக்கான ஊழல் எதிர்ப்புப் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

## துண்டுப்பிரசுரம் - இலக்கம் 06

### “நேர்மையான இலங்கை”

### இலங்கையிலிருந்து இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்கான தேசிய செயற்பாட்டுத் திட்டம் 2019 னி 2023

இலங்கையிலிருந்து இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்கான தேசிய செயற்பாட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான பொறுப்பு அரச மற்றும் தனியார் ஆகிய இரு துறைகளுக்கும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. 2017 அக்டோபர் 24 ஆம் திகதி கூடிய அமைச்சரவையினால் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட மேற்படி செயற்பாட்டுத் திட்டமானது அனைத்து தரப்பினரும் ஒன்றினைந்து வெற்றி கொள்ளவேண்டிய ஒரு கூட்டு இலக்கு என்பதனை கருத்திற்கொண்டு இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு (CIABOC), சட்டவாக்கத்துறை, நிறைவேற்றுத்துறை, நீதித்துறை, சுயாதீன ஆணைக்குழுக்கள், தனியார் துறை, சிவில் சமூகம், வெகுசன ஊடகங்கள், கலைஞர்கள், அரசியல் கட்சிகள், மத நிறுவனங்கள் போன்ற சகல தரப்பினர்களும் பங்கேற்கக்கூடிய வகையில் அதனைத் தயாரித்துள்ளது.

இந்த நாட்டில் காணப்படுகின்ற சகல துறைகளும் உள்வாங்கப்படும் வகையில் குறுகியகால (01 மாதம் தொடக்கம் 12 மாதங்கள் வரை), நடுத்தர கால (12 மாதங்கள் தொடக்கம் 36 மாதங்கள் வரை) மற்றும் நீண்டகால (36 மாதங்கள் தொடக்கம் 60 மாதங்கள்வரை) ரீதியில் நிறைவேற்றுவதற்கு தெரிவுசெய்யப்பட்ட 221 செயற்பாடுகள் மேற்படி தேசிய செயற்பாட்டுத் திட்டத்தில் உள்ளடங்கியுள்ளன.

இலஞ்சமும் ஊழலும் அற்ற இலங்கையினை உருவாக்குவதற்காக சமுதாயத்தினாலும் பல்வேறுபட்ட நிறுவனங்களினாலும் ஒன்றாகவும் தனித்தனியாகவும் மேற்கொள்ளப்படக்கூடிய நடவடிக்கைகள் திட்டத்தில் 4 பிரதான உபாய மார்க்கங்களின் ஊடாக இனங்காணப்பட்டுள்ளன. அதன் ஐந்தாவது உபாயமார்க்கமாக கண்காணிப்பு அல்லது நடைமுறைப்படுத்தல், மேற்பார்வை மற்றும் மதிப்பீடு இடம்பெற வேண்டுமென தேசிய செயற்பாட்டுத் திட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| A - | முதலாவது உபாயமார்க்கம் | - தடுப்பு நடவடிக்கைகள் |
| B - | இரண்டாம் உபாயமார்க்கம் | - விழுமியம்சார் கல்வி மற்றும் சமுதாய ஈடுபாடு |
| C - | மூன்றாம் உபாயமார்க்கம் | - சட்டத்தை அமுல்படுத்தும் நிறுவனங்களை வலுவூட்டுதல் |
| D - | நான்காம் உபாயமார்க்கம் | - சட்ட மற்றும் கொள்கைத் திருத்தங்கள் |
| E - | ஐந்தாம் உபாயமார்க்கம் | - நடைமுறைப்படுத்தல், மேற்பார்வை மற்றும் மதிப்பீடு |

### A - தடுப்பு நடவடிக்கைகள்

ஊழலுக்கு எதிரான போராட்டத்தில் தடுப்பு எனும் விடயமானது இலங்கைக்குப் புதியதொரு எண்ணக்கருவாகும். இந்த விடயமானது உலகின் ஏனைய நாடுகளில் குறிப்பாக, பலம் பொருந்திய ஊழல் தடுப்பு நிறுவனங்களைக் கொண்டுள்ள நாடுகளில் விசேடமான ஈர்ப்பினைப் பெற்றுள்ளது. தடுப்பின் நோக்கம் ஊழலுக்கான வாய்ப்புகளைக் குறைத்தல் அல்லது இல்லாதொழிப்பதாகும். அதன்பிரகாரம் தடுப்பு என்பது புலனாய்வு மற்றும் வழக்குத் தொடுத்தல் ஆகிய செயற்பாடுகளுக்கு முன்னர் அமைந்துள்ள ஒரு நடவடிக்கை என்பதால் அது வெற்றிகரமாக அமையும் பட்சத்தில் புலனாய்வு நடவடிக்கைகள் தேவைப்படமாட்டா. தடுப்பு என்பது விசேடமாக மிகவும் அதிகமான செலவினத்தை ஏற்படுத்தக்கூடிய தண்டனை முறையியலுக்கு மிகவும் வெற்றிகரமானதும் நிலைபேறானதுமான ஒரு மாற்றுத் தீர்வாகும். ஒரு குற்றச்செயல் இடம்பெற்றதன் பின்னர் புலனாய்வு நடவடிக்கைகளையும் வழக்குத் தொடுத்தல்களையும் மேற்கொள்வது மட்டும் ஊழலைத் தடுப்பதற்கு பயன்மிகு நடவடிக்கையாக அமைகின்றதா எனும் விடயம் தற்போது பெரும் கலந்துரையாடலுக்கு உள்ளாகியுள்ளது. அத்தகைய நிலைமையின் கீழ் சிகிச்சையளிப்பதனைப் பார்க்கிலும் நோயைத்தடுப்பது ஆரோக்கியமானது எனும்

கொள்கையின் மீது தேசிய செயற்பாட்டுத் திட்டத்தில் கூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதன்போது இலஞ்சம் மற்றும் ஊழலை இலங்கையிலிருந்து இல்லாதொழிப்பதற்காகவுள்ள ஒரே வழி தண்டனை வழங்கப்படுவது மட்டுமே எனும் கருத்து புறந்தள்ளப்படுகின்றது.

தேசிய செயற்பாட்டுத் திட்டத்தில் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக இனங்காணப்பட்டுள்ள சில அடிப்படை நடவடிக்கைகள் பின்வருமாறு அமைந்துள்ளன.

### A-1. CIABOC இல் ஊழல் தடுப்புப் பிரிவின் உருவாக்கம்

ஊழல் தடுப்புப் பிரிவு, தடுப்பு உத்தியோகத்தர்கள், மனித வளம், தடுப்பு உத்தியோகத்தர்களுக்கும் இதர உத்தியோகத்தர்களுக்குமான தடுப்பு நடவடிக்கைகள் பற்றிய பயிற்சி, தேசிய ஆலோசனைப் பேரவை உருவாக்கப்படுதல்.

### A-2. பொதுத்துறையில் நேர்மைத்திறனை மேம்படுத்துதல் மற்றும் ஊழல் தடுப்புப் பிரிவொன்றை நிறுவுதல்

தேசிய நேர்மைத்திறன்மிகு உபாய மார்க்கங்கள், நேர்மைத்திறன்மிகு உத்தியோகத்தர்கள், ஊழல் தடுப்புக் குழு, நிறுவனசார் செயற்பாட்டுத் திட்டம், அபாய நேர்வுகளுக்கான மதிப்பீடு, வசதிகளை வழங்கும் உத்தியோகத்தர்கள், அன்பளிப்பு விதிகள், நலன்களுக்கு இடையிலான முரண்பாடு பற்றிய விதிகள், ஒழுக்கநெறிக் கோவைகள், நேர்மைத்திறன் சத்தியப் பிரமாணம், நேர்மைத்திறன் இலச்சினை, ஊழலற்ற வலயம், நேர்மைத்திறன் உறுதிமொழி.

### A-3. பொதுமக்களுக்கான, அரச சேவைகளுக்கு அணுகும் வசதியை மேம்படுத்தல்

பிரஜைகள் சாசனம், இலத்திரனியல் செலுத்தல் முறைமைகள், தரநியம செயன்முறைகளுக்கான காட்சிப்படுத்தல், டிஜிட்டல் பலகைகள், வரவேற்பு அதிகாரிகள்

### A-4. தனியார் துறையில் ஊழலைத் தடுத்தல்.

தற்போதுள்ள ஒழுக்கநெறிக் கோவைகளை மீளாய்வு செய்தல், நேர்மைத்திறன்மிகு ஒழுக்கநெறிக் கோவைகளை அறிமுகஞ்செய்தல், தொடர் கணக்காய்வு.

### A-5. மக்கள் பிரதிநிதிகளின் நேர்மைத்திறனை உறுதிப்படுத்துதல்.

பாராளுமன்ற ஒழுக்கநெறிக் கோவையை மீளாய்வு செய்தல், தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளுக்கு ஒழுக்கநெறிக் கோவைகளை அறிமுகஞ்செய்தல், நேர்மைத்திறன் உறுதிமொழி.

### A-6. அரச கொள்முதல் மற்றும் பொது நிதி நிர்வாகம் ஆகிய துறைகளின் நேர்மைத்திறனை மேம்படுத்துதல்.

தேசிய கொள்முதல் வழிகாட்டல்களை அறிமுகம் செய்தல், பொருட் கணிப்பீட்டு அறிக்கைகளுக்கான மீளாய்வு, நிறுவன தொழிற்பாட்டு வழிகாட்டல்களுக்கான மீளாய்வு, தொழில்நுட்ப மதிப்பீடுகள் தொடர்பான கையேடுகள், உத்தேசக் கருத்திட்டங்களைத் தெரிவு செய்வதற்கான முறையியல்கள், தற்றுணிபு வெளிப்படுத்தப்படும் ஆவணங்கள், விழிப்பூட்டல், ஊழல் தடுப்பு நியமங்களை உருவாக்குதல், நியம கூறுவிலை ஆவணங்கள், பொதுச்சொத்துக்களை அகற்றுவதற்கான முறையியல், இலத்திரனியல் கொள்முதல் முறையொன்றை அறிமுகஞ்செய்தல், டிஜிட்டல் பலகை மென்பொருள் அறிமுகஞ்செய்யப்படுதல, ீநீயு 2013 நடைமுறைபடுத்தப்படுதல், கருத்திட்ட முன்னுரிமைப் பட்டியல்கள், திறன் மதிப்பீடு.

## A-7. குற்றவியல் நீதி முறைமையின் நேர்மைத்திறனை மேம்படுத்துதல்

நீதிபதிகளுக்கான நன்னடத்தைக் கோவை மீளாய்வு செய்யப்படுதல், சட்டத்தரணிகளுக்கான நன்னடத்தைக் கோவை மீளாய்வு செய்யப்படுதல், வழக்குத் தொடருநர்கள், புலனாய்வாளர்களுக்காக நன்னடத்தைக் கோவைகளை அறிமுகஞ்செய்தல்.

## B - விழுமியம்சார் கல்வி மற்றும் சமுதாய ஈடுபாடு

விழுமியம்சார் கல்வி மற்றும் சமுதாய ஈடுபாடு ஆனது உலகம் முழுவதிலும் ஊழலை இல்லாதொழிப்பதற்காக தீர்க்கமான தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிரான போராட்டத்தினை வெறுமனே சட்டம் மற்றும் கொள்கைத் திருத்தங்களுக்கு மட்டும் வரையறுக்க முடியாது. இது அதற்கு அப்பால் சென்ற பிரஜைகளின் கருத்தியல்களில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான செயற்பாடாக அமைதல் வேண்டும். செயற்பாட்டுத் திட்டத்திற்கான “B” உபாயமார்க்கத்தின் மூலம் இலங்கையின் எதிர்கால சந்ததியினருக்காக நிலைபேறானதும் நேர்மைத்திறன்மிக்கதுமான கலாசாரமொன்றை உருவாக்குவதற்குத் தேவையான அடித்தளம் இடப்பட்டுள்ளது.

## B-1. சிறுவர்கள் மற்றும் இளைஞர்களுக்கான நேர்மைத்திறன்மிக்க கல்வி வழங்கப்படுதல்.

நேர்மைத்திறன்மிக்க கல்வி - கல்வி அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள் விழிப்பூட்டப்படுதல், 1 ஆம் வகுப்பு தொடக்கம் உயர்தரம் வரை ஒழுக்கநெறிகள் அறிமுகஞ்செய்யப்படுதல், நேர்மைத்திறன்மிகு செயற்பாடுகள் அறிமுகஞ்செய்யப்படுதல், நேர்மைத்திறன்மிகு கழகங்கள், ஆசிரியர்களுக்கான நேர்மைத்திறன் விழிப்பூட்டல்கள், ஆசிரியர்களின் பட்டப்பின் படிப்புக்கான நேர்மைத்திறன் நிகழ்ச்சித்திட்டங்கள், பல்கலைக்கழகங்களில் நேர்மைத்திறன்மிகு கல்வி, பல்கலைக்கழக விரிவுரையாளர்களை விழிப்பூட்டல், பல்கலைக்கழக பாடத்திட்டங்கள், தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் தொழில்சார் பயிற்சி நிறுவனங்கள் என்பவற்றுக்கான ஆரம்ப நிகழ்ச்சித்திட்டங்கள், கலாசாரப் போட்டிகள், பல்கலைக்கழகங்களில் நேர்மைத்திறன் கழகங்கள் உள்ளிட்டதாக தேசியக் கொள்கைகள் வகுக்கப்படுதல்.

## B-2. பொதுத்துறையின் விழிப்பூட்டலை மேம்படுத்துதல்

பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கான நேர்மைத்திறன்மிகு மொடியூல்கள், அடிப்படை நிகழ்ச்சித் திட்டங்களுக்காக நேர்மைத்திறன்மிகு நெறிமுறைகள், தொழில் சம்பந்தமான விழிப்பூட்டல்கள், வினைத்திறன்காண் தடைப் பரீட்சைகளுக்கான இலஞ்சம் சம்பந்தப்பட்ட வினாக்கள், நிறுவனங்களுக்கு இடையிலான போட்டிகள் மற்றும் அனுபவ பரிமாற்று நிகழ்ச்சித்திட்டங்கள்.

## B-3. வகைப்பொறுப்புக்கான பகிரங்கக் கேள்விளை உருவாக்குதல்

RTI தொடர்பான விழிப்பூட்டல், RTI தொடர்பான ஊடகப் பிரச்சாரம், அடிப்படை மனித உரிமைகள் தொடர்பான விழிப்பூட்டல், பிரசைகள் சாசனம் மற்றும் சேவை பெறுவதற்கான பிரஜைகளின் உரிமை தொடர்பான செயலமர்வுகள், ஊழலுக்கு எதிரான கூட்டமைப்புகளை உருவாக்குதல்.

## B-4. நேர்மைத் திறன்மிகு கலாசாரத்தை மேம்படுத்துவதற்காக ஊடகங்களின் வகிபாகத்தினை வலுவூட்டுதல்.

ஊடகத்துடன் முன்நகர்தல், பிரச்சார நடவடிக்கைகளுக்காக ஊடகத்துடன் கைகோர்த்தல், ஊடகங்களுக்கான ஒழுக்கநெறிக் கோவை, ஊடகங்களுக்கான பயிற்சி அமர்வுகள், வழக்குகள் தொடர்பாக பிரச்சாரம் செய்யப்படுதல்.

## B-5. பிரஜைகளையும் சிவில் சமூகத்தையும் விழிப்பூட்டுவதன் ஊடாக நேர்மைத்திறன்மிகு கலாசாரத்தின் பொருட்டு அவர்களின் பங்களிப்பினை மேம்படுத்துதல்.

தொழிற்சங்கங்கள், சமுதாயத் தலைவர்கள், மதத்தலைவர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் என்போரை விழிப்பூட்டல், ஊழல் தடுப்புத் தொடர்பான கற்றல் சாதனங்களையும் செய்திகளையும் உருவாக்குதல், நேர்மைத்திறன்மிகு பரீட்சைகள், CIABOC வலைதளம் தொடர்பாக பிரச்சாரம் செய்தல், கலை மற்றும் கலாசாரம் என்பவற்றின் மூலம் சமூகத்தினை மாற்றியமைத்தல்.

## B-6. நேர்மைத்திறன்மிகு சமூகத்தை உருவாக்குவதற்காக தனியார் துறையின் பங்களிப்பினைப் பெறுதல்

ஊழல் தடுப்பு நடவடிக்கைகளுக்காக தனியார்துறையுடன் கைகோத்தல், விழிப்புணர்வை ஏற்படுத்துதல், CSR நிகழ்ச்சித்திட்டங்களாக நேர்மைத்திறனை மேம்படுத்துதல், CIABOC உத்தியோகத்தர்களுக்காக தனியார்துறை குழுக்களுடனான பயிற்சிகள், அரச மற்றும் தனியார் துறையில் நேர்மைத்திறன்மிகு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படுதல்.

## B-7. மக்கள் பிரதிநிதிகளின் விழிப்புணர்வை மேம்படுத்துதல்

மக்கள் பிரதிநிதிகள் மற்றும் பாராளுமன்ற மேற்பார்வை குழுக்களுக்கு உலகின் சிறந்த பயன்பாடுகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுதல்.

## B-8. நீதிபதிகள் மற்றும் நீதித்துறை உத்தியோகத்தர்கள் விழிப்பூட்டப்படுதல்

உலகிலுள்ள மிகச்சிறந்த பயன்பாடுகள் தொடர்பாக நீதிபதிகளை விழிப்பூட்டல், அனுபவ பகிர்வு நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குசெய்தல்.

## C - சட்டத்தை அமுல்படுத்தும் நிறுவனங்களை வலுவூட்டுதல்

ஊழல் தடுப்பு நிறுவனங்களுக்குள் சட்டத்தை அமுல்படுத்துவதற்கான மற்றும் வழக்குத் தொடுப்பதற்கான நிறுவனங்களும் உள்ளடங்கும். ஆயினும், அத்தகைய நிறுவனங்களை நிறுவுதல் மட்டும் போதுமானதல்ல. குறிப்பிட்ட நிறுவனங்களின் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்காக வளங்கள் தேவைப்படுகின்றன. பெருமளவிலான குற்றவாளிகள் சர்வதேசரீதியில் காணப்படுகின்ற நுணுக்கமான குற்றச்செயல் முறைகளைப் பயன்படுத்துகின்ற போதிலும் ஊழல் தடுப்பு நிறுவனங்களில் அவற்றை எதிர்கொள்ளக்கூடிய போதிய நிபுணத்துவ அறிவு இன்மையானது பாரிய சிக்கலாக மாறியுள்ளது. இதற்கான பிரதான காரணமாக ஊழல் தடுப்பு நிறுவனத்திடம் காணப்படுகின்ற நிதி மற்றும் மனித வளப் பற்றாக்குறை அமைந்துள்ளது. எவ்வாறாயினும், இந்த நிலைமையானது ஒருபுறத்தில் இருக்கக்கூடிய குற்றவாளிகளுக்கும் மறுபுறத்தில் இருக்கக்கூடிய புலனாய்வாளர்கள் மற்றும் வழக்கு தொடருனர்களுக்கும் இடையில் சமநிலையின்மையை ஏற்படுத்துவதற்குக் காரணமாக அமைந்துள்ளது. இந்நிலைமையானது குற்றவாளிகளுக்குச் சாதகமான நிலைமையை ஏற்படுத்தியுள்ளது.

எனவே, இந்த நிலைமைகளுக்குத் தீர்வாக தேசிய செயற்பாட்டுத் திட்டத்தில் பின்வரும் முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

## C-1. CIABOC வளங்களும் தொழிற்பாட்டுச் சட்டகமும்

புலனாய்வுப் பிரிவின் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மென்பொருள் மேம்பாட்டுத் திட்டம், உள்ளக அலுவலக புதுப்பித்தல், ICT அடிப்படையிலான மேம்படுத்தல்கள், சொத்துக்களின் புலனாய்வின் பொருட்டு 12 கருவிகள், CIABOC இற்கான மனிதவளக் கொள்கை உருவாக்கப்படுதல், CIABOC இற்காக மேலதிக அலகுகளை உருவாக்குதல், புறத் தடயவியல் பணியாட்டொகுதிக்கான வலையமைப்பு,

நிதி சுயாதீனத்தன்மை தொடர்பான பரிந்துரைகள், மாகாண நிலையங்கள், CIABOC நடைமுறை வழக்கங்களைக் காட்சிப்படுத்துதல்.

### C-2. புலனாய்வு நடவடிக்கைகள் மற்றும் வழக்கு தொடரல் சம்பந்தமான முறைசார்தன்மை

பதவியணியை அதிகரித்தல், நிபுணத்துவ பதவியணியினரை நியமித்தல், புலனாய்வாளர்களுக்கான பயிற்சிகளையும் பயிற்சிச் செயலமர்வுகளையும் வழங்குதல், பணி மேற்பார்வைக் குழுக்கள், புலனாய்வாளர்களுக்கான ஒழுக்கநெறிக் கோவை, வழக்குத் தொடருனர்களின் சம்பள அதிகரிப்பு, வழக்குத் தொடருனர்களுக்கான பயிற்சிகள், வழக்குத்தொடருனர்களுக்கும் புலனாய்வாளர்களுக்கும் ஒழுக்கநெறிகள் மற்றும் சிறந்த பயன்பாடுகள் தொடர்பான விழிப்பூட்டல்களை வழங்குதல், புதிய மேல் நீதிமன்றங்களின் முன்னேற்ற மீளாய்வு, புலனாய்வு பற்றிய கையேடுகள், வழக்குகளைத் தெரிவு செய்தல் தொடர்பான வழிகாட்டலொன்றை உருவாக்குதல், விசேட வழக்குகள் தொடர்பாக நீதிபதிகளுக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சி வழங்கப்படுதல்.

### C-3. நிதிசார் குற்றங்களைக் கையாளும் சட்ட அமுலாக்கல் நிறுவனங்களை வலுப்படுத்தல்

புலனாய்வாளர்களுக்கான பயிற்சிகள், COPA, COPE, PERC அங்கத்தவர்களுக்குத் தொழில்நுட்ப மற்றும் நிபுணத்துவ பயிற்சிகள் வழங்கப்படுதல், கற்றல் பரிமாற்று நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்படுதல், ஒழுக்கநெறிக் கோவை, இரண்டாம் நிலை அடிப்படையில் பகுப்பாய்வாளர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள், தடயவியல் கணக்குகள் பற்றிய அலகுக்கு ICT வசதி வழங்கப்படுதல், சிறிய அளவிலான தடயவியல் ஆய்வகங்கள், திருடப்பட்ட சொத்துக்களை மீளக் கைப்பற்றும் கூட்டுகள், சட்ட உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்தல், சிறந்த பயன்பாடுகளைப் பரிமாறிக் கொள்ளல்.

### C-4. நிறுவனங்களுக்கு இடையிலான உறவுகளை வலுப்படுத்தல்

சட்டத்தை அமலபடுத்தும் நிறுவனங்களுக்கு இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்களைக் கைச்சாத்திடுதல் (நிதிசார் குற்றங்களுக்குரியதாக), மேல்மட்டத்தில் வட்டமேசைக் கலந்துரையாடலின் ஊடாக அனுபவப் பரிமாற்றமும் சிறந்த பயன்பாடுகளுக்கான பரிமாற்றமும், இணைப்பாக்கம் செய்யப்பட்ட புலனாய்வு மற்றும் தகவல் பரிமாற்றத்திற்காக முன்மொழிவுகளை முன்வைத்தல், MLA இற்கான நிறுவனங்களுக்கு இடையிலான வலையமைப்பு, நிறுவனங்களுக்கு இடையில் புலனாய்வாளர்களின் கூட்டமைப்பொன்றை உருவாக்குதல்.

### D - சட்ட மற்றும் கொள்கைத் திருத்தங்கள்

ஊழல் இல்லாதொழிக்கப்பட்ட நிலைபேறான சமூகமொன்றை உருவாக்குவதற்காக வலுவானதும் நெகிழ்வானதுமான சட்டங்களும் கொள்கைகளும் தேவைப்படுகின்றன. ஊழலை இல்லாதொழிப்பதற்கான நான்காம் உபாயமார்க்கத்தின் மூலம் ஏனைய உபாயமார்க்கங்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான சட்ட அடிப்படை பெற்றுக்கொடுக்கப்படுகின்றது. இலங்கையில் இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான புலனாய்வுகள் மற்றும் முறைப்பாட்டினை நெறிப்படுத்துவதற்கான சட்டங்கள் என்பன இரண்டு தசாப்தங்களாக மீளாய்வு செய்யப்படவில்லை. அதேவேளை தடுப்பு முறைகளை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான சட்டங்களும் வகுக்கப்படவில்லை என்பதால் சட்டரீதியான மற்றும் கொள்கை ரீதியான சட்டகங்கள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளன.

தேசிய செயற்பாட்டுத்திட்டமானது அது தொடர்பாக பின்வரும் முன்மொழிவுகளை முன்வைக்கின்றன.

D-1. இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுடன் சம்பந்தப்பட்ட சட்டங்களுக்கான திருத்தம், இலஞ்சச் சட்டம், சொத்துக்கள் பிரகடனச் சட்டம், இலஞ்ச ஆணைக்குழுச் சட்டம்.

D-2. ஊழல் தடுப்புத் தொடர்பான ஏனைய சட்டங்களுக்கான திருத்தம்.

விசாரணை ஆணைக்குழுச் சட்டம், சொத்துக்களை மீளக் கையகப்படுத்துதல், பணத்தூய்தாக்கல், தேர்தல்கள் சட்டம், MLA, தகவல்களை வழங்குவோர் மற்றும் குரலெழுப்புவோரைப் பாதுகாப்பதற்கான சட்டம்.

D-3. கொள்கைத் திருத்தங்கள்

கணக்காய்வுச் சட்டத்தினை வினைத்திறன்மிக்க வகையில் நடைமுறைப்படுத்துவது தொடர்பாக கொள்கை ரீதியான தீர்மானங்களை மேற்கொள்ளுதல், ஊழலுக்கு எதிரான ஏனைய சட்டங்களைத் திருத்துவதற்கான கொள்கைகளை வகுத்தல்.

D-4. சர்வதேச கடப்பாடுகளுடன் இசைவாக்கமடைதல்

UNCAC, OGP, பெங்களுர் கோட்பாடுகள், பெல்மோ உடன்படிக்கை.

E - நடைமுறைப்படுத்தல், மேற்பார்வை மற்றும் மதிப்பீடு

மேற்பார்வை மற்றும் மதிப்பீடு என்பதனை தேசிய செயற்பாட்டுத் திட்டத்தில் காணப்படுகின்ற நான்கு தூண்களையும் தாங்கியிருக்கும் உதவுகோலாக அறிமுகப்படுத்த முடியும். தேசிய செயற்பாட்டுத் திட்டம் தொடர்பாக மக்கள் விழிப்படைத்தல் வேண்டும். அதன் பயன்கள் மக்களுக்குக் கிடைத்தல் வேண்டும். அதன் பிரகாரம் இத்திட்டத்தில் மேற்பார்வை மற்றும் மதிப்பீட்டுக்கான பொறிமுறை காணப்படுதல் வேண்டும். உபாயமார்க்கங்களாக பயன்படுத்தப்படுவதற்கும் உரியகாலத்தில் இற்றைப்படுத்தப்படுவதற்கும் குறிப்பிட்ட உபாய மார்க்கங்களை நிறுவனங்களுடன் இணைக்க வேண்டுமென ஊழல் தடுப்பு உபாயமார்க்கங்கள் தொடர்பான 2013 கோலாலம்பூர் வழிகாட்டலின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. உத்தேச காலச் சட்டகங்களின் பிரகாரம் உள்நாட்டு மற்றும் சர்வதேச மட்டத்தில் முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துதல் தொடர்பாக செயற்பாட்டுத் திட்டத்தில் விஷேடமாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. தேசிய செயற்பாட்டுத் திட்டத்தின் ஒட்டுமொத்த தரம் தொடர்பாக கவனம் செலுத்தி செயன்முறைகளுக்கான மேற்பார்வை மற்றும் மதிப்பீடு என்பனவும் E உபாயமார்க்கத்தின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது.

மேற்பார்வை மற்றும் மதிப்பீட்டுத்திட்டத்தின் அடிப்படை நோக்கங்கள்

செயற்பாடுகளுக்கான முன்னேற்றத்தினை மேற்பார்வை செய்தல், முன்னேற்றத்தினை மதிப்பீடு செய்தல் மற்றும் மீள்மதிப்பீடு என்பன இதன்மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. இதனூடாக பொறுப்புவாய்ந்த நிறுவனங்களுக்கும் கொள்கை வகுப்பாளர்களுக்கும் சரியான தகவல்கள் வழங்கப்படுகின்றன. இதன் பிரதான நோக்கங்கள் பின்வருமாறு அமைகின்றன.

- தேசிய செயற்பாட்டுத்திட்டமானது உரிய காலசட்டகத்திற்குள் நோக்கங்களை நிறைவேற்றிக்கொண்டுள்ளதா என்பதனை மேற்பார்வை செய்தல்.
- ஊழல் தடுப்புத் தொடர்பாக நிறுவனசார் திட்டங்களை இடைக்கிடை மேற்பார்வை செய்தல்.
- திட்டச்செயன்முறைகளின் ஊடாக ஊழல் குறைவடைதல் தொடர்பாக மதிப்பீடு செய்தல்
- மீள்மதிப்பீட்டின் மூலம் செயற்பாடுகளை வலுவூட்டுவதற்காக வளங்கள் வழங்கப்படுதல்.

பின்வரும் விடயங்கள் செயற்பாட்டு திட்டத்தின் E உபாயமார்க்கத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- நடைமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை என்பவற்றுக்குத் தேவையான மாதிரிகளை நிறுவுதல்.
- நிறுவனசார் செயற்பாட்டுத்திட்டங்களை உரிய காலத்தில் சோதித்தல்.
- தேசிய செயற்பாட்டுத்திட்டத்திற்கான நடைமுறைப்படுத்தப்படுதலை உரிய காலத்தில் மதிப்பீடு செய்தல்.
- மேற்பார்வை மற்றும் மதிப்பீடு தொடர்பான ஆற்றல் விருத்தி.
- மாதிரிகள் மற்றும் அமைப்புகளை மதிப்பீடு செய்தல்.

### மேற்பார்வை மற்றும் மதிப்பீடு என்பவற்றுக்கான பொறிமுறை

செயற்பாட்டுத்திட்டம் உரியமுறையில் இயங்குகின்றதா என்பதனை ஆராய்வதற்கான பொறுப்பு மேற்பார்வை பொறிமுறைக்கு ஒப்படைக்கப்படுகின்றது.

தேசிய செயற்பாட்டுத்திட்டத்தினை நடைமுறைபடுத்துவது தொடர்பான இறுதிப் பொறுப்பானது ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சரவையைச் சார்ந்துள்ளது. திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களுக்கு போதிய வளங்களைப் பெற்றுக்கொடுப்பதற்கு அமைச்சரவையினால் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

தேசிய நேர்மைத்திறன் பேரவையானது ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட சுயாதீன நிபுணர்களைக் கொண்டமைந்துள்ளது. இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் தடுப்புப் பிரிவைச் சேர்ந்த ஒரு உத்தியோகத்தர் அதன் ஓர் உறுப்பினராக இருப்பார். தேசிய செயற்பாட்டுத்திட்டத்திற்கான மேற்பார்வையும் மதிப்பீடும் இப்பேரவையினால் மேற்கொள்ளப்படும்.

### தேசிய நேர்மைத்திறன் பேரவையின் அடிப்படை பொறுப்புகள்

- திட்டம் நடைமுறைப்படுத்தப்படுதல் தொடர்பாக மீளாய்வு செய்தல்.
- தொடர்புடைய நிறுவனங்களுக்கான அறிக்கைகளைப் பரிசோதித்து ஆறு மாதங்களுக்கு ஒருமுறை அமைச்சரவைக்கு அறிக்கையிடுதல்.
- மீளாய்வினை அடிப்படையாகக்கொண்டு அவதானிப்புகளையும் முன்மொழிவுகளையும் விதப்புரைகளையும் முன்வைத்தல்.
- தேசிய செயற்பாட்டுத்திட்டத்திற்கான செயற்பாடுகள் பற்றிய அவதானிப்புகளையும் விதப்புரைகளையவும் முன்மொழிவுகளையும் முன்வைத்தல்.
- பிரதான சுட்டிகளை அடிப்படையாகக்கொண்டு செயற்பாட்டுத்திட்டத்தின் செயற்பாடுகளை மீளாய்வு செய்து வடிவமைத்தல்.
- தேசிய செயற்பாட்டுத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதற்கான வரவுசெலவு நிறுவனங்களுக்கான மேற்பார்வை மற்றும் மாற்றங்களை மேற்கொள்ளுதல், விதப்புரை செய்தல் மற்றும் மேலதிக வளங்களை ஒதுக்குதல்.

தேசிய செயற்பாட்டுத்திட்டத்திற்கான உபாயமார்க்கங்களை நடைமுறைப்படுத்துதல் தொடர்பாக உள்ளூராட்சி, திட்டமிடல், கல்வி, நிதி, பொது நிர்வாகம் மற்றும் ஏனைய விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சுகளும் நிறுவனங்களும் பொறுப்புப் பார்த்துக்கொள்ளல் வேண்டும்.

தேசிய செயற்பாட்டுத்திட்டத்தின் மூலம் உத்தேசிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக நிறுவனசார் செயற்பாட்டுத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல், ஊழல் தடுப்பு குழுக்களை நிறுவுதல், நேர்மைத்திறன்மிகு உத்தியோகத்தர்களை நியமித்தல் மற்றும் முன்னேற்றத்தினை அறிக்கையிடுதல் தொடர்பாக நிறுவனத் தலைவர்களுக்கு பொறுப்பு ஒப்படைக்கப்படுகிறது.

தேசிய செயற்பாட்டுத்திட்டத்தின் செயற்பாடுகளுக்கான வசதிகளை வழங்குதல், சாத்தியவள மேம்பாடு, தொழில்நுட்ப ஆதரவு வழங்கப்படுதல், இணைப்பாக்க நடவடிக்கைகள் என்பவற்றை மேற்கொள்வதற்கான பொறுப்பு இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு

செய்வதற்கான ஆணைக்குழுவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. நிறுவனசார் செயற்பாட்டுத்திட்டத்தை இடைக்கிடை பரிசோதிக்கும் நடவடிக்கைகளை ஒவ்வொரு நிறுவனத்திலும் தாபிக்கப்பட்டுள்ள ஊழல் தடுப்புக் குழு மற்றும் தேசிய நேர்மைத்திறன் பேரவை ஒருங்கிணைந்து மேற்கொள்வதோடு தேசிய செயற்பாட்டுத்திட்டத்தை இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுடன் ஒருங்கிணைந்து தேசிய நேர்மைத்திறன் பேரவை பரிசோதிக்கும்.

(இலங்கையிலிருந்து இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்கான தேசிய செயற்பாட்டுத்திட்டம் 2019 - 2023ஐ அடிப்படையாகக்கொண்டு தயாரிக்கப்பட்டதொரு சுருக்க விபரம்).

விரிவான பார்வைக்கு : (https://sinhala.ciaboc.gov.lk/images/nap/NAP-BOOK-SIN.pdf)

# இணைப்புக்கள்

01. நிகழ்ச்சித்திட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் (படிவம்)
02. செயலமர்வு பற்றிய அறிக்கை
03. மதிப்பீட்டுப் படிவம்.

# இணைப்பு 1

CIABOC

“நேர்மையான தேசத்தை நோக்கி”
இலங்கையிலிருந்து இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்கான தேசிய செயற்பாட்டுத்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்

## அரச உத்தியோகத்தர்களுக்கான ஊழல் எதிர்ப்புப் பற்றிய ஒருநாள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

ஏற்பாடு இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுடன்

பத்தேகம பிரதேச செயலகம்

2020 மார்ச் 16 பத்தேகம பிரதேச செயலக கேட்போர்கூடத்தில்

### அமர்வுத் திட்டம்

(நிகழ்ச்சித்திட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் - படிவம்)

| நிகழ்ச்சித்திட்டத்தின் வரிசைப்படுத்தல் | | |
|---|---|---|
| 08.30-09.00 | பங்கேற்பாளர்களின் வருகை மற்றும் பதிவு | |
| 09.00-09.30 | ஆரம்ப அமர்வு | |
| **அமர்வுக்கான நோக்கங்கள்**<br>செயலமர்வின் நோக்கம் தெளிவுபடுத்தப்படுதல், பயிற்றுவிப்பாளர்களினதும் பங்கேற்பாளர்களினதும் நோக்கங்களுக்கு இடையில் ஒருங்கிணைவை ஏற்படுத்துதல் மற்றும் ஒட்டுமொத்த செயலமர்வின் பொருட்டு சாதகமான சூழலை உருவாக்கிக்கொள்ளல். | | |
| நேரம் | தொனிப்பொருள் | வளவாளர் |
| 9.00-09.10 | வரவேற்பு மற்றும் நோக்கம் தெளிவுபடுத்தப்படுதல் மற்றும் வளவாளர்கள் அறிமுகம் செய்யப்படுதல் | செயலமர்வின் ஏற்பாட்டாளர் |
| 9.10-9.20 | நேர்மைத்திறன்மிகு அரச சேவையின் பொருட்டு மேற்கொள்ளப்படும் பயணத்தில் அரச உத்தியோகத்தர்களுக்கு ஒப்படைக்கப்படும் பொறுப்பு | நிறுவனத் தலைவரின் அல்லது விசேட அதிதியின் சுருக்கமான சொற்பொழிவு |
| 9.20-9.30 | பங்கேற்பாளர்களை இனங்காணுதல் (பங்கேற்பாளர்களுடன் நட்புறவை வளர்த்துக்கொள்ளல்- ஆலோசனைகளைப் பார்க்கவும்) | |
| இரண்டாம் அமர்வு – ஊழலை இனங்காணுதல்<br>**அமர்வுக்கான நோக்கங்கள்**<br>ஊழல் என்றால் என்ன? (பல்வேறுபட்ட பொருள்கோடல்கள் மூலம்), ஊழலின் பல்வேறுபட்ட வடிவங்கள், ஊழலின் காரணமாக இழக்கப்படும் தேசிய சொத்தும் அதன் விளைவுகளும், ஊழலுக்கு எதிரான உலகளாவிய அணிதிரள்வு போன்ற விடயங்கள் தொடர்பாக பங்கேற்பாளர்களுக்குப் புரிதலை வழங்குதல். | | |

| | | |
|---|---|---|
| 9.30-10.30 | ஊழல், ஊழலின் விளைவுகள் மற்றும் ஊழலைத் தடுத்தல் பற்றிய சிறந்த உதாரணங்கள் | பயிற்றுவிப்பாளர் - 1 |
| 10.30-11.00 | தேநீர் இடைவேளை | |
| **மூன்றாம் அமர்வு – ஊழலுக்கு எதிரான இலங்கையின் அணிதிரள்வு**<br>**அமர்வுக்கான நோக்கங்கள்**<br>• ஊழலைத் தடுப்பதற்கான பொறிமுறைகள், ஊழலைத் தடுக்கும்போது அரச உத்தியோகத்தர்களுக்கு ஒப்படைக்கப்படுகின்ற பொறுப்புகள், ஊழலைத் தடுக்கும் சட்டதிட்டங்கள், இலஞ்ச ஆணைக்குழுவின் தத்துவங்களும் செயற்பொறுப்பும் தொடர்பாக பங்கேற்பாளர்களை வழிப்பூட்டுதல் | | |
| 11.00-12.00 | ஊழலைத் தடுக்கும் சட்டதிட்டங்கள் மற்றும் இலஞ்ச ஆணைக்குழுவின் தத்துவங்களும் பொறுப்புகளும் | பயிற்றுவிப்பாளர் - 2 |
| 12.30-13.30 | மதிய உணவு | |
| **நான்காம் அமர்வு – ஊழலை இல்லாதொழிக்கும் இலங்கையின் திட்டங்கள்**<br>**அமர்வுக்கான நோக்கங்கள்**<br>• நேர்மைத்திறன் தொடர்பாக விழிப்படைதல் மற்றும் நேர்மைத்திறனின் பெறுமதி தொடர்பாக கூருணர்வினை ஏற்படுத்துதல்.<br>• அன்பளிப்பு விதிகள் பற்றிய ஏற்பாடுகள் தொடர்பாக பங்கேற்பாளர்களை விழிப்பூட்டுதல் மற்றும் அது தொடர்பாக கருத்தாடலை உருவாக்குதல்.<br>• நலன்களுக்கு இடையிலான முரண்பாடு பற்றிய விதிகள் தொடர்பாக விழிப்பூட்டுதல் மற்றும் அது தொடர்பாக கருத்தாடலை உருவாக்குதல்.<br>• அரச சேவையில் நேர்மைத்திறனை ஏற்படுத்துவதற்குரியதாக காணப்படுகின்ற ஏற்பாடுகள் தொடர்பாக பங்கேற்பாளர்களை விழிப்பூட்டுதல்<br>• ஊழலுக்கு எதிரான தேசிய செயற்பாட்டுத்திட்டம் தொடர்பாக அடிப்படைப் புரிதலை ஏற்படுத்துதல். | | |
| 13.30-14.30 | நேர்மைத்திறன்மிகு அரச ஊழியரின் பொருளளவான பயன்பாடு | பயிற்றுவிப்பாளர் - 1 |
| **ஐந்தாம் அமர்வு - ஊழல் அபாயநேர்வு நிலைமைகளை இனங்காணுதல்**<br>• நிறுவனத்தில் காணப்படுகின்ற ஊழல் அபாய நேர்வு நிலைமைகளை இனங்காணுதல்<br>• இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்கான தேசிய செயற்பாட்டுத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக தூண்டுதலை ஏற்படுத்துதல். | | |
| 14.30-15.30 | நிறுவனத்தில் காணப்படுகின்ற ஊழல் அபாய நேர்வு நிலைமைகளை இனங்காணுதல் | பயிற்றுவிப்பாளர் - 1 |
| 15.30-16.00 | **இறுதி அமர்வு**<br>நிகழ்ச்சித்திட்டத்திற்கான மதிப்பீடு<br>நன்றி | |
| 16.00-16.30 | தேநீர் மற்றும் விடைபெறல் | |

# இணைப்பு 2

CIABOC

**இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் ஒழுங்கு செய்யப்படுகின்ற**

அரச உத்தியோகத்தர்களுக்கான ஊழல் எதிர்ப்பு பற்றிய ஒருநாள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

(2020.................) ஆம் திகதி (இடம்......................)

**01 அமர்வுகளின் ஊடாக நீங்கள் பெற்றுள்ள அறிவின் மட்டம்** (உங்கள் உடன்பாட்டினை உரிய பெட்டியினுள் அடையாளமிடவும)

| | விரிவுரைத் தலைப்பு | பலவிடயங்களை அறிந்துகொண்டே-டன் | சாதாரண அறிவைப் பெற்று-க்கொண்டேன் | ஓரளவு அறிவைப் பெற்றுக்கொண்டே-டன் | எந்த அறிவினையும் பெறவில்லை |
|---|---|---|---|---|---|
| 1 | ஊழலை இனங்காணுதல் மற்றும் ஊழலின் விளைவுகள் | | | | |
| 2 | ஊழலைத் தடுப்பதற்கான நடவடிக்கைமுறைகள் | | | | |
| 3 | நேர்மைத்திறன்மிகு அரச ஊழியரின் பொருளளவான பயன்பாடு<br>(அன்பளிப்பு விதிகள்,நலன்களுக்கு இடையிலான முரண்பாடு பற்றிய விதிகள் உள்ளடங்களாக.) | | | | |
| 4 | நிறுவனத்தில் காணப்படுகின்ற ஊழல் அபாய நேர்வு நிலைமைகளை இனங்காணுதல் | | | | |

**02 பின்வரும் கூற்றுக்கள் தொடர்பாக உங்கள் பதிலை பொருத்தமான பெட்டியினுள் அடையாளமிடவும்.**

| | விரிவுரைத் தலைப்பு | ஆணித்தரமாக உடன்படுகின்றே-றன் | உடன்படுகின்றே-றன் | உடன்படவும்-ில்லை எதிர்-்க்கவுமில்லை | நிராகரிக்கின்றே-றன் | ஆணித்தரமாக நிராகரிக்கின்றே-றன் |
|---|---|---|---|---|---|---|
| 1 | செயலமர்வின்போது விடயப்பொருள்கள் போதியளவில் உள்ளீர்க்கப்பட்டன. | | | | | |
| 2 | விடயப்பொருள்களின் உள்ளடக்கமானது எனது பின்னணி மற்றும் அனுபவம் என்பவற்றுடன் நன்கு தொடர்புபடுகின்றது. | | | | | |
| 3 | நிகழ்ச்சித்திட்டம் சிறந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. | | | | | |
| 4 | ஊழலைத் தடுப்பதற்காக நானும் பங்களிப்பு நல்க முடியும் என்ற நம்பிக்கை உருவானது | | | | | |
| 5 | வீடியோ நிகழ்ச்சிகள் பொருத்தமாக அமையும் வகையில் பயன்படுத்தப்பட்டிருந்தன. | | | | | |
| 6 | செயலமர்வில் வழங்கப்பட்ட துண்டுப்பிரசுரங்கள் முதலானவை பயன்மிக்கவை | | | | | |

**03 பின்வரும் விடயங்கள் தொடர்பாக உங்கள் உடன்பாட்டினைத் தெரிவிக்கவும்.**

| | விரிவுரைத் தலைப்பு | மிகச் சிறந்தது | நன்று | சாதாரணமா-னது | திருப்திகரம்-ற்றது | பலவீனமா-னது |
|---|---|---|---|---|---|---|
| 1 | விரிவுரை முறையியல்கள் | | | | | |
| 2 | வளவாளர்களும் அவர்களின் விரிவுரைகளும் | | | | | |
| 3 | மண்டப வசதிகள் | | | | | |
| 4 | உணவு மற்றும் உபசார நடவடிக்கைகள் | | | | | |
| 5 | நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக பங்கேற்பாளர்களிடம் காணப்பட்ட ஊக்கம் | | | | | |
| 6 | நிகழ்ச்சித்திட்டத்தின் ஒழுங்கமைப்பு நடவடிக்கைகள் | | | | | |
| 7 | நிகழ்ச்சித்திட்டத்தின் இணைப்பாக்க நடவடிக்கைகள் | | | | | |

**04 செயலமர்வின் காலப பகுதி**

மிக நன்று ☐ குறுகியது ☐ காலம் அதிகமானது ☐

**05 பங்கேற்ற அளவு**

போதுமானது ☐ போதுமானதல்ல ☐ அளவு விஞ்சியது ☐

**06 இச்செயலமர்விலிருந்து அகற்றப்பட வேண்டிய தலைப்புகள் உள்ளனவா? அவை யாவை?**

......................................................................................................................................

**07 புதிதாக சேர்க்கப்பட வேண்டுமென நீங்கள் கருதுகின்ற தலைப்புகள்/ தொனிப்பொருள்கள் யாவை?**

......................................................................................................................................

**08 இந்த நிகழ்ச்சித்திட்டத்தை முன்னேற்றுவதற்காக நீங்கள் முன்வைக்கும் முன்மொழிவுகள் யாவை?**

......................................................................................................................................

**09 இச்செயலமர்வின் மூலம் பெற்றுக்கொண்ட அறிவினைப் பயன்படுத்தி நீங்கள் என்ன செய்யலாம்?**

......................................................................................................................................

**10 இச்செயலமர்வு தொடர்பான உங்கள் ஒட்டுமொத்த வகைப்படுத்தல் யாது?**

மிகச் சிறந்தது ☐ மிக நன்று ☐ நன்று ☐ சாதாரணமானது ☐ பலவீனமானது ☐

# இணைப்பு – 03

CIABOC

**இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் ஒழுங்கு செய்யப்படுகின்ற**

அரச உத்தியோகத்தர்களுக்கான ஊழல் எதிர்ப்பு பற்றிய ஒருநாள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

(...........................மாவட்டம்)

## செயலமர்வு அறிக்கை

| விரிவுரைத் தலைப்பு | |
|---|---|
| திகதி | |
| இடம் | |
| நிகழ்ச்சித்திட்ட ஏற்பாட்டாளர் / வசதியளிப்பவரின் பெயர் | |
| பயிற்றுவிப்பாளர் - 1 | |
| பயிற்றுவிப்பாளர் - 2 | |
| பயிற்சிபெற்றோர் எண்ணிக்கை | |
| செயலமர்வின் ஒட்டுமொத்தச் செலவு | |
| பங்கேற்பாளர்களால் எழுப்பப்பட்ட விசேட வினாக்கள்/ கருத்துக்கள் | |
| பங்கேற்பாளர்களால் முன்வைக்கப்பட்ட விசேட வேண்டுகோள்கள் | |
| பங்கேற்பாளர்களிடம் காணப்பட்ட ஊக்கம் | |
| தேசிய செயற்பாட்டுத் திட்டம் தொடர்பாக பங்கேற்பாளர்களிடமிருந்து கிடைக்கப்பட்ட பதிற்செயற்பாடுகள் | |
| செயலமர்வு தொடர்பாக பயிற்றுவிப்பாளரின் குறிப்புகள் | |

*கவனிக்கவும்.
முன்கூட்டிய மதிப்பீட்டு வினாக்கொத்து, பின்னூட்டல் படிவங்கள், கையொப்ப இடாப்பு மற்றும் செயலமர்வுக்கான 05 புகைப்படங்களுடன் சுருக்கமான குறிப்பொன்றை இந்த விண்ணப்பத்துடன் மின்னஞ்சல் மூலம் CIABOC விற்கு அனுப்பவும்.

திகதி :..........................................
கையொப்பம் :..........................................
பெயர் :..........................................

“……………………..கூலிபெறாமல் இங்கு வேலை செய்யக்கூடாது” என்று எல்லோருக்கும் அறிவித்தான். ஒவ்வொரு வாயிலிலும் பதினாறு நூராயிரம் கஹபணமும், பலவிதமான உடைகளும், ஏராளமான அணிகளும், உணவு வகைகளும், பானங்களும், நறுமண மலர்களும், சர்க்கரை போன்றவைகளையும், வாயிலில் இடுவதற்கான ஐந்து வாசனைப் பொருட்களையும் வைக்குமாறு அரசன் கட்டளையிட்டான். “விரும்பிய அளவு வேலை செய்து இஷ்டம்போல் வேண்டியதை இதிலிருந்து அவர்கள் எடுத்துக்கொள்ளட்டும்” என்ற அரசனுடைய உத்தரவுக்கிணங்க தொழிலாளர்கள் தமது கூலியைப் பெற்றுக்கொண்டனர்……..” (மகாவம்சத்தின் முப்பதாம் அத்தியாயம்)

துட்டகைமுனு மாமன்னன் ஸ்வர்ணமாலி ஸ்தூபத்தை நிர்மாணிப்பதற்காக தமது உழைப்பினை வழங்கிய தொழிலாளர்களுக்கு கூலி செலுத்தியுள்ள விதமே மேற்படி பந்தியில் விபரிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் தொழிலாளர்கள் தாம் ஆற்றிய பணிக்கான கூலியை தாமாகவே தீர்மானித்துள்ளனர். அவர்களால் தீர்மானிக்கப்பட்ட கூலிக்காக மன்னரினால் விகாரை வளாகத்தில் ஆங்காங்கே வைக்கப்பட்டிருந்த பணம் மற்றும் ஏனைய பொருட்களை அவர்கள் தாமாகவே பெற்றுக்கொண்டுள்ளனர். ஸ்தூபத்தின் நிர்மாணப் பணிகள் முடியும் வரை இச்சுயமதிப்பீடும் கூலியும் பெற்றுக்கொள்ளப்படுவது இடம்பெற்றுள்ளன.

அத்தகைய செயன்முறையொன்றை இடையறாது பேணிச் செல்லும் அளவிற்கு அப்போதைய இலங்கையர்கள் நேர்மைத்திறன்மிக்கதாக பணியாற்றியுள்ளனர் என்பது இதன் மூலம் தெளிவாகின்றது.

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு ஆனது அக்காலத்தில் உயிர்வாழ்ந்த மனிதர்களின் நேர்மையின் மூலம் உற்சாகம் பெற்று விரிவான கலந்துரையாடலின் ஊடாக ஊழலை இல்லாதொழிப்பதற்கான செயற்பாட்டுத் திட்டத்தைத் தயாரித்துள்ளது.

தேசிய செயற்பாட்டுத் திட்டத்தின் ஒரு பிரதான அம்சமாகிய **“விழுமியம்சார் கல்வி மற்றும் சமுதாயத்தை இணைத்தல்”** பற்றிய நேர்மைத்திறன்மிகு பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டத் தொடரின் பொருட்டு மூன்று கையேடுகள் வெளியிடப்பட்டுள்ளன. அவையாவன,

1. **மூன்று நாள் பயிற்சி நிகழ்ச்சித்திட்ட வழிகாட்டல் கோவை** – நேர்மைத்திறன்மிகு பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவிப்பதற்கான மூன்று நாள் நிகழ்ச்சித்திட்டத் தொடரின் பயிற்றுவிப்பாளர்கள், வளவாளர்கள் மற்றும் ஏற்பாட்டாளர்கள் என்போருக்கான வழிகாட்டல்கள்.

2. **வளக் கையேடு** - நேர்மைத்திறன்மிகு பயிற்றுவிப்பாளர்களின் விடயசார் அறிவினை மேம்படுத்துவதற்கான விடயப்பொருள்கள்.

3. **ஒரு நாள் பயிற்சி நிகழ்ச்சித்திட்ட வழிகாட்டல் கோவை** – ஒரு நாள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கான வழிகாட்டல்கள், துண்டுப் பிரசுரங்கள் மற்றும் பயிற்சிக் கருவிகள்.

CIABOC

9 786245 040179

අල්ලස් හෝ දූෂණ චෝදනා විමර්ශන කොමිෂන් සභාව
இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு
COMMISSION TO INVESTIGATE ALLEGATIONS OF BRIBERY OR CORRUPTION